KALKI 24.4.88 ரூ. 2

# கல்கி



# எளிதில் கைவிட்டு விடும் பாலிஷ்களை விட மேன்மையான டச்வுட் உங்கள் அழகிய மர ஃபர்னிச்சர்களை தொடர்ந்து பாதுகாக்கும் விதம்.

**ஆம், புதிய டச்வுட் பாலியூரத்தேன் ஃபினிஷ் உங்கள் மர ஃபர்னிச்சர்களுக்கு கீறல்கள், கறைகளிலிருந்து சிறப்பான பாதுகாப்பு அளிக்கிறது. இனி உங்கள் அழகிய ஃபர்னிச்சர்களுக்கு அடிக்கடி பாலிஷ் செய்யவேண்டிய கவலை இல்லை.**



**பாலிஷ்களுக்கு வலிமை போதாது**

பாலிஷ்கள் பூசிய உடன் ஃபர்னிச்சர்களை பளபளக்க செய்கிறது. ஆனால் இந்த பளபளப்பு நீடிப்பதில்லை. இதற்கு காரணம் பாலிஷ் மரத்தின்மீது மிகவும் மெல்லிய பூச்சாக படிகிறது. இதனால் காபி, டீ, தண்ணீர் போன்றவை சிந்தியவுடன் கறைகள் விழுகின்றன. கீறல்களும் எளிதில் விழுகின்றன. உங்கள் மர ஃபர்னிச்சர்கள் எழில் குலைந்து காட்சி அளிக்கின்றன.

**டச்வுட்: பாலியூரத்தேன் வலிமை**

'டச்வுட்'டில் மர பூச்சுகளுக்கு வலிமையூட்டும் பாலியூரத்தேன் என்கின்ற பொருள் உள்ளது. இது மரத்தின் இயற்கை எழிலுக்கு மெருகேற்றுவதுடன் மரத்தை விடாப்பிடியாக இறுகப் பற்றிக் கொள்கிறது. சுடு நீரோ, குளிர் பானமோ சிந்தினாலும் கறை படாமல் காக்கின்றது எளிதில் கீறல்கள் விழாமல் தடுக்கிறது. பூசிய சில நாட்களில் மங்கிவிடும் பாலிஷ்போல் இல்லாமல், பல்லாண்டுகள் உங்கள் ஃபர்னிச்சர்களை பொலிவுற வைத்திருக்கிறது.

**பிரஷ் கொண்டு பூசலாம். நிதானமாக உலர்ந்தாலும், உறுதியான பாதுகாப்பு.**

சாதாரண பெயிண்டைப் போல டச்வுட்டை பிரஷ் கொண்டு பூசலாம். எளிதான இந்த பூச்சு முறையினால், உங்கள் ஃபர்னிச்சர்களுக்கு டச்வுட்டை எந்த பெயிண்ட்டரைக் கொண்டும் பூச வைக்கலாம். பெயிண்டைப் போல இருப்பதினால் மர வேலைப்பாடுகளின் மூலை முடுக்குகளில் எல்லாம் ஊடுருவிப் படிகிறது டச்வுட்.

பாலிஷ்களைப் போல் அல்லாமல் டச்வுட் உலர சற்று அதிக நேரம் பிடிக்கும். ஆனால் கதவு, ஜன்னல்களுக்கு பூசும் பெயிண்டை விட விரைவாகவே உலர்ந்து விடுகிறது. இவ்வாறு உலர்வதினால் டச்வுட் இறுக படிந்து கவசம் போன்று ஃபர்னிச்சர்களை பாதுகாக்கிறது.

பாலிஷை விட சற்றே விலை கூடுதலானாலும், டச்வுட்டின் நீண்ட ஆயுள் உங்கள் செலவுக்கு மேலாகவே ஈடு செலுத்தி விடுகிறது. ஆம், டச்வுட் பாலிஷ்களை விடப் பன்மடங்கு காலம் நீடித்திருக்கும் உயர்ந்த ஃபினிஷ்.

**இரு வித ஃபினிஷ்கள்: பள பள கிளாசி, மினுக்காத மேட்.**

பாலிஷ்களைப் போலன்றி, டச்வுட் இருவித மெருகுகளிலும் கிடைக்கிறது: பள பள கிளாசி ஃபினிஷ், மினுக்காத மேட் ஃபினிஷ். மேலும் டச்வுட் ஸ்டெயின்கள் உபயோகித்து சாதாரண மரத்தையும் வால்நட், ரோஸ்வுட் உட்பட மூன்று வித சிறப்பு வண்ணங்களில் பொலிவுற செய்யலாம்.

**எங்கும் கிடைக்கும் டச்வுட்.**

எல்லா ஏஷியன் பெயிண்ட்ஸ் விற்பனையாளர்களிடமும் டச்வுட் கிடைக்கும்.

ஒருமுறை உபயோகித்து பாருங்கள். டச்வுட் உங்கள் ஃபர்னிச்சர்களின் எழிலை பாதுகாப்பதின் மேன்மையை.






**TOUCH WOOD**

மரத்தின் இயற்கை எழிலுக்கு நிரந்தர பாதுகாப்பு.

GBM/9349/R3/TAM

ஏஷியன் பெயிண்ட்ஸ்

## புகைபிடிக்காத தினம்:

உலக சுகாதார தினத்தின் ஓர் அங்கமாக ஏப்ரல் ஏழாம் தேதி புகைபிடிக்காத தினமாக அனுசரிக்கப்பட்டது. அன்றைய தினம், சென்னை, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில், 'ஹோட்டல் கண்பத்'துக்கு எதிரே ஒரு பெட்டிக் கடையில், மாலை சுமார் ஐந்து மணிக்கு நிருபரும், புகைப்படக்காரரும் ஆஜரானார்கள். பெட்டிக் கடையில் 'சிகரெட் வாங்கியவர்களிடம், 'இன்று நோ ஸ்மோக்கிங் தினம் என்று உங்களுக்குத் தெரியுமா?' என்று பேச ஆரம்பித்து அவர்களுடைய கருத்துக்களைப் பெற்றார்கள்:


● ஸ்ரீனிவாசன்

# "சிகரெட் வியாபாரத்தைப் பாதிக்கவில்லை"

சந்திரன்: "இன்றைக்குப் புகை பிடிக்காத நாள் என்றே எனக்குத் தெரியாது; என்றால் புகை பிடிப்பதை நிறுத்த முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை; ஸாரி ... என்னைத் தடுக்காதீர்கள்."

ஆட்டோ டிரைவர் ரவூப்: "நான் கடந்த சில மாதங்களாகவே சிகரெட் பிடிப்பதைப் பாதியாய்க் குறைத்துக் கொண்டு விட்டேன். காரணம், விலை ஏறிவிட்டதுதான். ஆனால் அதற்குப் பதிலாய்ப் பீடி பிடிக்கிறேன். சில சமயம் சிகரெட் பழக்கத்தை விட்டு விட வேண்டும் என்று நினைப்பதுண்டு. ஆனால் எப்படி நிறுத்துவது என்றுதான் தெரியவில்லை!"

மோகன்: "ஹலோ... ஃப்ரெண்ட், நான் ஒரு சேல்ஸ் ரெப். என் வேலை எத்தனை டென்ஷனானது என்பது உங்களுக்கே தெரியும். அப்புறம் சிகரெட் பிடிக்காமல் என்ன செய்ய? நீங்கள் என்ன, என் அப்பாவே வந்து 'சிகரெட் பிடிக்காதே' என்றாலும் சரி, என்னால் பிடிக்காமலிருக்க முடியாது. ஸோ... டோண்ட் மிஸ்டேக் மீ!"

அப்பன்: (ஓய்வு பெற்ற அரசு ஊழியர் — வாங்கிய சிகரெட்டைப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டே) "இப்போது மட்டுமில்லை; இன்று இரவு வரை சிகரெட் பிடிக்க மாட்டேன். போதுமா?"

ஸ்ரீனிவாசன்: (இரண்டு முறை இழுத்திருந்த சிகரெட்டைக் கீழே போட்டு அணைத்தவாறே): "ஓ.கே! இப்போதே இதைப் போட்டு விடுகிறேன், சரி தானே?"


ஜோசப் (கடைக்காரர்): இன்றைக்குப் புகைபிடிக்காத தினம் அனுஷ்டிக்கப்படுவது தெரியும். ஆனால் சிகரெட் வியாபாரம் ஒண்ணும் பாதிக்கப்படலே!



● மோகன்




● ஜோசப்




●அமெரிக்காவில் மிக அதிகமான மரணங்கள் நேர்வது, புகை பிடிப்பதனால் தான் என்று அரசாங்கப் புள்ளி விவரம் எடுத்துக் காட்டுகிறது. ஒவ்வொரு ஆண்டும் 3,50,000 அமெரிக்கர்கள் புகை பிடிப்பதால் தொடர்பான மரணங்களைச் சந்திக்கின்றனர். ஒப்பு நோக்க, இதர காரணங்களால் ஏற்படும் மரணங்கள் மிகவும் குறைவு.

தொகுப்பு: எஸ். சந்திரமௌலி

படங்கள்: சோமு



மனித நாகரிகத்தின் ஆரம்பமே ஆற்றங்கரைகளாகத்தான் இருந்தன. இன்றைக்கு எல்லாமே தலைகீழ். வெள்ளாறு கடலில் கலக்கும் முகத்துவாரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் வசிக்கும் சுமார் பத்தாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த இருபத்தைந்தாயிரம் மீனவர்கள், தங்கள் கட்டுமரங்களைக் கடலில் செலுத்த முடியாத நிலை. ஒவ்வொரு கணமும் உறுமிக் கொண்டேயிருக்கும் கடலலைகளைத் தங்கள் வாழ்க்கையின் சவாலாக ஏற்றுக் கட்டுமரங்களைத் தள்ளித் தள்ளி உரமேறிய கரங்களும் அந்த வைரம் பாய்ந்த உடல்களும் இன்று தங்கள் வலைகளோடு சேர்த்து வாழ்க்கையையும் மூட்டை கட்டி வைத்துவிட்ட அவலம். காரணம் மணல்!

நேரில் சென்றோம். பாதிக்கப்பட்ட மீனவ கிராமங்களில் முக்கியமானதாக இருக்கும் சின்னூர் கிராமத்தின் மீனவர் கூட்டுறவுச் சங்கத் தலைவராய் இருக்கும் குமரவேல் என்ற இளைஞர் நிலைமைகளை நேரடியாக விளக்கினார்...

"பார்த்தீங்களா சார், அதுதான் பரங்கிப் பேட்டைத் துறைமுகம். இங்கிருந்து மூன்று கிலோ மீட்டர் தூரம்தான். அதற்கான கலங்கரை விளக்கம் எங்கள் ஊரில் இருக்கும் இதுதான். கொல்லி மலையில் உற்பத்தியாகும் வெள்ளாறுதான் இங்கே வந்து கடலில் கலக்கிறது. முன்பெல்லாம் ஆறு ஒரு நேர்கோடு மாதிரி ஓடிக் கடலில் கலந்து கொண்டிருந்ததால் பிரச்னையே இல்லை. அதோடு அந்தக் காலத்தில் இங்கிருந்த போர்த்துக்கீசியரும் சரி, ஆங்கிலேயர்கள் — பிரெஞ்சுக்காரர்களும் சரி, அப்போது இந்தத் துறைமுகத்தை நிறையப் பயன்படுத்திக் கொண்டிருந்ததால் — ஆறு கடலில் சங்கமமாகும் போது, முகத்துவாரத்தில் ஏற்படும் மணல் அடைப்பை அவ்வப்போது சுத்தப்படுத்திக் கொண்டே



# கடலுக்குப் போகாத கட்டுமரங்கள்...

இருப்பார்கள். எங்கள் கட்டு மரங்கள் கரையிலிருந்து சுலபமாகக் கடலுக்குள் இறங்கி விடும்!

''இப்போது அப்படியில்லை. ஆறும் தனது நேர்க்கோட்டை விட்டு விட்டுக் கோணலாக 'ட' மாதிரி வளைந்து கடலுக்குள் சங்கமமாவதால் சுமார் இரண்டு கிலோ மீட்டர் நீளத்திற்குக் கடற்கரையோரம் முழுவதும் மணல் மேடாகி விட்டது. மணலில் எப்படிக் கட்டுமரங்களைத் தள்ளிக் கொண்டு கடலுக்குள் போக முடியும்? அலைகளை எதிர்த்துப் போராடச் சக்தி பெற்ற எங்களால் இந்த மணலை எதிர்த்துப் போராட முடியவில்லை.

''இருந்தாலும் பிழைப்பு நடக்க வேண்டாமா? அதனால் கஷ்டப்பட்டுப் போகத்தான் செய்கிறோம். எப்படி? இரண்டாள் தள்ள வேண்டிய கட்டுமரத்தைப் பத்துப் பேர் சேர்ந்து தள்ளுகிறோம். கடற்கரை ஓரமாகவே சென்று மணல் மேட்டைச் சுற்றிக் கொண்டு செல்கிறோம். அதற்குள் வெள்ளி முளைத்து விடிந்து விடுவதால் சரியாக மீன்களும் கிடைப்பதில்லை. கிடைக்கிற சிறிது மீன்களையும் இரண்டு பேருக்குப் பதில் பத்துப் பேர் பங்கு போட்டுக் கொண்டால் என்ன கிடைக்கும்? அரை வயிறு கூட நிரம்பாது. அதோ பாருங்கள்... கடலிலிருந்து வருகிறார் முனுசாமி. அவரை நீங்களே கேளுங்கள்...

''என்னங்க முனுசாமி, இதுதான் இன்றைக்குக் கிடைத்த மீனா? எவ்வளவு ரூபாய் கிடைக்கும்?''

''இது எறாலுங்க. ஐம்பது ரூபாய்க்கு விக்கும்.

''தினமும் ஐம்பது ரூபாய்னா நல்ல வருமானம்தானே, முனுசாமி?''



• குமரிவேல்: ''இப்போது வேறு மாதிரி சிந்திக்கிறோம்...''



• நாராயணசாமி: ''நான் சின்னப் பையனா இருந்தப்போ...''

''வாஸ்தவம்தாங்க... ஆனா என்னோட சேர்ந்து கட்டுமரம் தள்ளின இன்னும் நாலு பேர் இருக்காங்களே... அவுங்க வயித்தைக் கடல்லயா தள்ள முடியும்?''

''சரி, இந்த மணல் மேட்டுக்கும் சரியா மீன் கிடைக்காததுக்கும் என்னங்க சம்பந்தம்? மணல் மேடு இருக்கிறதால கட்டுமரத்தைத் தள்ள முடியலே; கஷ்டமாயிருக்கு — ரொம்பவும் கஷ்டப்பட்டுச் சுத்திக்கிட்டுப் போக வேண்டியிருக்கு. அவ்வளவுதானே, முனுசாமி?''

''நெலத்தில வெதை வெதைக்கிறதுக்குப் பருவம் இருக்கிற மாதிரிக் கடல்ல வலே வீசறதுக்கும் ஒரு பருவம்... ஒரு நேரம் இருக்குங்க. விடிகாலே நேரம் இருக்கே... அதுதாங்க மீன் கிடைக்கும் சரியான நேரம். அந்த நேரம் தவறினா ஒண்ணுமே அகப்படாது. இப்படிச் சுத்திக்கிட்டுப் போறதால எவ்வளவுதான் நேரத்திலேயே புறப்பட்டுப் போனாலும் அந்த நேரத்துக்குப் போக முடியறதில்லே. ஏன்னா, எல்லா நாளும் ஒரே இடத்திலேயே மீன் கிடைக்காதே! ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடத்துக்குப் போகணும்!'' என்றார் முனுசாமி.

''சொன்னா நம்ப மாட்டீங்க சார்... இருபது இருபத்தஞ்சு வருஷங்களுக்கு முன்னாடி — நானெல்லாம் சின்னப் பையனா

* ஒரு காலத்தில் திருவிழா மாதிரி இருந்த கடற்கரை...



இருந்தப்போ — இத்தனை மணல் கிடையாது. அதனாலே என்னைத்த மூணு நாலு பசங்களாச் சேர்ந்து... சும்மா வெளையாட்டுத் தனமாக் கட்டுமரத்தைத் தள்ளிக்கிட்டுப் போவோம். திரும்பும்போது நூறு இருநூறுன்னு விலை போற மாதிரி மீனோட வருவோம். அப்படிப்பட்ட கடலுக்குத்தான் இப்போ எங்களால போக முடியலே..." என்றார் நாராயணசாமி.

"ஒரு வருஷத்துக்குப் பத்தாயிரம் பதினைஞ்சாயிரம்னு மீன் வியாபாரத்திலே சம்பாதிச்ச கையுங்க இது. இங்கே கட்டுமரங்க வந்து கரை சேரும்போதே விலை பேச வியாபாரிங்க காத்துக்கிட்டிருப்பாங்க... எப்பப் பார்த்தாலும் திருவிழா மாதிரி ஜனங்க புழங்கின கரைங்க இது. இப்போ... அம்மா மடிய மணலு மூடிடுச்சுங்களே... எங்க வயித்திலே



• அபரஞ்சி: "அம்மா மடி மூடிப் போச்சே...!"

மண்ணு வுழுந்திடுச்சுங்களே..." என்று புலம்பினார் எதிர்ப்பட்ட அபரஞ்சி என்ற பெண்மணி.

"உங்கள் கஷ்டம் புரியுதுங்க குமரவேல். இதற்கு உங்கள் மீனவர் சங்கம் எதுவும் செய்யவில்லையா?"

"சங்கத்தில் என்ன சார் செய்ய முடிகிறது! வீடு கட்டித் தந்துள்ளது சங்கம். எப்போதாவது கட்டுமரங்கள், வலைகள் வாங்க வங்கிக் கடன் என்று சங்கத்தால் வாங்கித் தர முடிகிறது. வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை."

"அனைவரும் ஒற்றுமையாக இருந்து அரசிடம் வற்புறுத்தலாமே?"

"மீனவர் சங்கத்தில் கட்டுமரங்களை வைத்துக் கொண்டு மீன் பிடிக்கும் சாதாரண மீனவர்கள் மட்டுமே உறுப்பினர்கள் இல்லை; இயந்திரப் படகுகள் வைத்துக் கொண்டு மீன் பிடிப்பவர்களும் உறுப்பினர்கள்தான். இருந்தாலும் அவர்கள் பணக்காரர்கள் என்பதால் எங்களோடு அவ்வளவாக ஒட்டுவதில்லை. இந்நிலையில் ஏழைகளான

• முனுசாமி: "இன்னைக்குக் கிடைச்சது இதுதான்..."



எங்களால் என்ன செய்ய முடியும்?''

''இந்த மணல் அடைப்பு என்பது இயந்திரப் படகு வைத்திருப்பவர்களையும் தானே பாதிக்கும்?''

''இந்தப் பாதிப்பு அவர்களுக்குக் கடுமையானதாக இல்லை. மேலும் இந்த மணல் அடைப்பால் எங்களைப் போன்றவர்கள் மீன் பிடிக்க நீண்ட தூரம் செல்ல முடியாமலிருப்பதால் இயந்திரப் படகுக்காரர்களுக்கு அதிகமாக மீன் கிடைக்குமே! அதுவும் அவர்கள் ஒத்துழைக்காததற்கு ஒரு காரணம்!''

''சரி, உங்கள் அளவில் நீங்கள் என்னதான் முயற்சி எடுத்திருக்கிறீர்கள்?''

''நாங்கள் எங்கள் குறையைச் சொல்லி மனுக் கொடுக்காத அமைச்சர்களும் இல்லை; அரசு அதிகாரிகளும் இல்லை. பல ஆண்டுகளாகக் கொடுத்துக் கொண்டே இருக்கிறோம். பயன்தான் இல்லை.''

''மீன்வளத்துறை ஒன்று இருக்கிறதே, அது ஒன்றும் செய்யவில்லையா?''

''அந்தத் துறை எதற்காக இருக்கிறது என்பதே எங்களுக்குப் புரியவில்லை. மீனவர்களுக்கும் அந்தத் துறைக்கும் சம்பந்தமே இல்லாத மாதிரிதான் அது நடந்து கொள்ளுகிறது. பாண்டிச்சேரி அரசு எவ்வளவோ பரவாயில்லை. இயந்திரப் படகுகள் வாங்கப் பலருக்கும் கடன் கொடுக்கிறது. நம் அரசு அதுபற்றிச் சிந்தித்ததாகவே தெரியவில்லை. அதாவது பணக்காரர்களுக்குத்தான் அரசு கடன் வசதி செய்கிறது; ஏழைகளுக்குக் கொடுக்கப்படுவதில்லை. அதனால் இப்போது ஒரு புதுமாதிரி யோசித்துக் கொண்டிருக்கிறோம்...''

''என்ன அது?''

''கடலை நம்பி வாழ முடியாத நிலையில் இனி நாங்கள் என்ன செய்வது? அனைவருமே இனி வேறு தொழில்களுக்குத்தான் போட்டியிட வரவேண்டும். இந்நிலையில்கட்டுமரத்தோடும் கடலோடும் மட்டுமே பழக்கப்பட்ட எங்களால் வேறு தொழில்களில் உள்ள மற்றவர்களோடு எப்படிப் போட்டி போட முடியும்? அதனால் சலுகை வேண்டும். 'இப்போதுள்ள பிற்படுத்தப்பட்டோருக்கான சலுகை எங்களுக்குப் போதாது. எனவே, எங்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேருங்கள்' என்றுதான் போராட வேண்டும். வேறு வழி?'' என்றார் குமரவேல்.

உழைப்புக்கு அஞ்சாத வீர உள்ளம் கொண்ட மீனவர்களிடம் இன்று ஒரு குறுக்குவழிப் போராட்டத்திற்கான விதை முளைவிட ஆரம்பித்திருக்கிறது என்றால், அதற்கு மெத்தனமான நமது அரசாங்கம் தான் முதல் குற்றவாளி என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

— **இளங்கோவன்**

அட்டை வண்ணப்படமும், மற்ற படங்களும்: **கே. வி. ஆனந்த்**

## அடுத்த இதழில்...

**ஆந்திர கிராமங்களில் அரும் பணியாற்றி வரும் அணுவிஞ்ஞானி பரமேஸ்வர ராவ் கூறுகிறார்:**

''நாம் ஒவ்வொருவருமே காந்திதான்!''



**இவர்,**

* பொட்டல் காட்டைப் பொன் விளையும்பூமியாக்கியதுஎப்படி?
* கிராம மக்களைத் தன்னிறைவும் தன்னம்பிக்கையும் பெறச் செய்தது எப்படி?
* கிராமப் பெண்களைத் தலை நிமிர்ந்து சுதந்திரமாக வாழச் செய்தது எப்படி?

**— அடுத்த இதழில் படியுங்கள்.**

# தில்லி அரசாங்கத்தில் சில சூத்திரதாரிகள்...



> "பிரதமருக்குக் கூச்ச சுபாவம் அதிகம்..."
>
> — மணி சங்கர ஐயர் (பிரதமரின் பத்திரிகை ஆலோசக இணைச் செயலர்)

**பி**ரதமர் ராஜீவ் காந்திக்கு ரொம்பவும் நெருக்கமானவர்; பள்ளிக் காலத்துத் தோழர் என்று சொல்லப்படும் மணி சங்கர ஐயர் ஒரு சுவாரசியமான வடக்கு – தெற்குக் கலவை.

திருவையாறுக்கு அருகிலிருக்கும் கார்குடி என்ற கிராமத்தைச் சேர்ந்த சங்கர ஐயர் பிழைப்பைத் தேடி லாகூருக்குச் சென்று அங்கு மிக வெற்றிகரமாக சார்டர்ட் அக்கவுண்டெண்டாகத் தொழில் நடத்துகையில் வெங்கட சுப்பிரமணியன் என்ற இன்றைய மணி சங்கர ஐயர் அங்கு பிறந்தார்.

இந்தியா சுதந்திரம் அடைந்து, பாகிஸ்தான் பிரிந்தபோது, சங்கர ஐயர் குடும்பம் அகதிகளாகப் புறப்பட்டுத் தில்லி வந்து சேர்ந்தது. தில்லியிலும் வெகு விரைவில் சங்கர ஐயரின் தொழில் வெற்றிகரமாக விஸ்தாரமாயிற்று. ஆனால் சற்றும் எதிர்பாராமல் மணி, பன்னிரண்டு வயதாக இருக்கும் போது, சங்கர ஐயர் ஒரு விமான விபத்தில் இறந்து போனார்.

அவருடைய இறப்பு மிகப்பெரிய அதிர்ச்சியாக இருந்தாலும் அவருடைய மனைவி மிக தைரியமாகப் பொறுப்பை ஏற்றுக் குழந்தைகளை முன்னுக்குக் கொண்டு வந்தார். டேராடூன் பள்ளியில் ஹாஸ்டலில் தங்கிப் படித்துக் கொண்டிருந்த பிள்ளைகளின் படிப்புக் கெடக் கூடாது என்கிற எண்ணத்திலும், அதே சமயத்தில் ஹாஸ்டல் செலவைக் குறைக்க எண்ணியும் பிரத்தியேக அனுமதி பெற்று, அவருடைய அம்மா டேராடூனில் ஒரு வீடு பிடித்துத் தங்கிப் படிக்க வைத்தாராம். தாய்மொழி கற்றுக் கொண்டே ஆக வேண்டும் என்கிற கருத்தில் பிள்ளைகளுக்குத் தாமே தமிழ் மொழியைப் பள்ளியில் ஒரு பாடமாக ஏற்க வைத்துக் கற்றுக் கொடுத்தாராம். சீனியர் கேம்பிரிட்ஜில் தமிழை ஒரு பாடமாக எடுத்து, மணிமேகலை, சிலப்பதிகாரத்தைக் கூட முறையாகப் படித்தாராம் மணி.

"வீட்டில் தமிழ் பேசுகிற வழக்கம் உண்டா?"

"மனைவி பஞ்சாபி. வீட்டில் தமிழ் பேசும் பழக்கமே விட்டுப் போய் விட்டது. அம்மாவுடன் பேசுவேன். மூப்பனாருடன் பேசுவேன். தமிழ் அதிகம் பேசாவிட்டாலும் பேசும் போது சந்தோஷமாக இருக்கிறது. முன்பெல்லாம் அம்மா கட்டாயமாக விடுமுறைக்குத் தமிழகத்திலுள்ள கிராமத்துக்கு அழைத்துச் செல்வார். இப்போது கிராமத்தில் ஒரு குடும்பம் மட்டும்தான் இருக்கிறது. மற்ற எல்லோரும் உலகம் முழுதும் பரவி இருக்கிறோம். இப்போதைக்கு என் தெற்கத்தியக் கலாசாரத் தொடர்பு என்பது என்னுடைய பெண்கள் பரத நாட்டியம் கற்பதுடன் நிற்கிறது."

"குழந்தைகளுக்குத் தமிழ் தெரியுமா?"

"தெரியாது. மொழியின் இழப்பு ஒரு பெரிய இழப்பு என்று உணர்கிறேன். மொழியின் மூலம்தான் கலாசாரத்தின் தொடர்பு

இருக்கும்; வீட்டில் இப்போது பண்டிகைகளைக் கூட கொண்டாடுவது இல்லை. நான் தமிழன் என்று சொல்லிக் கொள்வது எனக்குச் சந்தோஷமாக இருந்தாலும் எந்த அளவிற்குத் தமிழ் நாட்டின் பிரதிநிதி என்று எனக்குச் சொல்லத் தெரியவில்லை."

"பிரதமர் ராஜீவ் காந்தியுடன் உங்களுக்கொரு நெருங்கிய தொடர்பு இருப்பதற்கு அவருடன் நீங்கள் டேராடூன் பள்ளியில் ஒன்றாகப் படித்ததுதான் காரணமா?"

"உண்மையில், படிக்கும் போது எனக்கு ராஜீவ் காந்தியுடன் எந்த நெருங்கிய தொடர்பும் கிடையாது. டேராடூன் பள்ளியில் அவர் என்னைவிட மூன்று வருஷங்கள் ஜூனியர். சுபாவத்தில் அவர் மிகுந்த கூச்சம் உள்ளவர் என்பதால் அவர் இருக்கும் இடமே தெரியாது. டேராடூன் பள்ளியில் அவரை ஒரேயொரு முறை நான் சந்தித்துப் பேசியது நிழற்படம் போல நினைவிலிருக்கிறது. அங்கு இருக்கும் நீச்சல் குளத்தில் சீனியர் மாணவர்களின் அனுமதியுடன் ஜூனியர்கள் நீந்தச் செல்வார்கள். ஒரு முறை நான் அங்கு இருந்த போது ராஜீவ் காந்தி என்னை அனுமதி கேட்டார். நல்லவேளை, அப்போது நான் அனுமதி கொடுத்தேன்!" என்று மணிசங்கர ஐயர் சிரிக்கிறார்.

"பிறகு கேம்பிரிட்ஜில் படித்த காலத்தில் அவரும் அங்கு படித்தார். அங்கும் வெளிச்சத்தைக் கண்டு கூசுபவர்போல் பின்னணியிலேயே இருப்பார். நான்தான் எல்லா நிகழ்ச்சிகளிலும் பங்கெடுத்துக் கொள்வேன். நான் ஐ. எப். எஸ்ஸில் தேறிப் பல வெளிநாடுகளில் பதவிகள் வகித்துவிட்டு '82 —ல்தான் தில்லிக்கு வந்து சேர்ந்தேன். பள்ளியிலும், கேம்பிரிட்ஜிலும் நான் சற்றுப் பிரபலமாக இருந்ததால், ராஜீவுக்கு என்னைத் தெரிந்திருக்கும். மற்றபடி நெருங்கிய பழக்கம் ஏற்கெனவே இருந்ததாகக் கூற முடியாது... இப்போது அவருடன் பழகப் பழக அவர்மேல் எனக்குத் தினத்திற்குத் தினம் மதிப்பு அதிகரிக்கிறது. முன்பே இவருடன் நெருக்கமாகப் பழகாமல் போனேமே என்று வருத்தமாக இருக்கிறது. மிக அற்புதமான மனிதர் அவர்..." என்கிறார் மணி சங்கர ஐயர்.

**"தமிழர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதற்கு ஆதாரமில்லை!"**

**— டி. என். சேஷன் (சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறைச் செயலர், பிரதமரின் தலைமைப் பாதுகாப்பு அதிகாரி.)**

**பா**லக்காடுதான் பூர்வீகம் என்றாலும் பாலக்காட்டுச் சாயலே இல்லாமல் சுத்தமாகத் தமிழ் பேசுகிறார் டி. என். சேஷன். சுத்தமான இந்தியிலும் சொற்பொழிவாற்றும் இவரது திறமை ஆச்சரியமானது.



சென்னைக் கிறிஸ்துவக் கல்லூரியில் பௌதிகம் ஹானர்ஸ் முடித்து, ஐ. ஏ. எஸ். எழுதி, அகில இந்தியாவில் இரண்டாவது இடம் வகித்தார். தமிழ்நாடு, பெங்களூர், பம்பாய், டேராடூன் என்று பல இடங்களிலும் பணியாற்றிய இவர், கடந்த 1985—ல்தான் தில்லிக்கு வந்தார்.

இன்று அரசு அதிகாரிகளில் மிக உன்னதமான இடத்தில் இருப்பவர். சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறைச் செயலாளராக இருப்பதோடு, பிரதமரின் தலைமைப்பாதுகாப்பு அதிகாரியாகவும் இருக்கிறார். பின்னது சர்வ ஜாக்கிரதையுடன் — விழிப்புடன் செயல்பட வேண்டிய வேலை; மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமான நபர் என்கிற எண்ணத்தில் கொடுக்கப்படும் பொறுப்பு. பிரதமருக்கு எந்த விநாடியும் ஆபத்து வரலாம் என்கிற எண்ணத்துடன் ஒவ்வோர் அசைவையும் கண்காணிக்க வேண்டியது எத்தனை டென்ஷன் கொண்ட வேலை! ஆனால், அவரைச் சந்தித்த போது எந்த டென்ஷனின் அறிகுறியும் சேஷனின் முகத்தில் பார்க்க முடியவில்லை.

"அண்மையில் நடந்த 'நாட்டுக்காக ஓட்டம்' என்னும் நிகழ்ச்சியில் பிரதமரும் ஓடவேண்டிய அவசியம் என்ன? அது பாதுகாப்புக்கு ரிஸ்க் இல்லையோ?" — கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தோம்.

"கொஞ்ச தூரம்தான் பிரதமரை ஓட அனுமதித்தோம். அதோடு அவர் கூட அவரை ஒட்டியபடி ஓடிய அத்தனை பேரும் செக்யூரிட்டி காரர்கள்தாம்!"

"உங்களை நியமித்ததற்கு உங்கள் திறமை, சீனியாரிடி மட்டுமில்லை; பிரதமருக்குப் பொதுவாகத் தமிழர் மேல் இருக்கிற நம்பிக்கையும் ஒரு காரணம் என்று நாம் பெருமைப் பட்டுக் கொள்ளலாமா?"

"பிரதமருக்கு, வட இந்தியர் தென்னிந்தியர் என்கிற பாகுபாடெல்லாம் கிடையாது. அவர் எந்த வேலையைக் கொடுத்தாலும் செய்ய வேண்டியது என்னைப் போல் சிவில் சர்வீஸில் இருப்பவர்களின் கடமை."

"நீங்கள் தமிழர் என்கிற காரணத்தால் ஏதேனும் சாதக பாதகம் இருக்கிறதா?"

"எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. எந்த ஊரிலும் நான் இருக்கிறபடிதான்

இங்கேயும் இருக்கிறேன். வேலைப் பளுவினால் வெளிப்பேருடன் பழகுவதும் உறவு வைத்துக் கொள்வதும் முடிவதில்லை."

"வடக்கில் தமிழர்களை நடத்தும் விதத்தில் புறக்கணிப்பு இருக்கிறது; தெற்கு புறக்கணிக்கப்படுகிறது என்கிற எண்ணங்களைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?"

"தெற்குப் புறக்கணிக்கப்படுகிறது என்பது அரசியல் ரீதியில் சொல்லப்படுவது. தமிழர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதற்கு ஆதாரமில்லை. இன்று சிவில் சர்விஸையே எடுத்துக் கொள்ளுங்கள்; எல்லா உயர் பதவிகளிலும் அனேகமாய்த் தமிழர்கள்தாம் அதிகம் இருக்கிறார்கள். தில்லிக்கு வரும் சராசரித் தமிழன் வேற்றாளைப் போல் உணர்வானானால் அது மொழி தெரியாத காரணமே ஒழிய வேறு ஒன்றும் இல்லை. தில்லி எல்லாரையும் அணைத்துக் கொள்ளும்; யாரையும் வித்தியாசமாக நடத்தாது. ஒரு விஷயம் — இங்கு முன்பு மத்திய வகுப்புத் தமிழர்கள் நிறைய உண்டு. ஒரு காலத்தில் கிளார்க்குகள் ஸ்டெனோக்ராபர்கள் அனேகமாய்த் தமிழர்கள்தாம். இப்பொழுது அது குறைந்து விட்டது..."

"ஏன் அப்படி?"

"ஆங்கிலம் அரசு விஷயங்களில் வலுவிழந்ததும், இந்திக்கு ஆதரவு அதிகரித்ததும் காரணமாயிருக்கலாம். தேசிய அரசியலிலிருந்து தமிழ் நாட்டு அரசியல் சற்று வித்தியாசமானதன் காரணமாயிருக்கலாம். ஆனால் திறமையுள்ள யாருக்கும் இங்கு அங்கீகரிப்பு இல்லாமல் இல்லை. ஒரு மொழியின் காரணமாகவோ, மாநிலத்தின் காரணமாகவோ யாரும் ஒதுக்கப்படுவதில்லை என்பது மட்டும் நிச்சயம்."

"தில்லி நகர்க் கலாசாரத்தோடு நீங்கள் எந்த அளவுக்கு ஒன்றியிருக்கிறீர்கள்?"

"கொஞ்சங்கூட ஒன்றவில்லை!" — என்று சொல்லும் சேஷன், "பொதுவாகத் தமிழர்களுக்கு ஒருவிதக் கூச்சமும் அடக்கமும் உண்டு. அதுவே அவர்களது முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டை என்றும் ஒரு வாதமுண்டு!" என்றார்.

**"தமிழன், வங்காளி... என்பதை விட இந்தியன் என்பதே பெருமை..."**
**— வரதராஜன் (கலாசாரம் மற்றும் மனித வளமேம்பாட்டுத்துறைச் செயலர்)**



**வ**ரதராஜனை முதல் முறையாகப் பார்ப்பவர்கள் அவரைத் தமிழரென்று நிச்சயம் நினைக்க மாட்டார்கள். வெள்ளை வெளேரென்ற தலைமுடியும், தாடியும், — வடக்கத்திய பைஜாமா, குர்த்தாவின் மேல் சால்வையுமாகச் சுத்தமான உச்சரிப்புடன் ஹிந்தியைப் பேசியபடி ஆஜானுபாகுவான தோற்றத்துடன் இருக்கும் அவரைப் பார்த்தால் வடக்கத்தியர் என்றுதான் நினைக்கத் தோன்றும்!

இவர் பிறந்தது காஞ்சிபுரத்தில். கல்லூரிப் படிப்பு சென்னையில். ஐ. எப். எஸ்ஸுக்குத் தேர்வாகியும் அதில் சேராமல் ஐ. ஏ. எஸ்ஸில் சேர்ந்தவர்களில் இவரும் ஒருவர்.

"தமிழரென்றே அடையாளம் காண முடியாதபடி இருக்கிறது உங்கள் உருவமும் உடையும். தமிழன் என்கிற ஐடென்டிட்டியைக் காண்பிக்கக் கூடாது என்று வேண்டுமென்றே ஏற்படுத்திக் கொண்ட மாற்றமா இது?" — கேட்டோம்.

"வேண்டுமென்றே செய்த மாற்றம் என்று சொல்ல மாட்டேன். நான் உத்தரப் பிரதேசத்திலேயே வெகு நாட்கள் இருந்ததால் ஏற்பட்ட பாதிப்பாக இருக்கலாம். ஆனால் ஒரு விஷயம்; 'நான் ஒரு தமிழன், வங்காளி, பஞ்சாபி' என்று சொல்லிக் கொள்வதைக் காட்டிலும் 'நான் ஓர் இந்தியன்' என்று சொல்வதுதான் சிறந்தது என்று நான் நினைக்கிறேன். நான் லக்னோவில் இருந்தபோது அங்கிருக்கும் தமிழ்ச் சங்கம் என்னை அதன் தலைவராக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டது. ஆனால் என்னுடைய கொள்கை காரணமாக நான் அந்தப் பதவியை ஏற்க இசையவில்லை. எல்லா மாநிலத்துக்காரர்களும் ஒட்டு மொத்தமானதோர் ஒருமைப்பாட்டில் ஐக்கியமாக வேண்டிய காலம் வந்துவிட்டது என்று நான் அவர்களுக்குச் சொன்னேன். அனைத்து இந்தியக் கலைகளிடையே ஒரு பரஸ்பரப் பரிமாற்றமும் பரிச்சயமும் நெருக்கமும் ஏற்படுத்தும்படியான கலாசாரச் சங்கங்களை உருவாக்க வேண்டும் என்கிற எண்ணத்துடன் லக்னோவில் 'உத்தர் தக்ஷிண கல்சுரல் ஆர்கனைசேஷன்' என்ற சங்கத்தை நான் ஆரம்பித்தேன். தான்சேன் தியாகராஜா சமாரோஹ் விழாக்கள் நடத்தினோம். தென்னிந்திய, வடஇந்தியக் கலைஞர்களின் ஜுகல் பந்தி நிகழ்ச்சிகள் ரொம்பவும் ரசிக்கப்பட்டன. லண்டனில் இருந்தபோது 'நாதப் பிரும்மம்' என்கிற அமைப்பை ஆரம்பித்தேன். அதன் ஆதரவாளர்களில் ஐம்பது சதவீதம் ஆங்கிலேயர்கள்! இந்திய சங்கீதம், நாட்டியம் பற்றிய ஒரு கட்டுரைத் தொகுப்பையும், 'நாதோபாஸனா' என்ற தலைப்பில் வெளியிட்டிருக்கிறேன்."

"கலாசாரச் செயலர் என்கிற முறையில் இப்படிப்பட்ட கலைச் சங்கமத்துக்கு உங்களால் நிறையச் செய்ய முடியும். வடக்குக்கு அறிமுகமாகாத தமிழ் நாட்டுக் கலைகளை தெற்கத்தியக் கலைஞர்களை இங்கே அறிமுகப்படுத்த நினைத்ததுண்டா? குடியரசு தின அணிவகுப்புகளில் தமிழ்நாடு என்றால்



பொய்க்கால் குதிரையும் கரகமும்தான் வருகின்றன!''

''நிறையச் செய்கிறோமே! 1985—ல் ஏழு பிராந்தியக் கலாசார மையங்கள் நிர்மாணிக்கப்பட்டன. அதில் ஒன்று தஞ்சாவூரில் இருக்கிறது. நமது கிராமியக் கலைகளைப் பிரபலமாக்குவதுதான் அதன் நோக்கம். இந்த மையங்களுக்கிடையே கலாசார உறவும் பரிமாறல்களும் நெருக்கமாக இருக்கும். ஒரு மாநிலத்தின் கலையை மற்ற மாநிலத்தார் கண்டு ரசிக்கும்படியான கலைவிழாக்களை நிறைய நடத்துகிறோம். வரும்படியே இல்லாமல் இருந்த கலைஞர்களுக்கு நிலையான வரும்படி கிடைக்க வழி செய்திருக்கிறோம்.''

''எந்த அளவுக்கு நீங்கள் இன்னும் தமிழர் என்று சொல்லிக் கொள்வீர்கள்?''

''தயிர் சாதமும் நாரத்தங்காய் ஊறுகாயும் கிடைத்தால் சொர்க்கம்! எனக்கு நம் முறையில் நன்றாகச் சமைக்க வரும். லண்டன் போஸ்டிங் போது என் வயதான தாய் என்னுடன் இருந்தார். நான்தான் சமைப்பேன். ஐம்பது அறுபது பேருக்குக் கூடச் சமைத்துப் போட்டிருக்கிறேன். தமிழ் பாட்டைக் கேட்பதும் தமிழில் பேசுவதும் சந்தோஷமாக இருக்கிறது. ஆனால் தற்காலத் தமிழ் இலக்கியம் எதுவும் படித்ததில்லை.''

''சாதாரணமாகச் சொல்வார்கள், பஞ்சாபிக்காரன் பஞ்சாபியருக்கு உதவுவான்; உ. பி.க்காரன் தன் ஜனங்களைத் தூக்கி விடுவான்; தமிழன்தான் தன் இனத்துக்குஒன்றும் செய்ய மாட்டான் என்று. நீங்கள் எப்படி?''

''என்னால் முடிந்த அளவு செய்யத்தான் செய்கிறேன். தமிழர்களைப் பற்றி எப்படி அப்படிச் சொல்கிறீர்கள்? மனுநீதி மன்னன் வழியிலே வந்தவர்கள் அல்லவா நாமெல்லாம்?''

''ரிடையரான பிறகு எங்கே செட்டில் ஆவீர்கள்? தமிழ்நாட்டிலா?''

''யாதும் ஊரே; யாவரும் கேளிர்! பூர்வீக கிராமம் (உம்பளப்பாடி) மகா மோசமான நிலையில் இருக்கிறது; தொடர்பே விட்டுப் போய்விட்டது. வடக்கேதான் இருப்பேன், அநேகமாய். இந்தியா முழுவதும் பாத யாத்திரை செய்ய வேண்டும் என்ற ஆசை எனக்கு.''

> **''தமிழ்க் கலாசாரத்தை இட மாற்றங்கள் பாதிக்கவில்லை!''**
>
> **— வரதன் (மின் சக்தி மற்றும் நிலக்கரித்துறைச் செயலர்)**

**வ**ரதன் பிறந்தது செங்கல்பட்டு. திருச்சியில் பட்டப்படிப்புப் படித்து ஐ. ஏ. எஸ்ஸில் சேர்ந்தார். கர்நாடகத்திலும், தில்லியிலுமாக வேலை பார்த்துத் தற்சமயம் தில்லியில் இருக்கிறார். ஜெயில்சிங் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அவரது அந்தரங்கக் காரியதரிசியாகப் பணியாற்றியவர். கர்நாடக சங்கீதத்தில் மிகுந்த தேர்ச்சி உள்ளவர். மனைவி கோமளாவின் நாட்டியநிகழ்ச்சிக்குச் சில சமயங்களில் பின் பாட்டுப் பாடியவர்.

''நீங்கள் கர்நாடக மாநிலத்திலும், தில்லியிலுமாக வேலை பார்த்திருக்கிறீர்கள். இரண்டு இடங்களிலும் வேலை பார்க்கும் பொழுது அடிப்படையில் ஏதேனும் வித்தியாசம் பார்த்திருக்கிறீர்களா?''

''மாநிலங்களில் வேலை பார்க்கும் பொழுது ஒரு குறுகிய வட்டத்துக்குள் வேலை பார்க்க வேண்டும். தில்லியில் எல்லைகளும், பரிமாணங்களும் பெரியவை; அகில இந்திய, சர்வதேசப் பிரச்னைகளும் நம் கவனத்துக்கு வரும்.''

''ஜெயில்சிங்கின் அந்தரங்கக் காரியதரிசியாக ராஷ்ட்ரபதி பவனில் வேலை பார்த்த அந்தக் கால கட்டம் உங்களுக்கு எப்படி இருந்தது? ஒரு சர்ச்சைக்குரிய ஜனாதிபதியின் கீழ் வேலை பார்த்ததால் ஒரு 'சிவில் சர்வண்ட்' என்கிற முறையில் சில சமயங்களில் உங்களுக்குச் சங்கடம் ஏதும் ஏற்பட்டதா?''

''ஜனாதிபதியின் அந்தரங்கக் காரியதரிசியாக இருப்பது ஓர் அமைச்சரின் கீழ் வேலை பார்க்கும் பொழுது இருக்கும் 'டென்ஷன்'கள் கொண்ட வேலையில்லை. அமைச்சருக்கு நம் கருத்துக்களையெல்லாம் எழுத்தில் கொடுக்கவேண்டும். ஜனாதிபதிக்கு அப்படிக் கொடுக்க வேண்டியதில்லை. ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட விஷயங்கள்தாம் ஜனாதிபதியின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வரும். அதில் அவருக்குக் கருத்து வேற்றுமையிருந்தால் அந்தரங்கக் காரியதரிசியுடன் விவாதிப்பார்; ஆலோசனை கேட்பார். அவை எல்லாம் எழுத்தில் இருக்காது. அவற்றைப் பகிரங்கப்படுத்தவும் முடியாது. ஜெயில் சிங்கின் கீழ் சாதாரணமாக இருந்திருக்கக் கூடிய என்னுடைய 'போஸ்டிங்' சில சம்பவங்களினால் சற்றுக் கூடுதலான சுவாரஸ்யத்துடன் இருந்தது. அவர் என்னை மிகுந்த மரியாதையுடனும், கரிசனத்துடனும் நடத்தினார்.''

''தமிழ்நாட்டுடன் இப்பொழுது எந்த வகையில் உங்களுக்குத் தொடர்பு இருக்கிறது?''

''உறவுக்காரர்கள் சிலர் இருக்கிறார்கள் என்பதைத் தவிர பிரத்தியேகமாக எந்தத் தொடர்பும் இல்லை. நமது கலைகளான கர்நாடக சங்கீதத்தையும், பரத நாட்டியத்தை

யும், தமிழ் இலக்கியத்தையும் இங்கிருந்த படியே நானும் என் மனைவியும் போற்றி வருகிறோம்.''

''உங்களுடைய வாழ்க்கை முறையில் எந்த மாதிரியான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன?''

''எந்தவிதமான மாறுதலும் இல்லை. வீட்டிற்குச் சென்றவுடன் வேஷ்டிதான் கட்டிக் கொள்கிறேன். தினமும் அரை மணி நேரம் பூஜை செய்வதை நிறுத்தவில்லை. நேரம் இருக்கும் பொழுது கோவில்களுக்குச் செல்கிறோம். வேலைப் பளுவில் நம் ஊர்களில் கொண்டாடுவது போல் சில விசேஷங்களை நியமமாகக் கொண்டாட முடிவதில்லையே தவிர, வேறு விதமான மாறுதல் எதுவும் கிடையாது. வீட்டில் தமிழ் தான் பேச வேண்டும் என்பதில் கருத்தாக இருக்கிறோம். என்னுடைய வேலை காரணமாக நடந்த இட மாற்றங்கள் எந்தவிதமான கலாசாரத் தேக்கத்தையோ, வறட்சியையோ ஏற்படுத்தாமல் இருந்ததற்கு நான் பெருமைப் பட்டுக் கொள்கிறேன்!''

**''தெற்கே வருவது ஒரு சந்தோஷமான விஷயம்!''**

**— சந்திரசேகர் (உணவுப் பொருள் வழங்குதுறை ராஜாங்க அமைச்சரின் தனிச் செயலர்)**

**பா**லா என்று அழைக்கப்படும் சந்திர சேகர் இளைய தலைமுறையைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி. வடக்கிலேயே பிறந்து வளர்ந்த தமிழர்! இருந்தும், தம்மைத் தமிழ்



நாட்டைச் சேர்ந்தவராகவே பெருமையுடன் சொல்லிக் கொள்கிறார். தமிழ்நாட்டுடன் நெருக்கமான தொடர்பு இல்லாவிட்டாலும் வீட்டில் பாட்டி, தாத்தா, பெற்றோர் எல்லோரும் தமிழ்ப் பண்பாட்டில் ஊறியவர்கள் ஆனதால் வீட்டிற்குள் தெற்கத்தியக் கலாசாரம்தான் பிரதானம்.


''தில்லியில் படித்த இடத்திலும், வேலை பார்க்குமிடத்திலும் நீங்கள் தமிழர் என்கிற காரணத்தினால், வேற்று ஆளைப் போல் உணர்ந்திருக்கிறீர்களா? மற்றவர்கள் உங்களை வித்தியாசமாக நடத்தியிருக்கிறார்களா?''

''கிடையவே கிடையாது. நான் எந்த வித்தியாசத்தையும் உணர்ந்ததில்லை.''

''தமிழ்நாட்டுக்குச் செல்வதுண்டா? செல்லும் போது அந்தச் சூழலில் கலப்பதில் ஏதேனும் பிரச்னைகள் உண்டா?''

''விடுமுறைக்குப் போவதுண்டு. அந்தச் சூழலில் எனக்கு எந்தவிதமான பிரச்னையும் இல்லை. தெற்கே வருவது எனக்கு ரொம்பச் சந்தோஷத்தைக் கொடுக்கிறது. அதை விளக்குவது கஷ்டம். தமிழ் பேசும் ஜனங்களிடையே இருப்பதும், தெருவோரத்தில் இருக்கும் கடைகளில் அமர்ந்து தோசை சாப்பிடுவதும் ஓர் ஆனந்தமான அனுபவம்.''

---



காதலன்: எதுக்கு மதுங்கிற என் பெயரை மாற்றி வேறு பெயர் வைக்கக்கிடச் சொல்றே?

காதலி: மது மயக்கத்திலிருப்பவன்னு என்னைப் பற்றி ஒரு மாதிரியாப் பேசறாங்க!

— உ. ராஜாஜி.




அவன்: என்னப்பா கடிகாரம் நாலு மணி. நேரமாப் பத்து மணியையே காட்டிக்கிட்டிருக்கு?

பியூன்: அதுமட்டும் தூங்கக் கூடாதுன்னு சட்டமா என்ன?

# "சுவையுடன் வளர ராசிபலன் சொல்கிறது ஃபாரெக்ஸ்"

நீங்கள் ராசிபலனை நம்பினால், ரிஷபராசியில் பிறந்த உங்கள் குழந்தை இயற்கையாகவே ஆசைக்குரியதாக இருக்கும். சிறுவயதிலேயே அதற்கு அழகான பொருட்களென்றால் அலாதிப்பிரியம் இருக்கும். அதை அவசரப்படுத்தினால் எரிச்சலடையும். மெதுவாக நீங்கள் பேசித்தான் அதை வேலை வாங்க முடியும்.




ரிஷபக்குழந்தை
ஏப்ரல் 21—மே 20

ராசிபலனை நம்பினாலும், நம்பாவிட்டாலும், குழந்தையின் போஷாக்கு என்றால் முழு நம்பிக்கைக்கும் பாத்திரமானது ஃபாரெக்ஸ்.

4-வது மாதம் முதல் உங்கள் குழந்தைக்குப் "பாலடங்கிய ஃபாரெக்ஸை" ஊட்டுங்கள். இது முழுமையான ஆடைப்பாலிலிருந்து தயாராவதால் குழந்தை நன்கு வளரத் தேவையான கால்ஷியம், தாது உப்புக்கள், புரதம், வைட்டமின்கள், கோதுமைத்தானியம் அனைத்தையும் உள்ளடக்கியது.


6-வது மாதம் முதல் ஃபாரெக்ஸ்-வெஜ் ஊட்டுங்கள். இது ருசியுடன் கூடிய ஊட்டச் சத்துக்களடங்கியது.






**சுவையுடன் வளரும் வழி**

GX/44/213 TML



இது கெடக்குது... நீ
எத்தனை பேரைக் கொல பண்ணினே!..
காவல்நான் எப்போ?.. வெளுத்துக் கட்டு!
கேக்கவே சந்தோஷமா
இருக்கு!
பயங்கர வாதிகள்
வன்னியர் போராட்டம்
குடிநீர்ப் பிரச்னை
இன்னாடா பேமானி!..
இன்னா நெனச்சிக்கினே?
பாரு.. நான் தான் 'ரூல்' பண்ணப்
போறேன்! மாஞ்சா உருவிடுவேன்!
ஆமம்.மா! ஜாக்ரதை!
காவல் நிலையம்




# கல்கி

1988 ஏப்ரல் 24
மலர் 46 இதழ் 39
விபவ சித்திரை 12




## அடக்கு முறையால் ஒடுக்க முடியாது!

பஞ்சாப் பொற்கோயிலில் மீண்டும் துப்பாக்கிச் சத்தம் கேட்டிருக்கிறது. அதனை மீண்டும் கைப்பற்றித் தங்கள் கோட்டையாக்கியுள்ள கலிஸ்தான் தீவிரவாதிகள் வானை நோக்கித்தான் சுட்டிருக்கிறார்கள். பைசாகி தினப் பிரார்த்தனைக்கு வந்திருந்த ஆயிரக் கணக்கான மக்கள் இதற்கே அலறிக் கொண்டு இடத்தைக் காலி பண்ணினார்கள். வாசலில் இருந்த கடைகளை இழுத்து மூடிவிட்டு அவற்றின் சொந்தக்காரர்கள் பயந்து ஓடினார்கள். கோயிலுக்கு வெளியே இருந்த மத்திய ரிசர்வ் போலீஸார் என்ன செய்வது என்று புரியாமல் தவித்தார்கள்!

பஞ்சாப் பிரச்னைக்கு அரசியல் ரீதியான தீர்வு காணத் தாமதிக்கும் ஒவ்வொரு நாளும் நிலைமை மேலும் மோசமாகி வரும் என்பதை மத்திய அரசு உணர்தல் வேண்டும். அம்மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சி கொண்டுவரப்பட்டபோதே, 'இதனால் பயங்கரவாதத்தை ஒடுக்க முடியாது' என்று அறிஞர்கள் பலர் எடுத்துச் சொன்னார்கள். அதுவே உண்மையாயிற்று. ஜனாதிபதி ஆட்சியில் கொலை, கொள்ளைகள் அதிகமாகினவேயொழியக் குறையவில்லை. டில்லி பாதுஷா போல் இருந்து கொண்டு, ரே, ரிபைரோ என்ற ராஜப் பிரதிநிதிகளைக் கொண்டு பஞ்சாபை ஆண்டு விடலாம் என்று மத்திய அரசு எண்ணினால் அதைவிட முட்டாள்தனம் வேறு இருக்க முடியாது. பஞ்சாபை மட்டுமல்ல; இன்று இந்தியாவின் எந்த மாநிலத்தையுமே அவ்வாறு ஆள்வது சாத்தியமில்லை. மாநில மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளத்தான் விரும்புவார்கள். பஞ்சாபில் அமைதி திரும்பப் பஞ்சாபியரேதான் வழி வகுக்க முடியும். சீக்கிய பயங்கரவாதத்தை ஒடுக்கச் சீக்கியர்கள்தான் முன் வர வேண்டும். இதற்கேற்ப ராஜ தந்திரத்துடன் தில்லி செயல்படுவது அவசியம். இந்தியாவின் ஒருமைப்பாடு காக்கப்படுமெனில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்குவதில் தவறில்லை என்பதை மத்திய அரசு உணர்வது நலம்.

பஞ்சாபைப் பஞ்சாபியரே ஆள அனுமதிக்கப்பட வேண்டும் என்னும் போது தீவிரவாதிகளுக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடம் கொடுத்து நிலைமை மேலும் சீரழிய அனுமதிக்கத் தேவையில்லை. இந்திய ஒருமைப்பாட்டை விரும்பும் மிதவாதத் தலைவர்கள் பலர் இருக்கிறார்கள். மக்களும் அமைதியையே விரும்புகிறார்கள். பயத்தினால்தான் சில சமயம் அவர்கள் பயங்கரவாதிகளுக்குப் புகலிடம் தருகிறார்கள்; ஆயுதங்களை மறைத்து வைக்க இடமளிக்கிறார்கள். ஜனநாயகப் பற்றுள்ள மக்கள், தலைவர்கள் ஆகியோரின் செல்வாக்கை வளர்த்து, இவர்களைக் கொண்டேதான் பயங்கரவாதத்தை ஒடுக்க முடியும். மாறாக, 'பயங்கரவாதத்துக்குப் பதில் தில்லியின் அடக்குமுறையே அல்லது எமர்ஜென்ஸியே' என்று ஆரம்பிக்கும் போதுதான் மேன் மேலும் பயங்கரவாதமும் பிரிவினை மனப்பான்மையும் பலம் பெறுகின்றன.

ஆக்ராவில் அண்மையில் நடந்த பி. ஜே. பி. மாநாட்டில் அத்வானி, பஞ்சாப் பிரச்னையில் ராஜீவின் ராஜதந்திரமற்ற போக்கைக் கண்டித்ததுடன் நில்லாமல், ஆக்கபூர்வமான ஏழு அம்ச மாற்றுத் திட்டம் ஒன்றையும் சமர்ப்பித்திருக்கிறார். 1. பாகிஸ்தான் எல்லை நெடுக ஒரு பாதுகாப்புப் பிரதேசத்தை உருவாக்கி, அந்நாட்டிலிருந்து பயிற்சி பெற்ற பயங்கரவாதிகள் இந்திய எல்லைக்குள் ஊடுருவுவதைத் தடுக்க வேண்டும். 2. இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்னையில் பாகிஸ்தான் மறைமுகமாகத் தலையிட்டுக் கலகம் விளைவிப்பதைத் தடுக்க வன்மையான உலக அபிப்பிராயத்தை உருவாக்க வேண்டும். 3. துப்பறியும் பிரிவின் செயல்பாட்டினை மேம்படுத்த வேண்டும். 4. பாகிஸ்தான் எல்லைப் புறத்தில் ஊடுருவலைத் தடுக்கவும் பாதுகாப்பைப் பலப்படுத்தவும் இந்திய ராணுவத்தைப் பயன்படுத்தத் தயங்கக் கூடாது. 5. ஒரு பாவமும் அறியாத ஆண்களையும் பெண்களையும் குழந்தைகளையும் கொன்று குவிக்கும் பயங்கரவாதிகள் மீது மக்களுக்கு வெறுப்பு பெருகும் விதமாகப் பலமான பிரசாரம் செய்து, பொது ஜன அபிப்பிராயம் உருவாக்கப்பட வேண்டும். இதற்கு அகாலி தலைவர்களையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். 6. ஜோத்பூர் சிறையிலுள்ள சீக்கியக் கைதிகள் மீது உடனடியாக வழக்குகள் நடத்தப்பட்டு, குற்றமற்றவர்கள் விடுவிக்கப்படவும் பெரும் குற்றங்கள் இழைத்தவர்கள் தண்டிக்கப்படவும் வேண்டும். ராணுவத்தை விட்டு ஓடியவர்களில் வன்முறையில் இறங்காதவர்களைத் தண்டிக்காமல் விட்டு விட வேண்டும். 7. இந்திரா காந்தியின் மரணத்தையொட்டி டில்லியில் நடந்த பழிவாங்கல் படுகொலைகளுக்குக் காரணமானவர்களைக் கண்டுபிடித்து, சட்டத்தைத் தங்கள் கையில் யாரும் எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதை பிறருக்கு உணர்த்த இவர்களை எடுத்துக்காட்டாகத் தண்டிக்க வேண்டும்.

டாக்டர் ராஜீவின் மருந்து பஞ்சாப் நோயைக் குணப்படுத்தவில்லை என்பது உறுதியாகி விட்டது. டாக்டர் அத்வானி மருந்தைப் பயன்படுத்திப் பார்ப்பதில் தவறில்லை.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.


காம்ப்ளான் சாம்பியன்கள்!
Complan
"ஆரோக்கியமான முழுமையான உடல் வளர்ச்சிக்கு உன்னதமானது காம்ப்ளான்."
—அனிதா
Anita Sood
இந்திய நீச்சல் சாம்பியன்.
அனிதா – இன்றைய இளைஞர்களின் நீச்சல் திறமையை வளர்க்க உதவுகிறார். அவர் காம்ப்ளானை சிபாரிசு செய்கிறார். காம்ப்ளான், ஆரோக்கியமான முழுமையான உடல் வளர்ச்சிக்குப் பரிபூரண திட்டமிட்ட உணவாகும்.
நினைவிருக்கட்டும், உங்கள் வளரும் குழந்தைகளுக்கு உன்னதமானது காம்ப்ளான்.
Complan
23
மூலாதார சத்துணவுகள் திட்டமிட்ட விகிதங்களில்
பால் சேர்க்கத் தேவையில்லை
காம்ப்ளான்®
திட்டமிட்ட பரிபூரண உணவு

GX/45/213 TML

# "இன்றைய அரசியல் பணம் பண்ணும் வியாபாரம் ஆகிவிட்டது"



• எஸ். ஆர். சுப்பிரமணியம்.

**சுதந்திரப் போராட்ட வீரரும் தமிழ்நாடு சர்வோதயா மண்டல் இயக்கத்தின் தலைவருமான எஸ். ஆர். சுப்ரமணியம் 1930 — ல் நடந்த வேதாரண்யம் உப்பு சத்தியாக்கிரகப் போராட்டத்தை இங்கே நினைவு கூர்கிறார்; ஒப்பிட்டுப் பார்க்கிறார்...**

**அ**ன்றைக்கு நடந்த ஒவ்வொரு போராட்டமும் ஒவ்வொரு திருவிழா மாதிரி! ஜாதி, மதம், இனம், மொழி என்று எல்லாக் கோடுகளையும் தாண்டிய நிலையில் அனைவரும் ஒட்டுமொத்தமாகப் பங்கெடுத்துக் கொள்வார்கள். அப்படித்தான் 1930, ஏப்ரல் 13— ம் தேதி ராஜாஜி தலைமையில் துவங்கிய உப்புச் சத்தியாகிரகப் போராட்டமும் நடந்தது. அது, ஏதோ ராஜாஜி தலைமையில் சென்றவர்கள் மட்டுமே பங்கெடுத்துக் கொண்ட போராட்டம் என்று யாருமே நினைத்துவிடக் கூடாது. கடற்கரைப் பிரதேசங்களிலிருந்த ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் கூடத் தங்கள் வீட்டிலிருந்து செம்புகளை எடுத்துச் சென்று கடல் நீரை



மொண்டு வந்து வீட்டில் உப்புக் காய்ச்சினார்கள். 'மகாத்மா காந்திக்கு ஜே!' என்று மழலை மொழியில் கோஷமிட்டார்கள்!

அப்போதைய அடக்குமுறை ஆங்கில அரசு, ராஜாஜி தலைமையில் புறப்பட்டு வரும் உப்புச் சத்தியாகிரகப் போராட்டத் தொண்டர்களுக்குப் பொது மக்கள் யாரும் வழியில் உணவளிக்கக் கூடாது என்று தமுக்குப் போட்டு அறிவித்தது; போலீஸாரையும் காவலுக்குப் போட்டது. அந்நிலையில் பொது மக்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? தொண்டர்கள் ஓய்வெடுக்கும் ஒவ்வொரு மரத்தின் உச்சியிலும் உணவுப் பொட்டலங்களைக் கட்டித் தொங்க விட்டிருப்பார்கள்! தொண்டர்கள் வந்து ஓய்வெடுக்கும் போது மரங்களின் மேல் பொட்டலமிருப்பதைச் சமிக்ஞை செய்வார்கள். அவர்களும் அதைப் புரிந்து கொண்டு எடுத்துச் சாப்பிடுவார்கள். காவலிருக்கும் போலீஸாரோ என்ன செய்வதென்று புரியாமல் திகைப்பார்கள்!

அந்தச் சமயத்தில் உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டம் மட்டுமே பிரதானமாக இருக்கவில்லை. அதோடு சேர்ந்து அந்நியத் துணி பகிஷ்கரிப்பு, கள்ளுக்கடை மறியல்,

சமபந்தி போஜனம் போன்றவையும் நடத்தன. எல்லாப் போராட்டங்களிலும் ஒவ்வொரு பிரஜையும் தனது வீட்டில் நடக்கும் விசேஷங்களைப் போலவே கருதிப் பங்கெடுத்துக் கொண்டான்.

உதாரணத்திற்கு ஒன்று. வேதாரண்யத்தில் வைரப்பன் என்று ஒரு சவரத் தொழிலாளர். அவர் அரசு வேலையிலிருக்கும் யாருக்கும் சவரம் செய்ய மாட்டார். ஒரு முறை ஒருவருக்கு அவர் சவரம் செய்ய ஆரம்பித்த போது, பாதியில் சவரம் செய்து கொள்ள வந்த அந்த நபர் சும்மா இருக்காமல் தாம் ஒரு போலீஸ் அதிகாரி என்று சொல்லி, நன்றாகத் தமக்குச் சவரம் செய்ய வேண்டுமென்று அதிகார தோரணையில் சொன்னார். அவ்வளவுதான். இவர் உடனே சவரத்தைப் பாதியில் நிறுத்தி விட்டார். அவர் பிறகு எவ்வளவோ சொல்லியும் அடித்து உதைத்தும் கூட இவர் சவரத்தை முடிக்கவில்லை. அதற்காக அவர் ஆறு மாத காலம் கடுங்காவல் சிறைத் தண்டனையை அனுபவித்தார். அப்படியொரு தேச பக்தி!

இன்றைக்கு அப்படிப்பட்ட நாடு தழுவிய தேச பக்தி எங்கே இருக்கிறது? இன்றைய அரசியல் என்பது பணம் பண்ணும் வியாபாரமாகி விட்டது. ஆங்கிலேயர் ஆண்ட இருநூறு ஆண்டுகள் நமக்கு நஷ்டமான ஆண்டுகளே. அந்த இருநூறு ஆண்டு அடிமைத்தனத்தில் நமது முன்னேற்றம், பண்பாடு, கலை, கலாசாரம் என்று எல்லாவற்றையுமே இழந்து விட்டோம். அதாவது அந்த இருநூறு ஆண்டுகளில் வளர்ந்திருக்க வேண்டிய எல்லா வகை வளர்ச்சியுமே நம்மிடம் இல்லாமல் போய் விட்டது.

ஆனால், அந்த இருநூறு ஆண்டு கால இழப்பு பற்றி யாருமே கவலை கொண்டதாகத் தெரியவில்லை. அந்த இழப்பை ஈடு செய்வதற்கான ஒரு சிறு முயற்சி கூட இன்று நம்மிடம் இல்லை; அந்த உணர்வு கூட இல்லை என்பதுதான் கவலையாக இருக்கிறது.

இன்றைய அரசையே எடுத்துக் கொள்ளுங்கள்... 1930— ல் நடந்த உப்புச் சத்தியாக்கிரகத்தை இப்போது நடத்துகிறது. உண்மையில் இதை ஆத்மார்த்தமாகவா நடத்துகிறது? எல்லாமே வரப் போகும் தேர்தலை மனத்தில் கொண்டே செய்யப்படுகின்றனவே தவிர, ஆத்மார்த்தமானது என்று சொல்லிவிட முடியாது. இருப்பினும் அன்றைக்கு நடந்த வொரு மிகப் பெரிய விஷயத்தை இன்றைய இளைய தலைமுறைக்குக் குறைந்த பட்சம் ஞாபகப்படுத்தவாவது செய்கிறார்களே என்றுதான் என்னைப் போன்றவர்கள் ஆறுதலடைகிறோமே தவிர வேறொன்றுமில்லை.

தொகுப்பு: **சார்லஸ்**

படம்: **கே. வி. ஆனந்த்**

## வேரில்லாத மரங்கள் — வாசகர் கருத்து

* சிவசங்கரியின் 'வேரில்லாத மரங்கள்' சமுதாயத்தில் வேரோடிக் கிடக்கும் சாதி, மத வெறிகளுக்கு நல்ல மருந்து. சாதி, சம்பிரதாயம் என்று மனிதாபிமானத்தை மறந்து வாழும் மானிடர்களுக்கு ஒரு சவுக்கடி. கலப்புத் திருமணத்தை ஆதரிக்கும் கதாசிரியர், அதில் உள்ள சிக்கல்களையும் சுட்டிக் காட்டி இளைய தலைமுறைக்கு அவர் ஆற்றும் இலக்கியப் பணிக்கு எண்ணற்ற நன்றிகள்.

தேவகோட்டை, சிவ. இராதாகிருஷ்ணன்.

* மகாதேவன் பேசும் கடைசிப் பாராவின் மூலம் சிவசங்கரி, தாம் ஓர் அருமையான எழுத்தாளர் என்பதை நிரூபித்து விட்டார். இருந்தாலும் கடைசியில் ராஜாவைக் கொன்றதால் எங்களின் மனக்கசப்புக்கும் ஆளாகிவிட்டார்!

சென்னை — 39. பா. எழில்முருகன்.

* 'வேரில்லாத மரங்கள்' கதையின் முடிவு, கண்ணீர்த் துளிகளை வரவழைத்துவிட்டது. மத வெறியால் மனிதர்கள் எப்படிச் சீரழிந்து போகிறார்கள் என்பதை அப்பட்டமாகச் சித்திரித்தது. ராஜாவின் மரணத்தைத்தான் ஜீரணிக்க முடியவில்லை. கதைக்கு ஏற்பப் படங்கள் வரைந்த 'மாருதி'க்குப் பாராட்டுக்கள்.



விருத்தாசலம், — 1. கி. குருராஜன்.

* எழுத்தாளர் மகாதேவன் தக்க சமயத்தில் குறுக்கிட்டு மாதவன் — வசந்தா குடும்பத்தில் ஏற்பட்ட சிக்கலுக்கு நல்லதொரு தீர்வைச் சொல்லியிருக்கலாம். அதைச் செய்யாமல் சிறுவன் ராஜா இறந்ததும், லெக்சர் அடிப்பது ஏற்றுக் கொள்ளும்படி இல்லை. சாரி!

திருத்துறைப்பூண்டி. டேவிட் ஜான் பிரிட்டோ.

* சிவசங்கரியின் 'வேரில்லாத மரங்கள்' இனி வரும் தலைமுறையினருக்கு ஒரு படிப்பினையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

சென்னை — 40. பி. உஷா.

* 'கிறிஸ்தவ முறைப்படி அடக்கமா, இல்லே வெட்டியானுக்கு இந்து முறைப்படி சொல்லியனுப்பணுமா? ஏன்னா, சவப்பெட்டிக்கு ஆர்டர் பண்ணணுமா, இல்லே, வெட்டியானுக்குச் சொல்லியனுப்பணுமான்னு தெரிஞ்சுக்கறது நல்லது இல்லையா?' என்றும் 'இந்த ஒரு முறையாவது சண்டை இல்லாமல் ஒரு முடிவுக்கு வந்தீங்கன்னா ராஜாவோட ஆத்மாவுக்கு அது நிம்மதியைத் தர்ற செயலா இருக்கும்னு நான் நம்பறேன்' என்றும் மகாதேவன் சொன்ன வார்த்தைகள்தான் எத்தனை ஆழமானவை!

திருவாரூர். ஏ. என். சுந்தரேசன்.

# இருள் வரும் நேரம்

## சுஜாதா

**2**



சென்றவாரத்தில் நீங்கள் டாக்டர் ராம்பிரகாஷைச் சந்தித்தீர்கள். அவர் கனடாவிலும் ஆர்வர்டு அமெரிக்காவிலும் எதில் இரட்டை டாக்டரேட் வாங்கியுள்ளார் என்பது தெளிவாகத் தெரியாவிடினும் குழந்தைகளின் சைக்காலஜி பற்றிப் பெங்களூர் பல்கலைக் கழக மாணவர்களிடம் சொற்பொழிகிறார். வர்ஷா ஷிவ்தசானி என்கிற மாணவி அவரையே கண்கொட்டாமல் பார்க்கிறாள். மாலை அருமை மனைவி அம்ருதாவை அழைத்துக்கொண்டு ஒரு கல்யாண ரிஸப்ஷனுக்குச் சென்றபோது அவர் சகா கோபி என்பவர், 'மை காட்! இந்த ஆளை எப்படிக் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க?' என்று அம்ருதாவின் தோற்றத்தை — அழகைச் சிலாகிக்கிறார். டாக்டர் ராம்பிரகாஷும் அம்ருதாவும் வீடு திரும்பும் பாதி வழியில் அவருடைய கார் நின்று போகிறது.

அந்த நேரம் மாலையுமில்லாமல், இரவுமில்லாமல் ரெண்டுங்கெட்டானாக இருந்தது. எதிரே வரும் கார்கள் விளக்குப் போடலாமா என்று யோசித்துக் கொண்டு வந்தன. பி. டி. எஸ். பேருந்துகள் காலியாகப் பறந்து கொண்டிருக்க அந்த இடம் விதான் சௌதாவுக்கு அருகில் இருந்தது. டாக்டர் ராம்பிரகாஷ் இரண்டு மூன்று முறை ஸ்டார்ட்டரை இம்சித்துப் பார்த்தார்! ம்ஹூம்! தனக்குள் என்னவோ துக்கத்தை மறைத்துக் கொண்டு கார் கிளம்ப மறுத்தது.

டாக்டர் ராம்பிரகாஷ் மனித மனங்களில் டாக்டரேட் வாங்கினவர். ஒரு பாரனுய்டோ ஷிஸ்டோவோ எப்படி நடந்து கொள்வான் என்பதைப் பற்றிய அவருடைய அறிவு தீர்மானமாக இருந்தது. ஆனால், ஒரு பியட் காரின் பானட்டுக்குள் பொதிந்திருக்கும் ரகசியங்கள் ஏதும் அறியார். இருந்தும் சாஸ்திரத்துக்கும் — காத்திருக்கும் மனைவிக்காகவும் பானட்டைத் திறந்து எட்டிப் பார்த்தார். எல்லாம் சரியாகத்தான் இருந்தது. கொஞ்சம் சூடாக இருந்தது. பாட்டரி இருக்க வேண்டிய இடத்தில் இருந்தது! 'இது என்ன கார்பரேட்டரா, டிஸ்ட்ரிப்யூட்டரா என்னமோ சொல்வார்களே!'

ஒரு பத்து நிமிஷப் பிரயத்தனத்துக்குப் பின் காரை ஓர் ஓரமாகத் தள்ளினார். அதற்கே அவருக்கு வியர்த்தது. அம்ருதா எதுவும் சொல்லாமல் அவரையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். "இதுக்குத்தான் அப்பப்ப செக்கப் பண்ணிக்குங்கன்னு சொல்லிக்கிட்டே இருந்தேன்" என்றாள்.

"எப்பம்மா சொன்னே நீ?" என்று கேட்டார்.

"உங்களுக்கு இப்பச் சொன்னா ஞாபகம் வராது. இப்ப என்ன செய்யறதா உத்தேசம்?"

"மெக்கானிக்கைக் கூட்டிக்கிட்டு வரணும்!"

"என்னை நடுரோட்டில் தனியா விட்டுட்டுப் போயிடாதீங்க!"

"கவலைப்படாதே, அம்ரு! உனக்கு ஒரு வழி பண்ணிட்டுத்தான் போறேன்."

"இப்போதைக்கு ரிப்பேர் ஆகாதா?"

"ஆகாது. ஏதோ விஷ ஜுரம் இதுக்கு" என்று அதன் டயரை உதைத்தார்!

"பேசாம நம்ம வீட்டாண்டை இருக்கானே, மெக்கானிக். அவனையே கூட்டி வந்துடுங்க."

"சரி, அம்ரு. அது வரைக்கும் நீ இங்கே தனியா காருக்குள்ள இருப்பியா?"

"இல்லை, நான் மாட்டேன். எனக்குத் தனியா இருக்கப் பயம்!"

"தனியா இது? பக்கத்தில விதான்

சௌதா ஜன நடமாட்டம் இருக்குது. என்ன பயம்?''

''என்னைத் தனியா கார்ல விட்டுட்டுப் போகாதீங்க, வேண்டாம்!''

''வேறே வழி சொல்லு.''

''சொல்றதைக் கேளுங்க! பஸ் விசாரிச்சு ரெண்டு பேரும் பஸ்ல வீட்டுக்குப் போயிடலாம். அங்கே போனதும் நீங்க மெக்கானிக்கைக் கூட்டி வந்து ரிப்பேர் பண்ணிக் காரை எடுத்துட்டு வந்துடுங்க.''

''இங்கிருந்து பஸ் கெடைக்குமா சிவாஜி நகருக்கு?''


''என்னைக் கேக்காதீங்க, விசாரிச்சுப் பாருங்க!''

அவளை முறைத்துப் பார்த்தார். அவள் மேல் எரிச்சலாக வந்தது. காரில் வயணமாக உட்கார்ந்து கொண்டு, 'இங்கே போ, இப்படிச் செய்' என்று என்னை அதிகாரம் பண்ண என்ன அருகதை இருக்கிறது இவளுக்கு? மனைவி என்பதாலா, இல்லை அழகான மனைவி என்பதால்தான் இத்தனை சலுகைகள்; மை காட்! கோபி சொன்னது என்னதான் தமாஷ் என்றாலும் அவருக்குள் உறுத்தியது. 'இந்த ராட்சசனை எப்படிக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்சீங்க?'

டாக்டர் கதவைத் திறந்து கொண்டு கிளம்ப, ''எங்கே போறீங்க?'' என்றாள்.

''எதுத்தாப்பல பஸ் விசாரிச்சுக்கிட்டு வர்றேன், அம்ரு! அதுவரைக்கும் கார்ல இரு. இல்லே, அது கூட பயமா?''

''இல்லே, போய்ட்டு வாங்க. வேளா வேளைக்குச் சர்வீஸிங் கொடுத்திருந்தால் இந்த ரிப்பேர் எல்லாம் வராமல் தடுத்திருக்கலாமில்லே? உங்களுக்கு எப்பப் பார்த்



தாலும் வர்ஷா மேல்தான் ஞாபகம்!''

"டோன்ட் பி ஸ்டுப்பிட்'' என்றார். அவர் கரங்கள் நடுங்கின. கோபத்தைக் கட்டுப் படுத்திக் கொண்டு மெல்ல பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்தார். விதான் சௌதாவின் கருங்கல் மொட்டைத் தலைமீது மூன்று சிங் கங்கள் வீற்றிருக்க, அருகே தேசியக்கொடி துவண்டு இருந்தது. கப்பன் பார்க் உண்ணு விரதர்கள் எல்லாரும் வீட்டுக்குப் போய் விட்டார்கள். போலீஸ் கான்ஸ்டபிள் ட்யூட்டி முடித்துவிட்டு ட்ராபிக் லைட்டைப் புறக் கணித்துவிட்டு மூலையில் பஸ்ஸில் தொத்திக் கொண்டார்.

''இங்கிருந்து பெரும்பாலும் எல்லா பஸ் களும் சிவாஜி நகர் போகும்ங்க!''

டாக்டர் ராம்பிரகாஷ் மறுபடி தம் காருக்கு வந்து மனைவியிடம், ''வா'' என் றார்.

''நல்லா விசாரிச்சீங்களா?''

''எல்லாம் நல்லாத்தான் விசாரிச்சேன்!''

கார்க் கதவுகளின் கண்ணாடிகளை உயர்த்திப் பூட்டினார். 'டிக்கி பூட்டியிருக்கிறதா?' என்று பரிசோதித்தார். நேராக நடந்தார்.

''இருங்க, நானும் வரவேண்டாமா?''

அவள் சாலையைக் குறுக்கே கடந்து வரு வதைக் கவனித்தார். இவளுக்கும் எனக்கும் பொருத்தமில்லைதான். எத்தனை சிவப்பாக இருக்கிறாள். இந்த இருட்டில் நாவற்பழ கலர் புடைவையில் இவள் உடல் ஒரு மாலை விளக்குப் போல ஒளிருகிறது.

இருவரும் பஸ் ஸ்டாப்பில் போய் நிற்க, அங்கே பத்துப் பேர் காத்திருந்தார்கள். பெண்கள் முன்பக்கம் ஏறுவதற்கு ஆயத்த மாகச் சற்று முன்னேறி நிற்க, ''அவங்க ளோட போய்ச் சேர்ந்துக்க!'' என்றார்.

''ஏன்?''

''இந்தப் பக்கம் பஸ் ஏர்றதுக்குக் கஷ்டப் படும். பெண்கள் முன்பக்கம் ஏறிக்கலாம்.''

அவள் முன்பக்கம் செல்ல அப்போது ஒரு பஸ் வந்தது. அது நிரம்பி வழிந்தது. ஃபுட்போர்டுக்கு வெளியே சில இளைஞர்கள் தேய்த்துக் கொண்டு இறங்கினார்கள். ''ஸார், இது சிவாஜி நகர் போகுமா?''

''போகும்'' என்று பதில் வருவதற்குள், ஷிய் என்று கண்டக்டரின் சிக்கனமான விசில் கேட்க, பஸ் புறப்பட, இறங்கின இளை ஞர்கள் அத்தனை பேரும் உள்ளே தொத்திக் கொண்ட போது, டாக்டர் ராம்பிரகாஷும் இயல்பாகத் திணிக்கப்பட, ''அம்ரு ஏறிக்க, ஏறிக்க'' என்று கத்தினார்.

பஸ் அதற்குள் வேகம் பிடித்து விட்டது. டாக்டர் கொஞ்சம் அதிகப்படியான உயரம். அதனால் தலை இடிக்காமல் இருக்கக் குனிந்து கொள்ள வேண்டியிருந்தது. பஸ் இறுக்க மாக இருந்தது. வியர்வையும் விஸ்கியும் காற்றில் கலந்திருந்தன. டாக்டர் முன்பக்கம் பார்த்தார். அம்ருவின் கருநீல வண்ணப் புடைவை தெரிந்தது. ''நான் இங்கே டிக்கெட் வாங்கிக்கறேன்'' என்று சப்தமிட்டது அவளுக்குக் கேட்கவில்லை போலும்! திரும்ப வில்லை.

கொஞ்சம் கும்பல் குறையட்டும் என்று காத்திருந்தார். போஸ்ட் ஆபீஸ் சிக்னலைக் கடக்கத் திரும்பும்போது கூட்டத்தின் பாரத் தால் பஸ் தரையைத் தேய்த்தது. அங்கங்கே ஜனங்கள் தோளைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்க, ஒருவருடன் ஒருவர் ஒட்டிக் கொண்டும், தேய்த்துக் கொண்டும், தடவிக் கொண்டும்... அம்ருவைப் பார்க்க முயன் றார். கூட்டம் மறைத்தது. கருநீலப் புடைவை மட்டும் கோடி காட்டியது. என்ன ஒரு நகர வாழ்க்கை! ஒருவருக்கொருவர் இப்படிக் கட்டாயமாக ஒட்ட வைக்கும் இந்த வியர் வைப் பெருக்கத்தில், நெருக்கத்தில் தினம் தினம் பிரயாணம் செய்ய வேண்டுமெனில் யாருக்கும் நிச்சயம் பைத்தியம் பிடித்து விடும்!

இன்கம் டாக்ஸ் ஆபீஸைக் கடக்கும் போதும் கூட்டம் குறையவில்லை. பஸ் நிற்க வும் இல்லை. ஹார்ஷா வாசலில் லேசாக நின்றது. இருவர்தான் இறங்கிக் கொண்டார் கள். அம்ருவைப் பார்க்க முடியவில்லை.

சிவாஜி நகர் பஸ் ஸ்டாப் வந்து அத்தனை பேரும் இறங்கிக் கொள்ள, டாக்டர் ராம் பிரகாஷ் பின்பக்கத்து வாசல் வழியாக இறங்கிக் கொண்டு முன் வாசலுக்குச் சென்று அம்ருவுக்காகக் காத்திருந்தார். அவள் இறங்கினதும், ''ரொம்பக் கூட்டமா இருந்ததில்லே?'' என்றார்.

'பார்டன்'' என்றாள் அந்தப் பெண்.

அந்தக் கருநீலப் புடைவைக்காரி அம்ருதா இல்லை!

''ஸாரி, ஸாரி'' என்று உள்ளே தேடி னார். அம்ருதா இல்லை. இறங்கிவிட்டாளோ என்று திரும்பிப் பார்த்தார்.

சிவாஜி நகர் பஸ் நிலையத்தின் பரபரப் பில் திசையில்லாமல் நடந்து ''அம்ருதா, அம்ருதா'' என்று சப்தமாகக் கூப்பிட்டார். அம்ரு இல்லை. எங்கேபோயிருப்பாள்? இல்லை, அவள் பஸ்ஸில் ஏறவே இல்லை போலும். அய்யோ அவள் கையில் சில்லறை கூட இல்லையே. கைப்பையில் சில்லறை வைத்திருப் பாளோ? இப்போது என்ன செய்வாள்?

'ராம்! பதற்றப்படாதே. யோசித்துப் பார். இந்த நெருக்கடியில் அவள் என்ன செய்வாள்? உன் மனைவியை உனக்குத் தெரி யாதா? ஏதும் செய்ய மாட்டாள். பதற்றப் படுவாள். ஆனால் இருந்த இடத்தை விட்டு நகரவே மாட்டாள். நான் வரும் வரை நகர மாட்டாள். நிச்சயம், அங்கேயேதான் பஸ் ஸ்டாப்பில் காத்திருப்பாள்!

உடனே ஓர் ஆட்டோவை விளித்து, ''விதான் சௌதா போங்க!'' என்றார்.

''சவாரி சிக்கறதில்லேய்யா. ஒண்ணன் டாப் மீட்டர் போட்டுத் தரணும்...''

''தர்றம்பா அர்ஜண்டா போகணும்பா...''

ஆட்டோவில் திரும்ப அந்த பஸ் ஸ்டாப்பை அடையும் போது அவர் மனம் பலவிதப் பதற்ற எண்ணங்களுக்கு உட்பட் டாலும் அந்த எண்ணங்களையெல்லாம் அடக்கி, ஆவலுடன் அந்த ஸ்டாப் வரக் காத்திருந்தார்.

முழுவதும் இருட்டி சோடியம் விளக்குகள் சாலையை மஞ்சளில் நனைத்திருக்க, ஒன்றிரண்டு பேர் நடமாட்டத்தைத் தவிர யாரும் பாதையில் தெரியவில்லை. ட்ராபிக் விளக்கு முட்டாள்தனமாகத் திரும்பத் திரும்ப அம்பர் கண் சிமிட்டிக் கொண்டிருக்க, அந்த வட்டத்தை நெருங்குகையில் டாக்டரின் உள்ளம் படபடத்தது.

''இதோ வந்து விட்டது. இதே பஸ் ஸ்டாப் தான். நிறுத்தப்பா!''

அங்கே யாரும் இல்லை. டாக்டரின் கார், அதோ ஓரத்தில் அனாதையாக நின்று கொண்டிருந்தது!

டாக்டர் இறங்கிச் சுற்றிலும் தேடிய வண்ணம் மறுபடியும் ஆட்டோவுக்கு அருகில் வந்தார்.

''என்னங்க, ஏதாவது கெட்டுப் போக்கிட்டீங்களா?''

''இல்லேப்பா, என் வீட்டுக்காரி!''

''பஸ்ல வரலீங்களா?''

''இல்லே. ரெண்டு பேரும் வரவேண்டியது. அது கொஞ்சம் சாமர்த்தியம் குறைவு. அவங்க ஏர்றதுக்குள்ளே பஸ் கிளம்பிருச்சு. சிவாஜி நகர் வந்தப்புறம்தான் நோட் பண்ணினேன்!''

''அப்டீங்களா, இப்ப அவங்க இல்லேயா இங்கே?''

''இல்லேப்பா!''

''அடுத்த பஸ் புடிச்சுப் போயிருப்பாங்க. நீங்க இங்கே தேடிக்கிட்டு வந்தீங்க...''

''அப்படித்தான் இருக்கணும். ஆனா தானாகவே பஸ் புடிச்சு வர்ற ஜாதியில்லே!''

''இப்ப என்ன சவாரி, திரும்பவும் சிவாஜி நகர் போயிரலாமா?''

''ஆட்டாண்டை போய்ப் பாருங்க. அங்கே வந்திருப்பாங்க.''

''அதுதான் சரி'' என்று மறுபடி ஆட்டோவில் ஏறிக் கொண்டார்.

காரைக் கடக்கும் போது அதை வெறுப்போடு பார்த்தார். 'உன்னால்தானே எல்லாம்' — படபடப்பு இப்போது மிக அதிகமாகி இருந்தது. ஆட்டோக்காரர் சொல்வது தான் சரி. அடுத்த பஸ் பிடித்து வந்திருப்பாள். வீட்டுக்குப் போனால் இருப்பாள். சிவாஜி நகரிலிருந்து வீட்டுக்குப் போகும் வழி தெரியும். ஆனால் காசு?

கைப்பையில் சில்லறை வைத்திருப்பாள். இல்லே ஆட்டோ பிடித்து வீட்டுக்கு வந்ததும் கொடுக்கிற மாதிரி அத்தனை சாமர்த்தியம் உள்ளதா? பாட்டனி படித்த அழகான பொம்மை!

ஆனால் 'க்ரைஸிஸ்' என்று வந்தால் எந்த மனித மனமும் அதற்குத் தகுந்தாற்போல்...

''இங்கேதான் இடது பக்கம் திரும்புப்பா...''

ஆட்டோவில் வீட்டை அணுகும் போது வாசலில் மற்றொரு ஆட்டோ நின்று கொண்டிருந்தது. அவருக்கு வயிற்றில் பால் வார்த்தது போல இருந்தது.

''வந்துட்டாங்கப்பா!''

''நான் சொன்னேனா இல்லேயா?''

ஆட்டோவுக்குப் பணம் கொடுக்கும் போதுதான் அவருக்கு அந்த மற்றோர் ஆட்டோ எதிர் வீட்டுக்கு வந்திருக்கிறது என்று தெரிந்தது. ஒரு பெண்ணும் சின்னக் குழந்தையும் கூஜா, ஜமுக்காளப் படுக்கை சகிதம் ஏறிக் கொள்ள, ''மீட்டர் போட்டியாப்பா?'' என்று கணவன் வந்து உட்கார, இரண்டு ஆட்டோக்களும் புறப்பட்டுப் போக, டாக்டர் ராம்பிரகாஷ் தம் வீட்டுக் கதவு இன்னமும் பூட்டியிருப்பதைக் கவனித்தார். வாசலில் இருந்த அந்த மஞ்சள் மரப் பூக்கள் அத்தனையும் உதிர்ந்திருந்தது.

வீட்டுக் கதவைத் திறந்து விளக்கைப் போட்டார். டெலிபோனை எடுத்தார்.

யாருக்குப் போன் பண்ணுவேன்? இல்லே இன்னும் கொஞ்ச நேரம் பார்க்கலாம். அடுத்த பஸ் இன்னும் வந்திருக்காது. அல்லது ஆட்டோ வரத் தாமதமாகியிருக்கலாம். பத்து மணி வரை பார்க்கலாம்.

அதற்குள் வரவில்லையெனில்?

வருவாள், வந்து விடுவாள். எங்கே போகிறாள்?

இரவு பதினொரு மணி வரை காத்திருந்தார். வரவில்லை.

(தொடரும்)

இவர்தான் முதல்வர்:



# நேர்மைக்கு ஒரு நெடுமாறன்

சொல் வேறு, செயல் வேறாகச் செயல்படும் தலைவர்கள்தாம் தமிழ்நாட்டில் ஏராளம், ஏராளம்!

புறநானூற்றைப் புரட்டியும், அகநானூற்றை அலசியும் பார்த்துப் பேசிடும் இலக்கியத் தலைவர்கள் இங்கே உண்டு. சமயம் கிடைக்கும் போது தமது கட்சியையே விலைபேசும் வியாபாரித் தலைவர்களும் உண்டு!

சேரக் கூடாத இடத்தில் கூட்டுச் சேர்ந்து, அதனால் சிக்கித் தவித்து, ஒரு நாய்க் குட்டி வந்தால் கூட எழுந்து நின்று வெண் சாமரம் வீசிடும் தலைவர்களும் இங்கே இல்லாமல் இல்லை!

'இந்தப் பூனை பாலைக் குடிக்காது; அது மட்டுமல்ல, வாயே இதற்குக் கிடையாது' — என்றெல்லாம் சொல்லும்படியாக நேற்று வரை இருந்துவிட்டு, இன்று வாலை நீட்ட முயலும் தலைவர்களும் இங்கேதான் இருக்கிறார்கள்!

இப்படிப்பட்ட தலைவர்களுக்கு மத்தியில், எளிய தோற்றத்தோடு, சொல்லாலும், செயலாலும் நேர்மையைக் கடைப்பிடிப்பவர், நெடுமாறன். அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவராக இருந்தபோது, ஏன், அதற்கும் முந்தைய காலம் முதலாகவே நெடுமாறன் தமிழக மக்களின் உள்ளத்தின் ஒரு மூலையில் இடம் பிடிக்க ஆரம்பித்து விட்டார்.

அன்று திராவிட இயக்கத்தில் இருந்த போதும், பின்னர் தேசிய நீரோடையில் கலந்த போதும், அவரைப் பழித்துப் பேசியவர்கள் இல்லை. 'அவரை இழந்து விட்டோமே' என்று ஏங்கியவர்கள்தாம் உண்டு.

அவர் எங்கு இருந்தாலும், தெளிந்த சிந்தனையாளர். அவரது வாய் தெற்றும்; அவரது கருத்துத் தெற்றாது!

அவர் குழந்தை உள்ளம் கொண்டவர்; ஆனால் குழந்தைத்தனமாக நடந்து கொள்ளாதவர்!

எளிய தோற்றத்தவர். ஆனால், வீர தீரம் புரிவதில் அசகாய சூரர்!

மற்றவர்களைப் போல் அவர் மணிக் கணக்கில் பேசாதவர். ஆனால், செயல் வீரர்! பிறர் வியந்து, மனத்திற்குள்ளாவது பொறாமைப்படும் அளவு சாதனைகள் புரிபவர்!

அவர் நினைத்திருந்தால், சகித்துக் கொண்டு இருந்திருந்தால், என்றோ, 'திராவிடப் பரம்பரையினர்' ஆண்ட போதே தமிழகத்தில் அமைச்சராக ஆகியிருக்கலாம்.

'தேசியம்' தமிழகத்தில் தோற்றுப் போய், பட்டப்பகலில் ஓட்டமாய் ஓடிய போது, அதன் பின்னே இவரும் முக்காடு போட்டுக் கொண்டு ஓடி இருந்தால், ஏதாவது ஒரு மாகாணத்தின் 'கவர்னராக' அல்லது கண்காணாத ஏதோ ஒரு நாட்டில் 'தூதராக' எங்காவது அவர் 'ஜொலித்து' இருக்கலாம்!

அவரது மனச்சாட்சி ஒப்பவில்லை.

விளைவு?

தமிழ்நாட்டுக்குள்ளேயே ஒரு குட்டித் தீவைக் கட்சி என்ற பெயரால் உருவாக்கிக் கொண்டு, வளைய வளைய வருகிறார்!

இவரைப் பயன்படுத்திக் கொண்டால், — இவரைத் தமிழகத்தின் முதல்வர் ஆக்கினால், மீண்டும் ஒரு காமராஜரை இல்லையென்றாலும் அவரது உண்மையான வாரிசையாவது பார்க்கலாம்!

பல ஆண்டுகள் அமைச்சராக இருந்து, கடைசியில் பஸ்ஸிற்காக நடைபாதையில் நின்று கொண்டிருந்த கக்கனை, இவரது தோற்றத்தில் கண்டு மகிழலாம்.

தமிழ்நாடே தலைவிரி கோலமாகத் திரிவதை எண்ணி எண்ணிக் குமைந்த மூதறிஞர் இராஜாஜியின் ஆக்கபூர்வமான சிந்தனைகளை நெடுமாறனிடம் காணலாம்!

எல்லாரையும் அணைத்துக் கொண்டு செல்லுகின்ற, தேசப்பற்று மிக்க, பண்பாட்டில் சிறந்த ஜவாஹர்லாலை நெடுமாறனின் செயல்களில் காணலாம்!

எனவே, நான் தமிழகத்தின் முதல்வராக நெடுமாறன்தான் வரத் தகுதியுடையவர் என்று உறுதியுடன் கூறுகிறேன்.

பத்துப் பதினெட்டு ஆண்டுகளாகத் 'திராவிடப் பாரம்பரியத்தினரது ஆட்சியில் சிக்கி, கண்விழி பிதுங்கக் கஷ்டப்பட்ட தமிழ் மக்கள் என் கருத்தை முற்றிலும் ஒப்புக் கொள்வார்கள்.

நெடுமாறனை அழைப்போம்!


நேர்மையான ஆட்சியைக் கொணர்வோம்!

— 'சேலம் சக்தி,' சேலம்.

# K. குரூப் கம்பெனிகள் வழங்கும் சிறப்பு சலுகைகள்

## N.S.K. பில்டர்ஸ்

### அனைத்து டெபாஸிட்டுகளுக்கும் நில உத்திரவாதம்



சில டெபாஸிட்டுகளே ஏற்றுக் கொள்ளப்படும்
30.4.88 வரை வட்டி விகிதங்கள்.

| 1 வருடம் | 2 வருடங்கள் | 3 வருடங்கள் | 5 வருடங்கள் |
|---|---|---|---|
| 17% | 18% | 19% | 21% |

ஆண்டு வட்டிக்கு 1% அதிகம் 5 ஆண்டு டெபாஸிட்டுகளுக்கு இலவச பரிசுகள்:—

| டெபாஸிட் தொகை | இலவச பரிசு |
|---|---|
| ரூ. 5000 | குவார்ட்ஸ் சுவர்க் கடிகாரம் |
| ரூ. 10000 | மின் விசிறி |
| ரூ. 25000 | மிக்ஸி |
| ரூ. 50000 | வெட்கிரைண்டர் |
| ரூ. 100000 | 1 சவரன் தங்கக்காசு |

மேற்கண்ட வட்டி விகிதங்களும், இலவச பரிசுகளும் 30.4.88 வரை மட்டுமே.

மே 1 முதல் 1% வட்டி விகிதம் குறைக்கப்படுவதால், ஏப்ரல் 30 தேதிக்குள் டெபாஸிட்டை செலுத்தி பயனடையவும்

## 5% சிறப்பு தள்ளுபடி

## மாபெரும் சலுகை

**N.S.K.** நகர், திருநின்றவூர், சென்னை - 602 024

**ஒரு மனையின் விலை ரூ. 20,000/- மட்டுமே.**

சிறப்பு தள்ளுபடி 5% (1.3.88 முதல் 30.4.88 வரை)

1. M.M.D.A. அங்கீகாரம் பெற்றது. நெ. PPD LO 10/87
2. அனைத்து வசதிகளும் நிறைந்த இடம்
3. வில்லங்கமில்லாத சட்ட ஒழுங்கு பத்திரம்.

மனைகளை பார்வையிட்டு உங்களுக்கு தேவையான மனைகளை தேர்ந்தெடுத்து கொள்ளுங்கள்.

### குறைந்த செலவில் வீடு கட்டும் திட்டம்!

1800 சதுர அடி மனையில் குறைந்த பட்சம் 500 சதுர அடி கட்டிடப் பரப்புள்ள ஒரு தனி வீடு.
விலை சதுர அடி ஒன்றுக்கு ரூ. 200/- (மனை உட்பட)

மனைகளை இலவசமாக பார்வையிட 30.4.88 வரை தினசரி ஏற்பாடு செய்யப்படும்.

**NSK** ரியல் எஸ்டேட்ஸ்
38-B, பர்கிட் சாலை (முதல்மாடி), தி. நகர், சென்னை-600 017
தொலைபேசி எண்: 445252, 442106

# கடிவாளம்

இன்றைக்கு என்னமோ, மாடசாமிக்குக் கண்ணில் உறக்கம் ஒட்டவேயில்லை. மனத்துக்குள் ஏகப்பட்ட நச்சரிப்பு. தவறு செய்து விட்டோமோ என்ற ரகசியமான உளைச்சல்கள். புரண்டு புரண்டு படுத்தான். ம்ஹூம்!

விடிவிளக்கின் மங்கலான பச்சை வெளிச்சத்தையே பார்த்தான். மனைவியும் குழந்தையும் பாயில் படுத்திருப்பது நிழலாகத் தெரிந்தது. அயர்ந்த தூக்கம். பார்க்கப் பொறாமையாக இருந்தது.

பஸ்ஸை விட்டு இறங்கி, பணிமனையில் கணக்கு முடித்துவிட்டு வந்தானென்றால்... சாப்பிட்டதும் படுத்து விடுவான். அடித்துப் போட்ட மாதிரி உறங்கி விடுவான். விடிந்த பிறகுதான், மனைவி, குழந்தை, வாழ்க்கையெல்லாம்!

அப்படித் தூங்குகிறவன்தான், இன்றைக்கு என்ன இழவோ... உறக்கம் வந்து ஒட்டவே மாட்டேன் என்கிறது. மனத்துக்குள் தவிப்பு. கிடைத்த பொக்கிஷத்தைப் பறி கொடுத்துவிட்ட மாதிரி ஒரு நமைச்சல். அமைதியிழந்த நினைவுகள், பல திசைகளில் ஓடியலைகின்றன.

ஒருத்தன் சொத்தை ஒளிச்சு வைச்சா... அது நிலைக்கவா செய்யும்? நோயோ நொடியோ வந்து, அதையெல்லாம் வாரிச் சுருட்டிக்கிட்டு ஓடிவிடாதா? அதுலே என்ன பெருமை இருக்கு? கண்டக்டர் உத்யோகமிருக்கு. கை நிறைஞ்ச சம்பளம். காலமிருக்கு; நாளும் இருக்கு; உழைச்சு எம்புட்டோ சம்பாதிக்கலாம். அடுத்தவன் சொத்தை அமுக்கிச் சம்பாதிக்கிறதும், ஒரு சம்பாத்தியமா? மனச்சாட்சி கொத்திப் பிடுங்காதா? ச்சே!

இப்ப... நாலு பேராச்சும் யோக்கியன்னு சொல்லுவாக. அதுபோதாதா? ஒரு மனுசன் வாழ்க்கையிலே சாதிக்க வேண்டியது அதுதானே....

நியாயப்படுத்துகிற இந்த நினைவை வெட்டி முறித்துக் கொண்டு, மற்றோர் நினைவு. லௌகீக வாழ்வின் வெக்கையில் அடிபட்டுக் கன்றிப் போன அந்த நினைவு, கர்ணகடூரமாய்க் கைகொட்டிக் கேலி செய்தது.

'யோக்கியன்னு பேரு வாங்கி என்ன செய்யப் போறே? யோக்கியன்னு சொல்லிக்கிட்டுக் கடைமுன்னாலே நீ நின்னா, அரிசி, பருப்பு அள்ளி விடுவாங்களா? உலகத்துலே யோக்கியனுக்குன்னு சல்லிக் காக சலுகையாச்சும் உண்டா? ஊரெல்லாம் கூடி உனக்குக் கிரீடமா தூக்கித் தரப் போறாக? இப்படியும் பொழைக்கத் தெரியாத பயலும் இருப்பானா, கிடைச்சதையும் குடுத்துட்டு நிக்கிற கிறுக்கன் மாதிரி அலையுறானேன்னு ஒன்னைக் கேலியும் கிண்டலும் தானே செய்வாக?

மனம் ஒரு நிலைப்படவில்லை.

மேஜையிலிருந்த கைக் கடிகாரத்தை எடுத்துப் பார்த்தான். மணி 1–15. வயிறு பசிப்பது போலிருந்தது. உதடு தொண்டையெல்லாம் உலர்ந்து போயிருந்தது. லைட்டைப் போடாமலேயே அடுப்பங்கரைக்குள் நுழைந்து, ஊகத்திலேயே கையால் துழாவி, செம்பை எடுத்துத் தண்ணீர் குடித்தான். செம்பை மறுபடி கீழே வைக்கிறபோது அந்தச் சப்தத்தில் லட்சுமி தலையைத் தூக்கிப் பார்த்தாள்.

''என்ன, இன்னும் தூங்கலியா?''

''தூக்கம் வரலே''

''பெறகு?''

''ஒண்ணுமில்லே. தூங்கிடுவேன்''

அவள் விட்ட இடத்திலிருந்து தூக்கத்தைப் பிடித்தாள். சீரான மூச்சுச் சப்தம் வருகிறது. இவன் கட்டிலில் உட்கார்ந்து சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான். மனம் அதுபாட்டுக்குக் கண்டமேனிக்கு ஓடிக் கொண்டிருந்தது...

பஸ் நிலையத்தில் நின்று கொண்டிருந்த டவுன் பஸ்ஸில் மாடசாமி டிக்கட் போட்டுக் கொண்டிருந்தான். டைம் கீப்பர் ஆபீஸில் டிரிப் சீட்டில் கையெழுத்து போட்டு விட்டு அதோ டிரைவர் வருகிறார். அவரை மறித்துக் கொண்டு இன்னொரு டிரைவர்.

''என்ன பாஸ், உங்க ஜோடி யாரு?''

''மாடசாமி''

''எந்த மாடசாமி?''

''நம்ம சிரிச்ச முகம்!''

''அட நம்ம சிரிச்ச முகமா? பெரிய பேஜார் இல்லே?''

''அதை ஏன் கேட்கே? ஒரே போர்...''

அவர்கள் கிண்டலாய்ச் சிரித்துக் கொள்வதை இவன் கவனிக்கிறான்.

மாடசாமின்னு பெயரைச் சொன்னால் ஆளைத் தெரிய மாட்டேங்குதோ...? சிரிச்ச

மேலாண்மை பொன்னுச்சாமி


முகம்னு சொன்னால்தான் தெரிகிறதோ? இவன் சிடுசிடுப்பான ஆளாம். எந்நேரமும் உர்ரென்று இருப்பானாம். சிரிப்பையே இவனிடம் பார்க்க முடியாதாம். அதைக் கேலி செய்கிற பட்டப் பெயர்தான், சிரிச்ச முகம்.

மனம் விட்டுச் சிரிச்சுப் பேசி, கலகலப்பா இருக்குற மாதிரியா... தொழிலும் வாழ்க்கையும் இருக்கு? அந்த லட்சணத்துலேயா மனுஷங்களும் இருக்காங்க? நல்ல வாழ்நிலையிலேயும், நல்ல சூழ்நிலையிலேயும் தானே நல்ல மனநிலை அமையும்? சுற்றிலும் தீ பற்றிக்கிட்டு எரிஞ்சுக்கிட்டிருக்கும் போது, நடுவுலே நின்னு குளுமையாச் சிரிக்கவா முடியும்?

பஸ்ஸிலே ஏறி உக்கார்கிற சகலரும் கண்டக்டரைப் பகையாளியை பாக்குற மாதிரித்தானே பாக்குறாக? அனுதாபமான ஒரு பார்வையைக் கூடப் பார்க்க முடியலியே.

அறுபது பைசா டிக்கட்டுக்கு ஐந்து ரூபாய் நோட்டு. 1.60 டிக்கட்டுக்கு இருபது ரூபாய் நோட்டு. அதுவும் மனுசனா மதிச்சு நீட்டுவாகளா? ம்ஹூம்! இளப்பமாய் — அலட்சியமாய் நீட்டுவாக. எல்லாரும் நோட்டாகவே நீட்டினா... சில்லறைக்கு நான் எங்க போக? கஜானாவா எம் பைக்குள்ளே இருக்கு? இருபத்தஞ்சு ரூபாய்க்குச் சில்லறை மாத்திப் போட்டாலும், அடுத்த டிரிப்லேயே காலியாயிடுது. ஒவ்வொரு டிக்கட்டுக்கும் சில்லறை சரி பார்த்துக் கொடுக்கிறதுக்குள்ளே, மூளையே கசங்கிப் போகுது.

இதுவே ஐந்து பைசாக் கொறைஞ்சாக் கூட முணுமுணுப்பு. காய்ஞ்சு போன மனங்களிலிருந்து பாய்ஞ்சு வர்ற வசவுகள். பெருக்கல் கணக்கு போட்டுப் பார்த்து, தினமும் கண்டக்டர் நூறு ரூபாய்ப் பொட்டலத்தோடு வீட்டுக்குச் செல்வதாகப் பொருமிப் புகைஞ்சு பேசுற பேச்சுகள்... இப்படி. .



குமைஞ்சு குமைஞ்சு, அடங்குற — உறையுற — உணர்ச்சியெல்லாம், மூஞ்சியிலே வந்து சிடுசிடுப்பா வந்து நின்னுக்கிடுது. நான் என்ன செய்ய?

ஸ்டியரிங்கில் கை வைத்த நிலையில் ''போகலாமா'' என்றார் டிரைவர். மாடசாமி 'உம்'மென்றான். விசிலடித்தான். பஸ் உயிர் பெற்றவுடன் —

வெளியே சிதறி நின்ற பயணிகள் 'மொளோ'ரென்று ஓடி வந்து இடித்துக் கொண்டு தொற்றினர்.

''உள்ளே வாங்க. ஏறுங்க. டிக்கட், டிக்கட்... எங்கே போகணும்? தொண்ணூறு? சில்லறையில்லியா? பதினைஞ்சு பைசா இருக்கா? அதுவுமில்லியா? படியிலே நிக்குறது யாரு? எத்தனை தடவை சொல்றது? உள்ளே வாய்யா''

மாடசாமி என்ற மெஷின் ஓடத் துவங்கியது. ஓட ஓடச் சூடேறிக் கொண்டிருந்தது. நெருக்கியடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த மனிதர்கள். நடுவில் ஆண் பெண் வித்தியாசமில்லாமல் அப்பிப் போய் நின்ற — தொங்கிய — மனிதர்கள்.



நிருபர்: அதற்குள்ளாகவா உங்கள் கட்சியில் இரண்டு கோடிப் பேர் உறுப்பினர்களாகச் சேர்ந்து விட்டார்கள்!

தலைவர்: ஆமாம்; தம்பி தனுஷ்கோடியும், புத்திரன் [illegible]ணியகோடியும் தான்!

— திருமங்கலம் பிச்சைமணி.

''டிக்கட் யாருக்கு வேணும்? கேட்டு வாங்குங்க... ப. கட்டுலே யாரு டிக்கட் எடுக்கணும்? சீக்கிரம்.''

மாடசாமி இன்வாய்ஸ் எழுதுவதற்கு முன்பு, கடைசி வரைக்கும் கேட்கிற மாதிரி ''டிக்கட் வேணுமா? யாரும் டிக்கட் எடுக்க வேண்டியிருக்கா?'' என்று கத்தினான். நிற்க இடமில்லை. டிரைவர் பக்கத்தில் ஒரு கம்பியில் முதுகைச் சாய்த்து இன்வாய்ஸை எழுதினான். இடது உள்ளங்கைக்குள் அடங்கியிருந்த டிக்கட் கற்றைகளில் நம்பரைச் சரி பார்த்துச் சரிபார்த்து எழுதிக் கொண்டிருக்கும் போதே...

டிரைவருக்கு இடது பக்கம் ஒற்றைச் சீட்டில் உட்கார்ந்திருந்த பெரியவர், ''ஆமர் நாட்டுக்கு ஒரு டிக்கட்'' என்று இருபது ரூபாயை நீட்டினார்.

மாடசாமிக்குள் தீ பிடித்த மாதிரியிருந்தது.

''எங்க ஏறினது?''

''செவகாசி''

''இந்நேர வரைக்கும் டிக்கட் வாங்காம, எங்க போனீரு? தொண்டை காயக் கத்துனேனே, காதுலே வுழலே?''

பெரியவர் முகத்தில் மெல்லிசாக மிரட்சி பரவியது. சட்டென்று அது சினமாக மாறிக் கொண்டது. ''இங்க நீங்க வந்தாத்தானே, வாங்க முடியும்?''

''இங்க நாலு தடவை வந்தேன்லே? ஒம்ம பக்கத்துலே இருக்கிறவுகளுக்கெல்லாம் டிக்கட் கொடுத்தேன்லே? நீரு ஏன் வாங்கலே?''

''நீங்க கேட்டாத்தானே நான் வாங்க முடியும்?''

''யோவ், வாங்காம இருந்ததுமில்லாம, சண்டி வழக்குமா பண்றீரு?''

மாடசாமி சீற, பெரியவரும் பாய, வண்டிக்குள் வெக்கை பரவியது. டிரைவர் குறுக்கிட்டு மாடசாமியைச் சமாதானப் படுத்தினார்.

''சரி சரி... பேச்சை நிறுத்திட்டு டிக்கட்டைக் கொடுத்துத் தொலே!''

இவனுக்கு எரிச்சல் எரிச்சலாய் வந்தது. எரித்து விடுவதைப் போல அவரைப் பார்த்தான். ''சில்லறையில்லியா?''

''இல்லே!''

டிக்கெட்டைக் கிழித்துக் கொடுத்தான். விரலிடுக்கில் நீளவாக்கில் மடித்து வைத்திருந்த ரூபாய்களில் உருவி உருவிப் பதினெட்டு ரூபாயைக் கொடுத்தான். பையைத் திறந்து சில்லறையைக் குலுக்கினான்.

''பத்துப் பைசா இருக்கா? அம்பது பைசாத் தாரேன்.''

''இல்லியே!''

பையைக் குலுக்கிக் குலுக்கிப் பார்த்தான். முப்பத்தைந்து காசுதான் தேறியது. கொடுத்தான்.

பெரியவர் உள்ளங்கையில் வைத்து எண்ணி எண்ணிச் சரிபார்த்து விட்டு, ''இன்னும் அஞ்சு பைசா?'' என்றார்.


''இல்லே''

''நான் அஞ்சு பைசாக் குறையக் கொடுத்தா... நீங்க டிக்கட் தருவீகளா?''

மாடசாமிக்குச் சுரீரென்று அடிபட்டது போலிருந்தது. உள் மனம் வலித்தது. 'பொறு, பொறு' என்று லகான் போட்டுக் கொண்டிருந்த உள் மனமே அலறி விட்டது. விருட்டென்று நிமிர்ந்த பார்வையில் அக்கினி...

வெடித்து விட்டான். வார்த்தைகள் மனத்தின் அனலாய்ச் சிதறின. பெரியவரும் விடாக்கண்டனாக வார்த்தைக்கு வார்த்தை

# வெறும் பாசத்தினால் மட்டுமே இவர்களின் மருத்துவக் கட்டணங்களை செலுத்த முடியாது



## மெடிக்ளைம் உதவியால் செலுத்த முடியும்

ஆம், மெடிக்ளைம்—ஒரு ஹாஸ்பிடலைசேஷன் மற்றும் டொமிசிலியரி ஹாஸ்பிடலைசேஷன் பெனிஃபிட் பாலிஸி, இது உங்கள் குடும்பத்தினர்க்கு ஒரு வரப்பிரசாதம்.

நீங்கள் எத்தனை அன்பு செலுத்தினாலும் சரி...உங்கள் கம்பெனி எத்தனை மருத்துவத் திட்டம் வழங்கினாலும் சரி...அவை உங்களுக்கு ஏற்படும் பெரிய நோய்கள், அறுவை சிகிச்சைகள், விபத்துகள் போன்றவைகளுக்குத் தேவைப்படும் மருத்துவ பராமரிப்புக்கு ஆகும் கட்டணங்களை செலுத்திவிட முடியாது.

ஆகவே உங்களுக்குத் தேவை மெடிக்ளைம்.

உங்களுடைய தேவைகளுக்கு ஏற்ப - பலரக மருத்துவ வசதிகளை வழங்குகிறது மெடிக்ளைம்.

வீட்டில் இருந்து கொண்டே மருத்துவமனையில் பெறும் சிகிச்சை வசதிகளுக்கும் கூட பாதுகாப்பளிக்கிறது.

இத்திட்டத்தின் கீழ் குடும்பத்தினர் அனைவருக்கும் பாதுகாப்பு செய்து கொண்டால், பிரிமியத்தில் தள்ளுபடியும், வரிவிலக்கும் கிடைக்கும்.

பாசத்தின் பிரதிபலிப்பாக உங்கள் குடும்பத்தினர்களுக்கு, மெடிக்ளைம் திட்டத்தின் கீழ் பாதுகாப்பு செய்து கொள்ளுங்கள்.

இதற்கு ஆகும் செலவோ மிகச் சொற்பம், உங்களுக்கு இதன் மூலம் கிட்டும் பலனோ மிக்க அதிகம்.

இத்திட்டம் உங்கள்பால் மிக்க அக்கறை காட்டுகிறது.

| ஆண்டொன்றுக்கு பிரிமியம் ரூ. | ஹாஸ்பிடலைசேஷன் ரூ. | டொமிசிலியரி ஹாஸ்பிடலைசேஷன் ரூ. |
|---|---|---|
| 200 | 10,500 | 3,100 |
| 250 | 17,600 | — |
| 350 | 25,500 | — |
| 600* | 37,750 | 5,250 |
| 840* | 52,750 | 7,400 |
| 1300* | 82,500 | 11,500 |

வயது வரம்பு: 5-70 ஆண்டுகள்

* கூடுதல் பிரிமியம் செலுத்துவதின் பேரில் பர்சனல் ஆக்ஸிடென்ட் காப்பு கிடைக்கும்.

**MED+CLAIM**

மெடிக்ளைம் வழங்குவோர் நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

**NEW INDIA ASSURANCE**

A subsidiary of the General Insurance Corpn. of India

**எந்த விபத்திற்கும் நாங்கள் பாதுகாப்பு அளிக்கிறோம்!**

CONTOUR ADS-NIA-278E/87



## வாசகர் பங்கு:

# தளபதி திடமதி பரிசு ரூ.400/-

ஆறு மாதங்களாக தளபதி திடமதிக்கு 'விட்' அடிக்க உதவினீர்கள். அவருக்குப் பிரியா விடைகொடுப்பதற்குமுன் இதோ கடைசிவாய்ப்பு! அரசியல் — சமுதாயப் பிரச்னைகள் பற்றிய தளபதி திடமதியின் அறிவுக் கொழுந்தான கருத்தை மேடைப் பேச்சாகவோ, உரையாடலாகவோ கீழே கூப்பனில் எழுதி அனுப்பவும். பிரசுரமானால் பரிசு ரூ. 25. அடுத்து வரும் வாரங்களில் ஒருவரே எழுதிய சில துணுக்குகள் பிரசுரமானால் ஒவ்வொரு முறையும் பரிசு இரட்டிப்பாகும். அதிகபட்சப் பரிசு ரூ. 400/—. உறை மீது, "தளபதி திடமதி" என்று குறிப்பிடுக.

கூப்பன்:

கல்கி இதழ்: 24.4.88 — முடிவு தேதி: 3.5.88.

தளபதி திடமதி: "...........................

...........................

...........................

...........................

...........................

...........................

...........................

...........................

...........................

...........................

...........................

..........................."

என் பெயர்: ...........................

விலாசம்: ...........................

...........................

யாக மோதினார். 'நீ, வா, போ' என்று தரம் தாழ்ந்து ஆபாசமாயிற்று.

மற்றவர்கள் தலையிட்டனர். இருவரையும் அடக்கினர்; சமாதானப்படுத்தினர். பஸ்ஸுக்குள் வெக்கை குறைந்தது. குண்டும் குழியுமான ரோட்டில் பஸ், அதுபாட்டுக்கு ஓடிக் கொண்டிருந்தது. கிராமங்களைக் கடந்தது. நின்றது. இறக்கியது. ஏற்றியது. போய்க் கொண்டேயிருந்தது.

ஆமர் நாடு போய் விட்டுச் சிவகாசி வந்து சேர்ந்த பஸ், நிலையத்துக்கு வெளியே நின்றது. இந்த டிரிப்போடு இவர்கள் பணி நேரம் முடிகிறது. அடுத்த டிரைவர் கண்டக்டரிடம் வண்டியை ஒப்படைக்க வேண்டும்.

டிரைவர் இறங்கி டீக்கடையை நோக்கிப் போய் விட்டார். பயணிகளெல்லாம் இறங்கிய பிறகு, மாடசாமி வழக்கம் போல் ஒவ்வொரு சீட்டாகப் பார்த்தான். குனிந்து சீட்டுக்கு அடியிலும் பார்த்து வந்தான். டிரைவர் சீட்டுக்கு இடது பக்கமுள்ள ஒற்றைச் சீட்டிற்கும், பாடிக்கும் நடுவில் — இடுக்கில் — ஒரு சிறிய பேப்பர் பொட்டலம்.

அலட்சியமாக எடுத்து விரித்தான்; உடம்பெல்லாம் அதிர்ச்சி மின்சாரமாய் ஓடிப் பரவியது.

தங்கச் செயின். புத்தம் புதுசான ரெட்டை வடம். உள்ளங்கையில் தூக்கிப் போட்டுப் பார்த்தான். அஞ்சு பவுனுக்குக் குறையாது. மனத்துக்குள் பிரளயம். ஓங்கியடிக்கிற அலையாக நினைவுகள்.

"கல்யாணமாகி நாலு வருஷமாகுது. ஒரு மூக்குத்தியாச்சும் வாங்கி, இந்தான்னு தந்திருக்கீகளா? நீங்களும் உங்க சம்பாத்தியமும்..."

அற்பத்திலும் அற்பமாய்த் தனக்குத் தன்னையே உணர்த்துகிற லட்சுமியின் அந்தச் சொற்கள் நெஞ்சுக்குள் ஒலித்தன.

"இந்தா, அஞ்சு பவுன் நகை" என்று நீட்டினால்... லட்சுமியின் மனம் எப்படி மலர்ந்து வெடிக்கும்... ஆனந்த மின்னல் பளிச்சிடுகிற அவளது கண்கள். ஆச்சரியப் புன்னகை நிறைந்து பிரகாசிக்கிற சிவந்த முகம். சிரிப்பு மலர்கள் பூத்து ஈரக் குளிர்ச்சியாக மின்னுகிற உதடுகள்...

மயங்கிய மனத்தில் நறுக்கென்று கிள்ளுவதைப் போல் ஓர் உணர்ச்சி. மனத்துக்குள் சப்பென்று விழுகிற ஓர் அடி. 'சீ, நாயே! அடுத்தவன் நகையை அமுக்கி, ஒம் பொண்டாட்டி கழுத்திலே போடவா ஆசைப் படுதே? நீயெல்லாம் மனுசந்தானா? சோத்தைத்தான் திங்கியா?'

உள் மனத்தின் இந்த உலுக்கலில் அப்படியே கலகலத்துப் போனான்.

பணிமனைக்குப் போகிற ஒரு பஸ்ஸில் ஏறிக் கொண்டான். மனசுக்குள் ஒரு திகிலான பரவசம் கனமையாக அழுத்த... நடுக்கத்துடன் கணக்கு முடித்தான்.

மானேஜர் அறைக்குள் நுழைந்தான். வெள்ளைப் பேப்பரில் நகைப் பொட்டல விவரம் எல்லாம் எழுதிக் கையெழுத்திட்டு, மானேஜரிடம் நகையையும் ஒப்படைத்த

பிறகுதான், மனத்துக்குச் சுலபமாகச் சுவாசிக்க முடிந்தது.

பாரத்தை இறக்கி வைத்துவிட்ட நிம்மதி. அலுப்பு தீரக் குளித்த மனச்சாந்தி...

அப்போது சாந்தியடைந்த மனம், இப்போது அலைபாய்கிறது. நாணயமாய் ஒப்படைத்த யோக்கியம், சரிதானா? கிறுக்குத்தனமானதுதானா? நாலு பேரு பாராட்டுவார்களா? பிழைக்கத் தெரியாதவன் என்று நமுட்டுச் சிரிப்புச் சிரிப்பார்களா?

தேள் கடிபட்ட குரங்காக மனம் ஆடிக் குதித்து அலைமோதுகிறது. தூக்கத்தை அண்ட விடாமல் நிம்மதியைப் பிறாண்டுகிறது.

லட்சுமிக்குத் தெரிந்தால்... என்ன சொல்வாள்? இளப்பமாய்ச் சொல்வாளோ... 'கடவுளாப் பாத்துக் கையிலே தூக்கிக் கொடுத்ததையும் தொலைச்சிட்டு வந்து நிக்கிறீகளே... நீங்க ஒரு ஆம்பளைதானா?' என்று சீறுவாளோ...

சிகரெட்டை அணைத்தான். அலைந்து தவிக்கிற மனத்தோடு படுத்தான். வலுக்கட்டாயமாக இமைகளை மூடினான். மூடிய இமைகளுக்குள் ஏதேதோ காட்சிகள்...

இரண்டு மூன்று நாட்கள் ஓடி விட்டன. சினிமாவுக்குப் போய் விட்டு, பத்து மணிக்கு மேல் வீட்டுக்கு வந்தான்... அதிசயமாய் விளக்கு எரிந்தது.

இன்னும் லட்சுமி தூங்கலியா...

காத்திருந்தவளைப் போல உற்சாகமாக எதிர் கொண்டாள்.

''எங்க போனீக, இந்நேரம் வரை?''

''ஏன், சினிமாவுக்குத்தான். எதுக்குக் கேக்கே?''

''உங்களைத் தேடி ஒருத்தர் வந்து, ஏழு மணியிலேயிருந்து காத்திருந்தாரு...''

''என்னவாம்?''

''அவரு சொன்னதைக் கேட்டு எனக்கு மனமே கலங்கிப் போச்சு. உங்களை நெனைச்சா, எனக்கு எம்புட்டுப் பெருமையாயிருக்கு, தெரியுமா?''

தலையும் புரியாமல் வாலும் புரியாமல் தவித்த மாடசாமி சிடுசிடுப்பாய்ச் சீறினான். ''என்னங்கிறதைச் சட்டுன்னு சொல்லித் தொலையேன்!''

வீட்டு வாசலில் யாரோ நுழைகிற செருப்புச் சப்தம். திரும்பினான். பெரியவர். அன்று பஸ்ஸில் இவனுடன் சண்டை போட்ட அதே பெரியவர். ஆனால், ஆள் ரொம்பக் கலகலத்துப் போயிருந்தார். கண்ணில் கனத்து நின்ற சோகம். துன்பத்தில் புரட்டியெடுக்கப்பட்ட வாட்டம், முகத்தில்.

விளங்காமையோடு திகைத்தான்.

''என்ன ஐயா?''

வெட்க உணர்வும் நன்றி உணர்வும் முரண்பட்டுத் ததும்ப, கையெடுத்துக் கும்பிட்டார்.

''கோயில் கட்டிக் கும்புடணும் தம்பி, உங்களை... எங்க குடும்பத்துக்குக் குல தெய்வமே... நீங்கதான்...'' அவர் கண்ணிமைகள் ஈரத்தில் நனைந்தன.

''கையிலே கிடைச்ச ரூவாயைக் கூட கண் காணாம அமுக்கிக்கிடுற இந்தக் கலி காலத்துலே... அஞ்சு பவுன் தங்க நகை கெடைச்சும் அதை நாணயமா ஒப்படைச்சிருக்கீகளே தம்பி... உங்க கூட அஞ்சு பைசாவுக்காக அற்பத்தனமாச் சண்டை போட்டேனே அன்னிக்கு....''

''அதெல்லாம் இருக்கட்டும்... அப்ப.. அந்த நகை உங்களுடையதுதானா?''

''ஆமா தம்பி, ஒன்றரை வருஷமா நகைப் பிரச்னையிலே என்னோட ஒரே பொண்ணு வாழா வெட்டியா வந்து கிடந்தா. ஊர்லே பஞ்சாயத்துப் பண்ணி, அஞ்சு பவுன் நகை போட்டு புருஷன் கூட அனுப்புறதுன்னு முடிவு செய்தாக. தாய்க்குத் தாயா இருந்து காலம் பூராச் சோறு போட்ட பூர்வீகப் புஞ்சையை வித்து, அந்தப் பணத்துலேதான் அன்னிக்கு நகை வாங்கிக்கிட்டு ஊர் போனேன்.

"நகை தொலைஞ்சதுன்னு தெரிஞ்ச வுடனே... எம் பொஞ்சாதி மருந்தைக் குடிச்சு ஆஸ்பத்திரியிலே அரை உசுராக் கிடக்குரு

''அய்யய்யோ... அப்புறம்?''

''நீங்க ஒப்படைச்ச நகையிலேதான் எம் பொண்ணோட வாழ்க்கையும், வம்ச விருத்தியும் அடங்கியிருக்கு தம்பி...''

''சரி.... அதுக்கு நான் என்னமும் செய்யணுமா?''

''மானேஜர்கிட்டே பேப்பர் எழுதிக் குடுத்தேன். அவர் ரொம்ப நேரம் என்னை விசாரிச்சாரு. உங்களையும் விசாரிக்கணும்னு சொன்னாரு..''

''அவ்வளவுதானே! நீங்க அன்னிக்கு அந்த சீட்லேதான் உக்காந்திருந்தீக. அந்தப் பொருள் உங்களுடையதா இருக்க நியாயமிருக்குன்னு, மானேஜர்கிட்டே சொல்லிட்டேன்... போதுமாய்யா...? கவலைப்படாம போங்க!''

''அது போதும் தம்பி... உங்களை மாதிரி ஒண்ணு ரெண்டு நல்ல ஆத்மாக்களாலே தான் மழையும் பெய்யுது. மண்ணும் வெளையுது. நீங்க செய்ற புண்ணியமே உங்களையும் உங்க குடும்பத்தையும் என்னென்னைக்கும் செழிப்பா வைச்சிருக்கும் தம்பி... நான் வாரேன் தம்பி, நான் வாரேம்மா...''

அவர் போய் விட்டார். லட்சுமியின் பெருமிதமான பார்வையைச் சந்தித்தான். தர்மமே கைநீட்டித் தங்கக் கிரீடத்தைத் தலையில் சூட்டுவது போலிருந்தது. மனித இனமே கையெடுத்து வணங்குவதைப் போல ஓர் உணர்வுச் சிலிர்ப்பு...

தான் செய்த ஒரு சிறிய செயலில்... ஒரு பெண்ணின் வாழ்க்கையே புதிதாகக் கால் ஊன்றியிருப்பதை நினைக்கையில்.... அவனுக்கே பெருமிதமாக இருந்தது.

இப்போது — அவனுள் ஊசலாட்டமில்லை. தெளிந்த நீரோடையாய் ஒரே திசையில் ஓடியது, மனம். மனத்தின் பெருமிதத்தில் அவன் முகமெல்லாம் புன்னகை.



# பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

## ஐந்தாம் அத்தியாயம்

## ராக்கம்மாள்

பழுவேட்டரையரும் பார்த்திபேந்திரனும் சேர்ந்து கடற்கரையோரமாக உலாவச் சென்ற பிறகு நந்தினி சிறிது நேரம் தனியாக இருந்தாள். கடல் அலைகளைப் பார்த்த வண்ணம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

"ராணி அம்மா!" என்ற குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

கலங்கரை விளக்கின் காவலர் தியாகவிடங்கரின் மருமகள் அங்கே நின்றாள்.

"நீ யார்?" என்று நந்தினி கேட்டாள்.

"என் பெயர் ராக்கம்மாள்!"

"எங்கே வந்தாய்?"

இதற்கு மறுமொழி சொல்லாமல் ராக்கம்மாள் நந்தினியின் முகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

"என்னடி பார்க்கிறாய்? என் முகத்தில் அப்படி என்ன இருக்கிறது?"

ராக்கம்மாள் திடுக்கிட்டு, "மன்னிக்க வேண்டும், அம்மா! தங்களைப் பார்த்ததும் இன்னொரு முகம் எனக்கு ஞாபகம் வந்தது. ஆனால் அப்படி ஒரு நாளும் இருக்க முடியாது" என்றாள்.

"என்னடி உளறுகிறாய்! எது எப்படியிருக்க முடியாது?"

"அந்த ஊமை வெறியளுக்கும் தங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இருக்க முடியாது."

"அவள் யார் ஊமை?"

"ஈழத்தில் ஒருத்தி இருக்கிறாள்; என் மாமனாருக்குப் பெரியப்பன் மகள். சில சமயம் இங்கேயும் வருவாள்."

"அவளுக்கும் எனக்கும் என்ன?"

"அதுதான் சொன்னேனே? உறவு ஒன்றும் இருக்க முடியாது என்று."

"பின் ஏன் என்னைப் பார்த்ததும் அவளுடைய ஞாபகம் வந்தது?"

"என் கண்களின் கோளாறுதான். தங்கள் முகம்......"

"அவள் முகம் மாதிரி இருந்ததா?"

"முதலில் அப்படித் தோன்றியது."

"ராக்கம்மா! இப்போது அந்த ஊமை இங்கே இருக்கிறாளா?"

"இல்லை, அம்மா! அபூர்வமாக எப்போதாவது வருவாள்."

"மறுபடியும் வரும்போது என்னிடம் அழைத்து வருகிறாயா?"

"எதற்காக ராணி அம்மா!"

"என் முகம் மாதிரி முகமுடையவளைப் பார்க்க விரும்புகிறேன்."

"அதுதான் என் கண்களின் பிரமை என்று சொன்னேனே?"

"எதனால் அப்படி நிச்சயமாய்ச் சொல்கிறாய்?"

"ராணி! தாங்கள் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர்தானே?"

"ஆமாம். நீ?"

"நானும் பாண்டிய நாட்டாள். சற்று முன் நான் சொன்ன ஊமை சோழ நாட்டவள். ஆகையால்....."

"இருந்தாலும் பாதகமில்லை, உன்னைப் போல் இன்னும் சிலரும் அவளைப் பற்றி எனக்குச் சொல்லியிருக்கிறார்கள். அவளை என்னிடம் அழைத்து வருகிறாயா? அழைத்து வந்தால் உனக்கு வேண்டிய பொருள் தருவேன்."

"ராணி! அவளை அழைத்து வருவது சுழற் காற்றை அழைத்து வருவது போலத்தான். இருந்த இடத்தில் அவள் இருக்கமாட்டாள். பிறர் சொல்லுவதையும் கேட்க மாட்டாள். வெறி பிடித்தவள் என்று சொன்னேனே?"

"சரி! நீ எதற்காக இப்போது வந்தாய்? அதையாவது சொல்!"

"ராணி! சில நாளைக்கு முன்பு இரண்டு பேர் இங்கே வந்தார்கள். தங்கள் பெயரைச் சொன்னார்கள்."

"என் பெயரை ஏன் சொன்னார்கள்?"

"தங்கள் காரியத்துக்காக அவசரமாக இலங்கைக்குப் போக வேண்டும் என்றார்கள். என் புருஷனை அவர்களுக்குப் படகோட்ட அனுப்பி வைத்தேன்."

"திரும்பி வந்துவிட்டானா?"

"வரவில்லை; அதுதான் கவலையாயிருக்கிறது. அவருக்கு ஏதாவது நேர்ந்திருந்தால்......"

"ஒன்றும் நேராது. கவலைப்படாதே! அப்படி ஏதாவது நேரிட்டிருந்தால் உன்னை நான் பார்த்துக் கொள்கிறேன். படகிலே போன மனிதர்களைப் பற்றி ஏதாவது தெரியுமா?"

"அவர்கள் திரும்பி வந்துவிட்டார்கள். சற்று முன் ஆந்தையின் குரல் கேட்டதே? அதைக் கவனிக்கவில்லையா?"

"கவனித்தேன். அதனால் என்ன?"

"அது மந்திரவாதியின் குரல் என்று தெரிந்து கொள்ளவில்லையா?"

"உனக்கு எப்படி அது தெரியும்? நீ மந்திரவாதியைச் சேர்ந்தவளா?"

"ஆமாம், ராணி!" என்றுசொல்லிவிட்டு, ராக்கம்மாள் கையினால் கோலம் போட்டுக் காட்டினாள்.

நந்தினி அவளை வியப்புடன் உற்றுப் பார்த்துவிட்டு, "இப்போது அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? உனக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"மந்திரவாதி தங்களைப் பார்ப்பதற்காகக் காத்திருக்கிறார்."

"என்னை வந்து பார்ப்பதுதானே? எதற்காகக் காத்திருக்க வேண்டும்?"

"இப்போது இங்கு வந்த பல்லவனை மந்திரவாதி சந்திக்க விரும்பவில்லை. ஈழத்தில் அவனைப் பார்த்தாராம். தங்கள் கணவரைப் பார்க்கவும் விரும்பவில்லை."

"மந்திரவாதியை நீ பார்த்தாயா?"

"சற்று முன் ஆந்தைக் குரல் கேட்டுப்போயிருந்தேன். தங்களை அழைத்து வரும்படி சொன்னார். குழகர் கோயிலுக்கருகில் ஓடைக் கரையில் ஒளிந்திருப்பதாகச் சொன்னார். வருகிறீர்களா, ராணி?"

"அது எப்படி நான் போக முடியும்?"

"குழகர் கோயிலுக்குப் போவதாகச் சொல்லிவிட்டுப் போகலாம்."

"நல்லயோசனைதான்; வேறு துணை வேண்டாமா?"

"அவசியமில்லை; வேண்டுமானால்

சேந்தன் அமுதனைத் துணைக்கு அழைத்துப் போகலாம்.''

''அவன் யார்?''

''தஞ்சாவூர் ஊமையின் மகன்!''

''சிவ சிவா! எத்தனை ஊமைகள்?''

''இந்தக் குடும்பம் சாபக்கேடு அடைந்த குடும்பம். சிலர் பிறவி ஊமைகள். சிலர் வாயிருந்தும் ஊமைகள். என் புருஷன் அப்படி. அருமையாகத்தான் பேசுவார். நானும் பேச வேண்டாம் என்று திட்டம் செய்திருக்கிறேன்.''

''இலங்கை ஊமைக்கு மக்கள் உண்டா? உனக்குத் தெரியுமா?''

''ஒரு தடவை இரட்டைக் குழந்தைகள் பெற்றுள்ளாம். குழந்தைகள் என்ன ஆயின என்று ஒருவருக்கும் தெரியவில்லை. நானும் அந்த இரகசியத்தைத் தெரிந்து கொள்ள எத்தனையோ நாட்களாக முயன்று வருகிறேன். இதுவரை பலிக்கவில்லை.''

''தஞ்சாவூர்க்காரன் இங்கே எதற்காக வந்திருக்கிறான்?''

''அவனுடைய மாமன் மகள் பூங்குழலியைத் தேடிக் கொண்டு வந்தான். அவள் இல்லை. அதனால் காத்திருக்கிறான்.''

''அவள் எங்கே போய் விட்டாள்?''

''நானே சொல்ல வேண்டும் என்றிருந்தேன். மந்திரவாதியை என் புருஷன் படகில் ஏற்றிக் கொண்டு போனதற்கு மறுநாள் இன்னும் இரண்டு பேர் வந்தார்கள். அவர்களைப் பிடிப்பதற்காகப் பழுவூர் ஆட்களும் தொடர்ந்து வந்தார்கள். அவர்களில் ஒருவனை என் நாத்தி படகில் ஏற்றிக் கொண்டு இரவுக்கிரவே இலங்கைக்குப் போனாள்.''

''அவளுக்குப் படகு விடத் தெரியுமா?''

''படகு விடுவதே அவளுக்கு வேலை. படகு விடாத நேரங்களில் கோடிக்கரைக் காடுகளில் சுற்றி அலைவாள். இந்தக் காட்டில் அவளுக்குத் தெரியாத மூலை முடுக்கு ஒன்றுமே கிடையாது.

''அவள் இன்னும் திரும்பி வரவில்லையென்றால், அதைக் கொண்டு நீ என்ன ஊகிக்கிறாய்?''

''யாரோ கடலில் முழுகிப் போய் விட்டதாக இவர்கள் அலறி அடித்துக் கொள்கிறார்களே, அது நிச்சயமல்லவென்று சொல்கிறேன். பூங்குழலி வந்த பிறகுதான் அது நிச்சயமாகும்.''

''அந்தப் பெண்ணும் முழுகியிருக்கலாம் அல்லவா?''

''அவள் முழுக மாட்டாள். கடல் அவளுக்குத் தொட்டில். மேலும்...''

''மேலும் என்ன?''

''சற்று முன்னால் கலங்கரை விளக்கின் உச்சியில் ஏறிப் பார்த்துக் கொண்டிருந்தேன். வெகு தூரத்தில் ஒரு படகு வருவது போல் தோன்றியது...''

''அப்புறம்?''

''அப்புறம் அது கரைக்கு வரவில்லை.''

''என்ன ஆகியிருக்கும்?''

''இங்கே கடற்கரை ஓரத்தில் கூட்டமாயிருப்பதைப் பார்த்துவிட்டு வேறு சதுப்பு நிலக் கால்வாயில் படகை விட்டுக் கொண்டு போயிருக்கக் கூடும்.''

''அது கூடச் சாத்தியமா?''

''பூங்குழலிக்குச் சாத்தியமில்லாதது ஒன்றுமில்லை. தஞ்சாவூர்க்காரனும் என்னுடன் உச்சிக்கு வந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கும் அப்படியே தோன்றியதாம்.''

''சரி; எப்படியாவது இருக்கட்டும்; நாம் இப்பொழுது குழகர் கோயிலுக்குப் போகலாம், வா!''

''துணைக்குச் சேந்தன் அமுதனைக் கூப்பிடட்டுமா?''

''வேண்டாம்! அவன் அவனுடைய மாமன் மகளைத் தேடட்டும். நாம் அதற்குக் குறுக்கே நிற்க வேண்டாம்.''

இருவரும் குழகர் கோவிலை நோக்கிப் புறப்பட்டார்கள். பூங்குழலியைப் போலவே ராக்கம்மாளுக்கும் கோடிக்கரையின் புதை சேற்றுக் குழிகளைப் பற்றி நன்கு தெரிந்திருந்தது. நந்தினிக்கு ஜாக்கிரதையாக வழிகாட்டி அழைத்துக் கொண்டு போனாள்.


இருவரும் குழகர் ஆலயத்தை அடைந்தார்கள். கோவில் பட்டர் அவர்களைக் கண்டு வியப்படைந்தார்.

''ராணி! இது என்ன இந்த நேரத்தில் தனியாக வந்தீர்கள்? பரிவாரங்கள் இல்லாமல்? முன்னாலேயே எனக்



குட்டிக்யூரா அழகி
Cuticura
TALCUM POWDER
SOOTHES
COMFORTS
BEAUTIFIES
குட்டிக்யூரா
டால்க்
இளம் பெண்கள் இதை
விரும்புவது இயற்கையே
CHAITRA-B-MP-2 TMR






நறுமணத்தின்
நளினம்
TOP 3 FRAGRANCES
Padmini
Fantasy
Gulistan
Padmini®
157, காமராஜ் சாலை, பெங்களூர்-560 001.

# திய

# லிப்டன் டாப் ஸ்டார் டீ
# சுவையே அதன் வலிமை



லிப்டன் டாப் ஸ்டார்.
சுவைதான் எப்போதும்
இதன் மாபெரும்
வலிமை. இப்போதுஇது
இன்னும் மேன்மையாக
திகழ்கிறது. ஏனெனில்
இவ்வகை இதர டீக்களைவிட அதிக சுவையும்
திண்மையும் கொண்ட மிஞ்சிடும் கலவையை புதிய
லிப்டன் டாப்ஸ்டார் கொண்டுவந்துள்ளது.
முயன்றுதான் பாருங்களேன்!
வேறுபாட்டினை நீங்களும் உணர்ந்திடுவீர்.

இப்போது லிப்டன் டாப் ஸ்டார் பொலிவான
புதிய பாக்கெட்டுகளில் கிடைக்கிறது.




லிப்டன்

**டாப் ஸ்டார் டீ**

ருசியும் சக்தியும்
வெற்றிகரமான கொண்ட இணைப்பு

LINTAS BLORE LIL TS P1 2416 TAM

குச் சொல்லியனுப்பியிருக்கக் கூடாதா? தங்களை வரவேற்க ஆயத்தமாக இருந்திருப்பேனே?'' என்றார்.

''அதற்கெல்லாம் இதுதானா சமயம், பட்டரே! சோழ நாட்டுக்குப் பெரும் விபத்து நேர்ந்திருக்கிறதே! சோழ நாட்டு மக்களின் கண்ணின் மணியான இளவரசரைக் கடல் கொண்டு விட்டதாகச் சொல்கிறார்களே? இளவரசரைக் காப்பாற்றி அருளும்படி குழகரிடம் முறையிட்டுக் கொள்வதற்காக வந்தேன்'' என்றாள் நந்தினி.

''அப்படியெல்லாம் ஒன்றும் நேராது, தாயே! தாங்கள் கவலைப்பட வேண்டாம். நம் பொன்னியின் செல்வருக்குச் சமுத்திர ராஜனால் ஆபத்து ஒன்றும் நேராது!'' என்றார் குருக்கள்.

''எதனால் அவ்வளவு உறுதியாகச் சொல்லுகிறீர்கள், பட்டரே?''

''இளவரசர் பிறந்த நட்சத்திரமும் லக்கினமும் அப்படி, அம்மா! உலகமாளப் பிறந்தவரைக் கடல் கொண்டு விடுமா? தாங்கள் வருத்தப்படாதீர்கள்! குழகரைப் பிரார்த்தித்துக் கொள்ளுங்கள். அவசியம் இளவரசரைக் காப்பாற்றுவார்!'' என்றார் பட்டர்.

இவ்வாறு கூறிவிட்டு சுவாமிக்குத் தீபாராதனை செய்து திருநீறும் கொடுத்தார். ''அம்மணி! தாங்கள் இவ்வளவு மேலான நிலைமையில் இருப்பது குறித்து மிக்க சந்தோஷம்!'' என்றார்.

''என்னை உங்களுக்கு முன்னமே தெரியுமா, பட்டரே?''

''தெரியும், ராணி! பழையாறையில் பார்த்திருக்கிறேன். வைகைக் கரைக் கோயிலிலும் பார்த்திருக்கிறேன். தங்கள் தமையன், திருமலை, — இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறான்?''

''ஆழ்வார்களின் பிரபந்தங்களைப் பாடிக்கொண்டு ஊர் ஊராய்த்திரிந்து கொண்டிருக்கிறான். அவனை நான் பார்த்து வெகு காலமாயிற்று.''

''அவனுக்குக் கூட அதைப் பற்றிக் குறைதான், அம்மா! தாங்கள் பழுவூர் ராணியான பிறகு அவனைப் பார்க்கவேயில்லையென்று வருத்தப்பட்டான்.''

''அதற்கென்ன செய்யலாம், ஐயா!



நான் புகுந்த இடத்தில் எல்லாரும் பரம சைவர்கள். அவனோ வீரவைஷ்ணவன். 'ஆழ்வார்க்கடியான்' என்று பட்டப் பெயர் வைத்துக் கொண்டு சைவர்களோடு சண்டை போட்டுக் கொண்டு திரிகிறான். அவனை எப்படி நான் சேர்ப்பது? புகுந்த வீட்டாரின் மனங்கோணாமல் நான் நடந்து கொள்ள வேண்டாமா?''

''உண்மை, தாயே! உண்மை! தங்கள் பதியின் மனங்கோணாமல் நடப்பதுதான் முக்கியமானது. ஆழ்வார்க்கடியான் எப்படியாவது போகட்டும்!''

பட்டரிடம் விடை பெற்றுக் கொண்டு இருவரும் கிளம்பினார்கள்.

''தனியாகப் போகிறீர்களே? சற்றுப் பொறுத்தால் நானும் வந்து விடுவேன்.''

''வேண்டாம் ஐயா! எங்களுக்காக அவசரப்பட வேண்டாம். இந்தப் பெண்ணுக்கு இந்தப் பக்கமெல்லாம் நன்றாய்த் தெரிகிறது. அதோடு இன்றைக்குத்தான் கோடிக்கரை முழுதும் அமளி துமளி படுகிறதே! பயம் ஒன்றுமில்லை. நாங்கள் போகிறோம்'' என்றாள் நந்தினி.

இரு பெண்களும் ஆலயத்துக்கு வெளியில் வந்தார்கள். பட்டர் கண் பார்வையிலிருந்து மறைந்ததும் ராக்கம்மாள் நந்தினியின் கையைப் பிடித்து ஆலயத்துக்குப் பின்புறமாக அழைத்துச் சென்றாள். சிறிது நேரத்துக்கெல்லாம் தாழைப் புதர்கள் செறிந்த ஓடைக் கரையை அடைந்தார்கள். நட்சத்திர ஒளியின் உதவியைக் கொண்டு ஓடைக்கரையோடு நடந்தார்கள்.




## ஆறாம் அத்தியாயம்

## பூங்குழலியின் திகில்!

தாழைப் புதரின் மறைவில் பூங்குழலி மூச்சைப் பிடித்துக் கொண்டு நின்றாள். மந்திரவாதியும் நந்தினியும் மெல்லிய குரலில் பேசிய போதிலும் அவர்களுடைய பேச்சு பெரும்பாலும் அவள் காதில் விழுந்தது.

இளவரசரைக் கடல் கொண்டது என்பதில் தனக்கு நம்பிக்கையில்லை என்று நந்தினி கூறியதற்கு, மந்திரவாதி "ராணி! என் பேச்சில் உங்க



னுக்கு எப்போதுமே நம்பிக்கையிருப்பதில்லை. எதனால் இப்போது அவநம்பிக்கைப்படுகிறீர்கள்?'' என்று கேட்டான்.

''இளவரசரின் ஜாதக பலத்தைப் பற்றி நீ கேட்டதில்லையா? சற்றுமுன்னால்கூட குழகர் கோயில் பட்டர்

அதைப் பற்றிச் சொன்னார்.''

''பைத்தியக்காரத்தனம். கிரஹங்கள், நட்சத்திரங்களின் சக்தியைக் காட்டிலும் என்னுடைய மந்திர சக்தி வலியது. அமைதி குடிகொண்டிருந்த கடலில் நான் மந்திரம் ஜபித்துச் சுழற் காற்றை வருவித்தேன் என்பது தங்களுக்குத் தெரியுமா? முதலில் அந்தக் காஞ்சி நகர் ஒற்றனும் அதை நம்பவில்லை. பிற்பாடு, கடலில் முழுகி உயிரைவிடும்போது,கட்டாயம் நம்பியிருப்பான்!''

''அவன், கடலில் முழுகி இறந்ததை நீ பார்த்தாயா?''

''நான் பார்க்காவிட்டால் என்ன? அவன் இருந்த கப்பல் தீப்பிடித்து எரிந்ததைப் பார்த்தேன்.''

''தீப்பிடித்த கப்பலிலிருந்து அவனைத் தப்புவிக்க இளவரசர் கடலில் குதித்துப் போனாராமே?''

''போனவர் திரும்பி வந்தாரா?''

''திரும்பிப் பல்லவனுடைய கப்பலுக்கு வரவில்லை......''

''பின்னே என்ன? இரண்டு பகைவர்களும் ஒரே நாளில் பலியாவதற்காகவே வந்தியத்தேவனை உயிரோடு விட்டுவிட்டு வந்தேன்.''

''நீ என்னதான் சொன்னாலும் என் மனம் நம்பவில்லை. அவர்கள் இருவரும் இன்னும் உயிரோடிருப்பதாக என் மனத்திற்குள் ஏதோ சொல்லுகிறது. பூங்குழலியை உனக்குத் தெரியுமா?''

''நன்றாய்த் தெரியும். இலங்கையில் அவள் எங்களுக்குத் தொல்லையாயிருந்தாள். அவளும் சுழற் காற்றில் போயிருக்கலாம்.''

''அதுதான் இல்லை. சிறிது நேரத்துக்கு முன்பு ஒரு படகு தூரத்தில் வந்தது. கலங்கரை விளக்கின் உச்சியிலிருந்து ராக்கம்மாள் பார்த்தாளாம். திடீரென்று அது மறைந்துவிட்டதாம். படகில் இரண்டு மூன்று பேர் இருந்ததாகத் தோன்றியதாம்.''

''அப்படியானால் தாங்கள் கிழவரை அழைத்துக் கொண்டு உடனே நடையைக் கட்டுங்கள். நான் இருந்து பார்த்துக் கொண்டு வருகிறேன்.''

''நாங்கள் இருந்தால் என்ன?''

''கிழவர் இருந்தால் இளவரசருக்கு இராஜ மரியாதைகள் செய்து அழைத்துக் கொண்டு போகப் பார்ப்பார். காரியமெல்லாம் கெட்டுப் போகும்.''

''மந்திரவாதி! நானும் தான் கேட்கிறேன். அவர்கள் இறக்க வேண்டிய அவசியம் என்ன? மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டிவிட எல்லாரும் சம்மதித்து விட்டால்......''

''அம்மணி! பெண் புத்தியைக் காட்டி விட வேண்டாம். காஞ்சி ஒற்றனுக்கு நம் இரகசியம் எல்லாம் தெரியும். அவன் இளவரசரிடமும் சொல்லியிருப்பான். பொழுது விடிவதற்குள் நீங்கள் புறப்பட்டுச் செல்லுங்கள். ராக்கம்மா! பூங்குழலி அவர்களை அழைத்து வந்தால் காட்டில் எங்கே வைத்திருப்பாள்?''

''மறைந்த மண்டபம் ஒன்று இருக்கிறது. அதுதான் அவளுடைய அந்தரங்க வாசஸ்தலம். காஞ்சி ஒற்றனை அதிலேதான் ஒரு பகல் முழுதும் மறைத்து வைத்திருந்தாள். பிறகு அதை நான் கண்டுபிடித்தேன்.''

''நல்லது. அந்த மறைந்த மண்டபம் இருக்குமிடம் எனக்கும் தெரியும். அங்கே போய்க் காத்திருக்கிறேன். ராணி! சக்கரவர்த்தி எப்படியிருக்கிறார்? ஏதாவது செய்தி உண்டா?''

''எந்தச் சக்கரவர்த்தியைப் பற்றிக் கேட்கிறாய்?''

''நோயாளி சுந்தர சோழனைச் 'சக்கரவர்த்தி' என்று இந்த வாய் ஒரு நாளும் சொல்லாது. நமது சக்கரவர்த்தியைப் பற்றித்தான் கேட்கிறேன்.''

''சௌக்கியமாயிருப்பதாகப் பத்து நாளைக்கு முன்பு செய்தி கிடைத்தது. ஆகா! எத்தனை நாள் ஆயிற்று பார்த்து?''

''சரி, சரி! சீக்கிரம் புறப்படுங்கள். அந்த முட்டாள் பல்லவன் என்ன செய்யப் போகிறானாம்?''

''அவனையும் தஞ்சைக்கு அழைத்துப் போகிறோம்.''

''அவனிடம் ஜாக்கிரதையாயிருங்கள்.''

''அவனைப் பற்றிக் கவலையில்லை. நான் காலால் இட்டதை அவன் தலையால் செய்யக் காத்திருக்கிறான்!''

''இருந்தாலும் ஜாக்கிரதையாயிருப்பது நல்லது. காஞ்சி ஒற்றன்

## அருள்வாக்கு



நிருத்யம் என்பது உணர்ச்சிகளை அபிநயமாக நடித்துக் காட்டாமல் ஒரு தாளத்துக்கும் சொல்லுக்கட்டுக்கும் ஏற்பக் காலால் ஜதிகளைப் போட்டுக் கொண்டு, கைகளால் பல விசித்திரங்களைச் செய்து காட்டுவதே என்றும் நாட்டியம் என்பது ஒரு பாடலுக்கு அர்த்தத்தை விளக்கி அபிநயம் செய்து காட்டுவது என்றும் பாகுபாடு சொல்வதுண்டு.

வெறும் அங்க சர்யையால் அதாவது சரீர சேஷ்டையால் எப்படி நிருத்யத்தில் ஸந்தோஷம் ஏற்படுகிறது? அதில் ரஸ பாவ வெளியீடு எதுவும் இல்லையே என்றால், இதுதான் மனுஷ்யனின் ஸௌந்தர்ய ரஸனையில் உண்டாகிற ஸௌக்யம். Aesthetic Sense என்று சொல்வார்கள். அழகை உணர்ந்து கொள்வதிலேயே ஒருவிதமான ஆத்மானந்தம் உண்டாகிறது. இது அழகு. இது அழகில்லை என்று அந்தராத்மாவுக்குள் எதுவோ ஒன்று எடை போட்டுச் சொல்லி, அழகாயிருப்பதில் நம்மைச் சொக்க வைக்கிறது. ஒரு நாய் குடுகுடு என்று ஓடினால் அது அழகாயிருக்கிறதென்று நமக்கு உள்ளே தோன்றவில்லை. அதுவே ஒரு யானை திம்திம் என்று ஆடி, அசங்கிக் கொண்டு, தும்பிக்கையையும், காதுகளையும் அதற்கேற்ப அசைத்துக் கொண்டு வருவதைப் பார்த்தால் பார்த்துக் கொண்டேயிருக்கணுமென்று தோன்றுகிறது. ஒரு காக்கா தவ்வித் தவ்வி நடந்தால், அதிலே ஒரு மகிழ்ச்சியும் நமக்கு ஏற்படுவதில்லை. ஒரு ஹம்சம் ஒய்யாரமாகப் போனால் மனஸ் அதிலேயே ஈடுபட்டு நிற்கிறது. வெறும் அசைவுக்கு இப்படி ஒரு பவர். இப்படித்தான் ஜதிகள் என்று சுத்த நிருத்தியத்தில் வெறுமே காலால் அடிப்பதும், கையை அசைப்பதும், இடுப்பை ஒடிப்பதும் அ றி வு ன் ள define பண்ண முடியாததான அழகு என்ற அம்சத்தால் நமக்கு ஆனந்தத்தை உண்டாக்குகின்றன.

இந்த ஆனந்தத்தில் தூய்மையுமிருக்கிறது. அதுவே ஒரு கோமாளி வெறுமே கையையும் காலையும் ஆட்டி ஒடித்துக் காட்டினால், அது ஹாஸ்யமாகத்தானிருக்கிறது. சில ஸமயத்தில் விரஸமென்பதாகச் சித்த விகாரமேற்படுத்துவதாகவுமிருக்கிறது. ஆகக்கூடி, அங்க சர்யைக்கே பலவித உணர்ச்சிகளை உண்டாக்குகிற சக்தி இருக்கிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

---

வந்தியத்தேவனிடம் தாங்கள் கொஞ்சம் ஏமாந்து போனீர்கள் அல்லவா?''

''அது உண்மைதான்; அதனாலேயே அவனை உயிரோடு மறுபடியும் பார்க்க விரும்புகிறேன்.''

''அந்த ஆசையை அடியோடு விட்டு விடுங்கள், ராணி!''

இவ்வாறு நிலவரத்தைப் பேசிக் கொண்டே அவர்கள் அங்கிருந்து நகரத் தொடங்கினார்கள் என்று தெரிந்தது. பூங்குழலி தன்னை அவர்கள் பார்க்காத வண்ணம் இன்னும் நன்றாய்ப் புதரில் மறைந்து கொண்டாள். நல்லவேளையாக, அவள் இருந்த பக்கம் அவர்கள் வரவில்லை. வேறு திசையாகச் சென்று விட்டார்கள்.

பூங்குழலி தற்செயலாக ஒட்டுக்கேட்ட விஷயங்கள் அவளுக்குப் பெருந்திகிலை உண்டு பண்ணி விட்டன. பொன்னியின் செல்வரை எத்தனை வித அபாயங்கள் சூழ்ந்திருக்கின்றன என்பதை எண்ணிய போது அவளுடைய கைகால்கள் நடுங்கின; கண்கள் இருண்டன. தொண்டை வறண்டது. உள்ளம் குழம்பியது. தான் விட்டு விட்டு வந்த படகை உடனே போய்ச் சேர வேண்டும் என்ற எண்ணம் மட்டும் வலியதாக முன் நின்றது. படகை விட்டுவந்த திசையை நோக்கி விரைந்து சென்றாள்.

இளவரசர் கொடிய விஷ சுரத்தினால் பீடிக்கப்பட்டிருந்தார். அவரைச் சிறைப்படுத்திப் போவதற்குப் பழுவேட்டரையர் காத்திருந்தார். அவரைக் கொன்று விடுவதற்குக் கொலையாளிகள் காத்திருந்தனர். அவர்களுக்குத் துணையாக இந்தப் பெண்ணுருக் கொண்ட மோகினிப் பிசாசு இருந்தது. பார்த்திபேந்திரனும் அவளுடைய மாய வலையில் வீழ்ந்து விட்டான். இளவரசரைத் தான் அழைத்துச் சென்று பத்திரமாய் வைத்திருக்கலாம் என்று எண்ணிய மறைந்த மண்டபங்கூட இவர்களுக்குத் தெரிந்திருக்கிறது.

இவ்வளவு அபாயங்களிலிருந்தும்

இளவரசரைப் பாதுகாக்கும் பொறுப்பு தன் தலையில் சுமந்திருப்பதாகப் பூங்குழலி உணர்ந்தாள். ஆகையினாலேயே அவளுடைய மூளை குழம்பிற்று. இதுகாறும் அவளுடைய வாழ்நாளில் என்றுமில்லாத ஓர் அனுபவமும் நேர்ந்தது. அதாவது காட்டில் வழி தவறி விட்டோமோ என்ற பீதி உண்டாயிற்று. சுற்றிச் சுற்றிப் புறப்பட்ட இடத்துக்கே வந்து கொண்டிருக்கிறோமோ என்ற எண்ணம் தோன்றியது. அப்படிச் சுற்றி வரும் போது இளவரசரின் எதிரிகள் யாரேனும் எதிர்ப்பட்டு விட்டால் என்ன செய்வது? அவர்களுக்கு என்ன சமாதானம் சொல்வது? எப்படி அவர்களிடமிருந்து தப்பித்துச் செல்வது?.....

இல்லை, இல்லை! சரியான வழியிலேதான் வந்திருக்கிறோம். இதோ கால்வாய் தெரிகிறது. படகை விட்டு வந்த இடம் அதோ அந்த மூலையில் இருக்கிறது...... பூங்குழலி அவ்விடத்தை நோக்கிப் பாய்ந்து ஓடினாள். அவளுடைய நெஞ்சு அடித்துக் கொள்ளாமல்நின்றுவிட்டது.ஏனெனில், அவள் விட்டிருந்த இடத்தில் படகைக் காணவில்லை! ஐயோ! படகு எங்கே போயிருக்கும்?

ஒருவேளை தான் இல்லாத சமயத்தில் பழுவேட்டரையரின் ஆட்கள் இங்கேயும் வந்திருப்பார்களோ? வந்து இளவரசரையும் வந்தியத்தேவனையும் சிறைப்பிடித்துக் கொண்டு போயிருப்பார்களோ? அப்படி நடந்திருந்தால் கூடப் பாதகமில்லை. அதைவிடப் பயங்கரமான சம்பவம் நிகழ்ந்திருக்குமோ? வந்தியத்தேவன் இளவரசரைத் தூக்கிக் கொண்டு மறைந்த மண்டபத்தைத் தேடிப் போயிருப்பானோ? அப்படியானால் அங்கே கொலைஞர்கள் காத்திருப்பார்களே? அடடா! என்ன தவறு செய்து விட்டோம்?......

அந்த மறைந்த மண்டபத்துக்கு உடனே போய்ப் பார்க்க வேண்டுமென்றபரபரப்புபூங்குழலியின்மனத்தில் குடிகொண்டது. காட்டு வழியில் ஓட்டம் பிடித்து ஓடினாள். மறுபடியும் அந்தப் பழைய சந்தேகம்; வழி தவறி விட்டோமோ என்ற சந்தேகம். சுற்றிச் சுற்றி வருகிறோமோ என்ற மயக்கம்.

அது என்ன? ஐயோ! அது என்ன? ஏதோ காலடிச் சப்தம் போலிருக்கிறதே? யாரோ நம்மைத் தொடர்ந்து வருவதுபோலிருக்கிறதே? யாராயிருக்கும்? எதற்காக இருக்கும்? ஒருவேளை அந்தப் பயங்கரமான மந்திரவாதி தானோ? அப்படியானால் ஏன் பயப்பட வேண்டும்? இடுப்பில் செருகியுள்ள கத்தியை எடுத்துக் கொண்டால் போயிற்று! யாராயிருந்தால் என்ன? எதற்காக ஓட வேண்டும்?......

இல்லை, இல்லை! ஓட வேண்டியது தான். இச்சமயம் யாருடனும் சண்டை பிடிக்கும் சமயம் அன்று. கையில் வலிவு இல்லை. கத்தியும் குறி தவறிப் போகும். உயிரை எப்பாடு பட்டாவது காப்பாற்றிக் கொள்ள வேண்டும். நமக்கு இத்தருணம் ஏதேனும் வந்தால் இளவரசருடைய கதி யாதாகும்? முன்னமே அந்த வந்தியத்தேவன் எச்சரித்தானே? உயிரைப் பத்திரமாய்க் காப்பாற்றிக் கொண்டு வருவதாகச் சொன்னோமே? அதை நிறைவேற்ற வேண்டியதுதான்!

பூங்குழலிமேலும் மேலும் நெருக்கமானகாட்டில்புகுந்துஓடினாள். ஆனால் துரத்தி வந்தவன் மேலும் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தான். பூங்குழலி போன வழியில் மரங்களிலிருந்த பட்சிகள் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடின. வளைகளிலிருந்து நரிகள் கிளம்பி ஓடின. தூங்கிய காட்டுப் பன்றிகள் விழித்தெழுந்து விழுந்தடித்து ஓடின. மான் ஒன்று விர்ரென்று பாய்ந்து வந்து அவள் மேலேயே இடித்துப் புடைத்துக் கொண்டு ஓடியது. இவ்வளவுக்கும் மத்தியில் பின்னால் தொடர்ந்து வந்தவன் விட்டபாடாக இல்லை. அவனுடைய காலடிச் சப்தமும், அவன் ஓடியதால் பெருமூச்சு விடும் சப்தமும் கேட்டுக் கொண்டேயிருந்தன.

பூங்குழலி ஓடி ஓடிச் சலித்துப் போனாள். அந்தச் சலிப்பு அளவில்லாத கோபமாக மாறியது. வருகிறவன் யாராயிருந்தாலும் அவனை ஒரு கை பார்த்து விடுவது என்று முடிவு செய்தாள்.

(தொடரும்)



# நெருக்கம்

"அதென்ன... என்னைக் கூடக் கவனியாமல் மும்முரமாய்ப் படிக்கறீங்க?" — செல்லமாய்க் கடிந்து கொண்டாள், வினோதா.

"நாளைக்குச் சேர்மன் விசிட், டார்லிங்!" என்று விளக்கம் சொன்னான், பிரேம்நாத்.

"அதுக்காக என்னை மறந்துடணுமா?"

"சேச்சே... உன்னை மறந்துட்டு உயிரை வெச்சிட்டிருக்க முடியுமா? அதாவது வினுக்குட்டி, இரண்டு வருஷமா இந்தக் கம்பெனியின் உற்பத்தி உற்சாகமாய் இல்லை. அது எதனாலே என்பது எனக்கும் புரியவில்லை. மேலிடத்துக்கும் புரியவில்லை. அதனால் வடக்கே உள்ள கிளை மானேஜர்களை இங்கேயும், இங்கே உள்ள மானேஜர்களை வடக்கேயுமாக டிரான்ஸ்ஃபர் அடிக்கலாமா என்று போர்டு மீட்டிங்கிலே யோசிக்கப் போறாங்க."

"அதுக்கு?"

"அம்மாதிரி அகால டிரான்ஸ்ஃபருக்கு என்னைப் பொறுத்தவரை இடம் வைக்கக் கூடாது என்றுதான் இப்படித் தீவிரமாய்ப் படிக்கிறேன். ஒர்க் ஷாப்பிலுள்ள இயந்திரங்களைப் பற்றிய ஜாதகத்தை அக்கு வேறு ஆணி வேறாகத் தெரிந்து வைத்திருந்தால் சேர்மன் வரும்போது, அள்ளி விடலாம். அதைக் கேட்டுட்டு, 'பையன் பரவாயில்லை. தமிழ்நாட்டுக் கிளையிலேயே இன்னும் கொஞ்ச நாட்கள் இவனை விட்டு வைக்கலாம்' என்று போய் விடுவார்..."

"அப்புறம்?"

"அப்புறம் என்ன...? நம் தேனிலவு வாழ்க்கை சொந்த ஊரிலேயே வெற்றி நடை போடும்."

"பலே.... பலே.... வெரி க்ளாட், டியர். என் கணவரென்றால் கணவர்தான். உங்களோட சூட்சமம் யாருக்கு வரும்?" — துள்ளினாள், வினோதா.

சப்பாத்தி வர்ண ஃபுல் சூட்டுடன் கனகம்பீரமாய்க் காரில் வந்து இறங்கினார், சேர்மன்.

வளமான முகம்; வாடாத புன்னகை.

"ஹவ் ஆர் யூ, மிஸ்டர் பிரேம்நாத்?"

"வெரி ஃபைன், சார்!" என்ற பிரேம்நாத்

தமிழினியன்

மகிழ்ந்தான். 'சேர்மன், இணக்கமாகப் பேசுகிறார். மாற்றல் இல்லாமல் தப்பித்து விடலாம்.'

"இது டிரில்லிங் மெஷின், சார். எழுபத்தாறில் வாங்கியது. நோ ரிப்பேர், நோ பிராப்ளம்."

"ஐ ஸீ..."

"இது மில்லிங் மெஷின். எச். எம். டி.!"

"ஓ..."

"எம். பி. செவண்டீன் சென்ட்ரல் லேத். பர்ஃபெக்ட் கண்டிஷன். போன வருஷம் கூலிங் பம்ப் மட்டும் ரீப்ளேஸ் பண்ணினோம்!"

"குட்!" — திருப்தியாகப் புன்னகை செய்தார், சேர்மன்.

அடுத்த மெஷினை நோக்கிப் பிரேம் நாத் நகர முயன்ற போது அவனைத் தடுத்தார்.

"இந்த லேத்துக்கு ஆபரேட்டர், யார்?"

பிரேம் நாத், பக்கத்தில் நின்ற சார்ஜ் மேனைப் பார்த்தான்.

"பக்கிரிசாமி என்பவர், சார்!" என்றார், சார்ஜ்மேன்.

"எங்கே அந்தப் பக்கிரிசாமி?"

சேர்மன் கேட்க, பிரேம் நாத் மறுபடியும் சார்ஜ்மேனைப் பார்த்தான்.

"லீவு சார்."

"நேற்று வந்தாரா?"

"இல்லே. அவர் பத்து நாட்களாகவே டியூட்டிக்கு வரல்லேங்க!"

"ஏனென்று தெரியுமா, மிஸ்டர் பிரேம் நாத்?"

பிரேம் நாத் விழி பிதுங்கினான். சார்ஜ் மேனிடமிருந்து பதில் வந்தது...

"அவரது மனைவிக்குச் சுகமில்லேங்க, சார்..."

"பத்து நாட்கள் சுகமில்லேன்னா ஏதாவது அதிகமாய்த்தான் இருக்கும். இல்லையா...?" — சேர்மன், பிரேம் நாத்தை நோக்கினார்.

"ஆ... 'ஆமாம் சார்," கைபிசைந்தான், அவன்.

"மிஸ்டர் பிரேம் நாத். இங்கேயிருக்கிற பல மெஷின்களைப் பற்றியும், லேத்தைப் பற்றியும் விலாவாரியாகச் சொன்னீர்கள். ஆனால், இந்த லேத்திலே வேலை செய்யற தொழிலாளியைப் பற்றி... அவர் யாரென்று கூட உங்களுக்குத் தெரியவில்லை. இது பெரும் தவறு. ஒரு தொழிலாளியைப் பற்றிய உண்மைகளை அறிந்து கொள்ள ஆசைப்பட்டால்தான், அவர்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு உங்களுக்கு உண்டாகும். அந்த நெருக்கம் தான்... ஐ மீன்... அந்த இண்டிமஸி தான் ஒரு தொழிற்சாலையின் உற்பத்தியைப் பெருக்கும் வளமான உரம். இந்த உத்தியை நீங்கள் நாக்பூரிலாவது போய்க் கையாள வேண்டும்."

"நாக்பூரிலா?"

"ஆமாம். உங்களை அங்குதான் டிரான்ஸ்ஃபர் பண்ணப் போகிறேன்..." — கடுமையாகச் சொல்லிவிட்டுக் காரில் ஏறிக்கொண்டார், சேர்மன்.

## தீர்ப்பெழுதும் நாள்...



தேர்தல்கள் நமக்குத்
திருவிழாக்கள் அல்ல;
தேர்வு நாட்கள்...!

வாக்குச் சாவடிகள் — நம்
வாழ்க்கையை நிர்ணயிக்கும்
சுயம்வர மண்டபங்கள்...!

வாக்குச் சீட்டுகள்
ஆளுங்கட்சிக்கு நாமெழுதித்தரும்
அடிமைச் சாசனங்கள் அல்ல;
அதிகார ஓலைகள்...!

நம் கையில் தரப்படுவது
முத்திரைக் கட்டைகள் அல்ல;
நம் தலைவிதியை
நாமே எழுதிக் கொள்ளும்
தங்க எழுத்தாணிகள்...!

தோழனே
நமது தீர்ப்பினை
உணர்ச்சிகளால் அல்ல
உரத்த சிந்தனைகளால்
எழுதுவோம் வா!

— வெற்றிப் பேரொளி

ஒரு சினிமா கம்பெனி ஒரு மலைப்பிரதேசத்தில் டேரா அடித்திருக்கிறது. டைரக்டர், ஹீரோ, ஹீரோயின், இரண்டு துணை நடிகைகள், தயாரிப்பாளர் எல்லோரும் ஆஜர். எல்லோரும் சந்தோஷமாக ஷூட்டிங்கில் கலந்து கொண்டு, தங்கியிருக்கும் ஹோட்டலுக்குத் திரும்பி வரும் நேரத்தில் தயாரிப்பாளருக்கு இரண்டு செய்திகள்.

ஒன்று ஹீரோ அமோல் பாலேகருக்குத் தேர்தலில் நிற்பதற்குச் சீட் கிடைத்திருக்கிறது.

இரண்டு ஹீரோயின் ஷபனு ஆஸ்மிக்கு மூன்றாவது முறையாக தேசிய விருது கிடைத்திருக்கிறது.

இதைக் கொண்டாடும் பொருட்டுத் தயாரிப்பாளர் ஹோட்டலில் எல்லோருக்கும் ஒரு பார்ட்டி கொடுக்கிறார்.

பார்ட்டி நடந்து கொண்டிருக்கும் போது இரண்டிரண்டு பேராக அவரவர் பிரச்னைகளைப் பேசிக் கொள்கிறார்கள்.

அதில் ஒரு துணை நடிகைக்குப் படத்தில் ஒரு 'கனமான' பாத்திரம் கிடைக்கவில்லையே என்ற ஆதங்கம். தயாரிப்பாளரை நெருங்கி அந்தப் பாத்திரம் வேண்டுமெனக் கேட்க, குடிவெறியில் இருக்கும் தயாரிப்பாளர் துணை நடிகையிடம் ஒரு மாதிரியாகப் பேச, துணை நடிகை தயாரிப்பாளரை அறைந்துவிட —

அன்றிரவு அந்தத் துணை நடிகை, போட்-ஹவுஸில் தனியாக வசன ஒத்திகை செய்து கொண்டிருக்கும் போது கொல்லப்படுகிறார்.

கொன்றது யார்?

தயாரிப்பாளரா, அவருடைய தொழில் கூட்டாளியான தம்பியா, இன்னொரு துணை நடிகையின் அம்மாவா? தூக்கத்தில் நடக்கும் வியாதியை உடைய ஹீரோயின் ஷபனு ஆஸ்மியா?

இந்தக் கேள்விகளோடு படம் தூஃபான் எக்ஸ்பிரஸ் வேகத்தில் ஓடுகிறது.

கொலைகாரனைக் கண்டுபிடிக்க வரும் 'சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர்' நஸ்ருதீன் ஷா உண்மையில் யார் என்று தெரியும் போது ஒரு திடுக்.

படத்தில் விறுவிறுப்பைக் கொண்டு வர வேண்டுமென்பதற்காகவே, ஷபனு ஆஸ்மி கத்தியோடு நடக்கும் ஸீன், வாஷ் பேஸினில் ரத்தம் தோய்ந்த கத்தியைக் கழுவும் தாடிவாலா, ஷபனு ஆஸ்மி குளிக்கும் போது டெலிவிஷனில் தோன்றும் அந்தத் தொலைக் காட்சி என்று டைரக்டர் ஜமாய்த்திருக்கிறார்.

படம் முடிந்து விட்டது என்று தோன்றும் நேரம் ஏற்படும் அந்தக் கடைசி விநாடித் திருப்பம் அபாரம். (எத்தனை குண்டு என்று நஸ்ருதீன் கணக்குப் போடும் இடம்).

படத்தில் வரும் பாத்திரங்கள் அத்தனைக்கும் அந்தப் பாத்திரங்களை ஏற்றிருக்கும் நபர்களின் உண்மைப் பெயரையே வைத்து விட்டதால் கொலையாளி இன்னார்தான் என்று கணிக்க முடியாமல் கடைசி வரை நம்மைத் திணறடிக்க வைத்து விடுகிறார் டைரக்டர். படத்தின் முடிவைத் தயவு செய்து வெளியே சொல்ல வேண்டாம் என்று முன் கூட்டியே கேட்டுக் கொள்ளப்படுவதால் யார் கொலைகாரன் என்பதை நாங்களும் சொல்லப் போவதில்லை.

அமோல் பாலேகர், ஷபனு ஆஸ்மி, நஸ்ருதீன் ஷா உள்பட அனைவரும் வெகு இயற்கையாக நடித்திருக்கிறார்கள்.

ஹிந்திப் படம்தான் என்றாலும் பார்க்கும் எல்லோருக்கும் புரியும் படியாகத்தான் எடுத்திருக்கிறார்கள்.

வெளியே எழுந்து வரும்போது இன்னொரு விஷயம் புருவங்களை உயர்த்த வைக்கிறது. 'அட, இந்தப் படத்தில் ஒரு பாட்டுக் கூட இல்லையே...!'

— ஜெயமன்மதன்



"யூரேகா ஃபோர்ப்ஸ் சேல்ஸ்.மேன் தான் எவ்வளவு நல்லவர். என் வீட்டில், சுத்தம் மற்றும் சுகாதாரத்திற்கு நவீன முறைகளை அறிமுகப்படுத்திய இனிய நண்பர் அவர்தான்"

திருமதி. அர்ச்சனா சம்பானி, பம்பாய்



## இதுவரை நடந்தவை..

நிவிதா.

ஓர் எலெக்ட்ரிகல் கம்பெனியின் திருச்சி கிளையிலிருந்து சென்னையிலுள்ள அதன் ரீஜனல் ஆபீஸுக்கு மாற்றலாகி வருகிறாள். வினோத்குமார் என்னும் அவள் காதலனும் சென்னையில் இருக்கிறான்.

நிவிதாவின் ரீஜனல் மானேஜர் ஷியாம் குமார் பெண் சபலமுள்ளவன். நிவிதாவின் அழகில் மயங்கிய அவன் அவளை எப்படியாவது தனது இச்சைக்கு இணங்க வைத்துவிடத் துடிக்கிறான். ஆனாலும் அதை அவன் நேரடியாகச் செய்யவில்லை. அவளைச் சில சிக்கல்களில் சிக்க வைத்து அவற்றை விடுவிக்கும் விலையாக அவளை இணங்க வைக்க முயல்கிறான்.

எனவே, அவன் கம்பெனிக்கும் ஆத்மா டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் என்னும் வேறொரு கம்பெனிக்கும் இடையிலான மோசடி வழக்கு ஒன்றைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துகிறான். அதாவது, ஆத்மா டிஸ்ட்ரிபியூட்டர்ஸுக்கு எதிராகத் தனது கம்பெனியிலுள்ள சில டாகுமெண்டுகளை நிவிதா திருடிக் கொண்டு போய் அந்த எதிரிக் கம்பெனிக்குக் கொடுப்பது போன்ற தடயங்களை உருவாக்குகிறான். அதற்காகத் தனது நண்பன் ஒருவனைக் கொண்டு, ஆத்மா டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் முதலாளியிடம் நிவிதா போல் பெண் குரலில் போனில் பேசச் செய்கிறான். அந்த டாகுமெண்டுகளைக் கொடுக்கத் தனக்கு இருபத்தையாயிரம் ரூபாய்க்கு டிராஃப்ட் எடுத்து அனுப்ப வேண்டுமென்று நிவிதாவே போனில் சொல்வது போல் சொல்லச் செய்கிறான்.

இதற்கிடையில், நிவிதா தனது காதலன் வினோத்குமாரின் வீட்டுக்குச் சென்று அவனது பெற்றோர்களைச் சந்திக்கிறாள். அவர்களுக்கு அவளை மருமகளாக ஏற்றுக் கொள்ளப் பரிபூரணச் சம்மதம். திருமணத்திற்கு நாள் பார்க்கத் தயாராய் இருக்கும் அந்தச் சந்தோஷ நேரத்தில்தான் ஒரு நாள், நிவிதாவின் பெயருக்கு எடுக்கப்பட்ட அந்த இருபத்தைந்தாயிரம் ரூபாய் டிராஃப்ட் அவளுடைய ஆபீஸ் முகவரிக்கு வருகிறது. அதுபற்றி ஒன்றுமறியாத நிவிதா குழம்பித் தவிக்கிறாள்......

அந்த டிராஃப்ட் பேங்க் ஆஃப் இந்தியாவின் அடையாறு கிளையில் வழங்கப்பட்டிருந்தது. நிவிதாவின் பெயர் தெளிவாகத் தனித்தனி எழுத்துக்களாக எழுதப்பட்டிருந்தது. இருபத்தி ஐயாயிரம் என்று எண்ணாலும், எழுத்தாலும் எழுதப்பட்டிருந்தது. மூலையில் கிராஸ் செய்யப்படவில்லை.

அந்தக் கவரில் டிராஃப்டைத் தவிர வேறு எதுவுமே இல்லை.

நிவிதா ஏகமாகக் குழம்பினாள்.

கவர் முகப்பில் தன் முகவரி தெளிவாக டைப் செய்யப்பட்டிருப்பதையும், பதிவுத் தபாலுக்கான ஸ்டாம்புகள் ஒட்டப்பட்டு, சீல் குத்தப்பட்டிருப்பதையும் பார்த்தாள்.

இது எனக்கு வந்த கடிதம் தான். அதில் சந்தேகமே இல்லை. இவ்வளவு பெரிய தொகையை எதற்காக அனுப்பியிருக்கிறான் ஹரி?

ஹரியைப் பற்றி செக்ஷன் ஹெட்டும், ரீஜனல் மானேஜரும் என்னென்னவோ சொன்னார்களே... இவன் எனக்கு போன் செய்தான். வினோத்குமாரைப் பற்றி ஆதார பூர்வமாக ஏதோ திடுக்கிடும் தகவல் சொல்வதாகச் சொன்னான். இடத்தைக் குறிப்பிட்டு ஒரு கடிதம் எழுதினான். போனால் அதன்படி என்னைச் சந்திக்காமல் கண்ணாமூச்சி ஆடினான். இப்போது பெரிய தொகைக்கு டிராஃப்ட் அனுப்பியிருக்கிறான்.

இதெல்லாம் என்ன? ஏன் இப்படியெல்லாம் என்னைக் குழப்புகிறான்? நமது கம்பெனி வழக்குத் தொடர்ந்துள்ள ஆத்மா டிஸ்ட்ரிபியூட்டர்சின் விளையாட்டா இதெல்லாம்? ரீஜனல் மானேஜர் என்னைத் தனியாய் அழைத்து அறிவுரை சொன்னாரே... இந்த அலுவலகத்தில் சிலரை விலைக்கு வாங்க அவர்கள் முயற்சி செய்வதாகச் சொன்னாரே... எனக்குத் துரோகம் செய்யும் எண்ணம் கூடாது என்றாரே...

அதன்படி ஹரி மூலம் என்னை விலைக்கு வாங்கப் பார்க்கிறார்களா? அதற்காகத்தான் இந்த ஏற்பாடுகளா? நான் இவர்களுக்குச் சாதகமாக எதையோ செய்ய வேண்டும் என்று எதிர்பார்த்து... அந்தச் செயலுக்குக் கூலியாகத்தான் இந்தத் தொகையா?''

ச்சே! எவ்வளவு கேவலமாக என்னை எடை போட்டு விட்டார்கள்? பணத்துக்கு மயங்கி நேர்மையைப் புதைக்கிறவள் நானா?

பணம் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்களுக்குச் சாதகமாக நான் என்ன செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் எதுவும் விடுக்கப்படவில்லையே... நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்வதற்காகத்தான் ஹோட்டலுக்கு வரவழைத்தார்களா?

என் சொந்த வாழ்க்கை சம்பந்தப்பட்டது என்று சொன்னால்தான் நான் வருவேன் என்பதற்காகத்தான் வினோத்குமார் மேல் அபாண்டமாகப் பழி போட்டுப் பேசினானா? பிறகு ஏன் என்னைச் சந்திக்கவில்லை? ஏதோ இடர்ப்பாடு ஏற்பட்டிருக்கலாம்.

ஆக, அந்த ஹரி என்னை மறுபடியும் போனிலோ, நேரிலோ நிச்சயம் தொடர்பு கொள்வான். பணம் போதுமா, இன்னும் தரவா என்று கேட்பான். நான் செய்ய வேண்டிய உபகாரத்தைச் சொல்வான்.

அப்போது அவன் முகத்தில் இந்த டிராஃப்டைக் கிழித்து எறிய வேண்டும். உன் தந்திர வேலைகளுக்கு வேறு எவளை யாவது பார் என்று சூடாகச் சொல்ல வேண்டும்.

அதுவரைக்கும் நான் காத்திருக்க வேண் டுமா?

பல்வேறு விதங்களில் யோசனை செய்து பார்த்த நிவிதா தீர்மானத்திற்கு வந்து, அந்தப் பதிவுத் தபாலில் வந்த கவரை எடுத்துக் கொண்டு எழுந்தாள். ரீஜனல் மானேஜரின் அறைக்கு நடந்தாள்.

அனுமதி பெற்று உள்ளே வந்தாள்.

ஷியாம் ஃபைலில் இருந்து நிமிர்ந்து, ''யெஸ்'' என்றான்.

''சார், இன்னைக்குப் பதிவுத் தபால்ல இது எனக்கு வந்திச்சி'' என்று கவரை நீட்டி னாள்.

ஷியாம் மெலிதாகத் திடுக்கிட்டான். அவன் திட்டப்படி நிவிதா தனக்கு வரும் டிராஃப்டை யாரிடமும் சொல்லாமல் கைப் பைக்குள் வைத்துக் கொண்டு குழம்ப வேண் டும். இவள் என்னடாவென்றால் என்னிடமே கொண்டு வந்து நீட்டுகிறாளே... உள்ளே என்ன இருக்கிறது என்று எனக்குத் தெரியாதா? வல்லபன் டிராஃப்ட் அனுப்பி இருப்பார்.

இவ்வளவு தூரம் டெவலப் செய்து விட்ட திட்டத்தை — உச்சக் கட்டத்தை நெருங்கி விட்ட திட்டத்தை இவள் போட்டு உடைத்து விடுவாள் போலிருக்கிறதே...

யோசி! யோசி! திட்டத்தில் ஏற்பட்டிருக் கும் விரிசலைப் பூசி மறைக்க யோசி! திட்டப் படி எல்லாம் தொடர... ஏதாவது செய்...!

ஷியாம் யோசனையுடன் கவரை வாங்கி உள்ளேயிருந்து அந்த டிராஃப்டை எடுத்துப் பார்த்து, ''என்ன இது? உங்க பேருக்குப் பணம் அனுப்பியிருக்கான்?'' என்றான்.

''ஆமாம் சார். என்னைச் சுத்தி நிகழ்ந்த குழப்பம் எல்லாம் இப்பத்தான் சார் எனக்குப் புரியுது. நீங்க சொன்ன ஆத்மா டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் அவங்க சார்பா யாரோ ஹரியை விட்டு என்னை விலை பேச எடுத்துக் கிட்ட முயற்சிகள்ல இதுவும் ஒரு கட்டம் சார்.''


''அப்படியா? இந்தப் பணம் எதுக்காக அனுப்பியிருக்காங்க?''

''தெரியலை சார். இன்னும் அதைச் சொல்லலை சார்.''

''ஹோட்டல்ல சந்திச்சப்போ அரசியல் மட்டும் பேசினீங்களோ?''

''சார், சத்தியமா ஹோட்டல்ல நான் காத்திருந்தது உண்மை. யாரும் வந்து





"உன் மனைவி சந்தோஷமா இருக்கிறுளா, இல்லே, கோபமா இருக்கிருளாங்கிறதை எப்படி தெரிஞ்சுக்குவே?"

"சந்தோஷமா இருந்தா, 'பேசாம சாப்பிட்டுப் படுங்க'ன்னு சொல்லுவா... கோவமா இருந்தா, 'பேசாம படுங்க'ன்னு சொல்லிடுவா!"

— கே. விஜயன்.

பேசலேங்கிறதும் உண்மை."

"அப்படியா? அதை அப்புறம் தீர்மானிக்கலாம். இப்ப எதுக்காக இதை என்கிட்டே கொண்டாந்து காட்டறீங்க?"

"நீங்க சந்தேகப்பட்ட மாதிரி நான் இந்தக் கம்பெனிக்குத் துரோகம் எதுவும் நினைக்கலேன்னு உங்களுக்கு நிருபிக்கிறதுக்காகத் தான் காட்டினேன் சார்."

"அதாவது உங்க நேர்மையைத் தெளிவு படுத்தறீங்க?"

"ஆமாம் சார்."

"இதை என்ன செய்யறதா உத்தேசம்?"

"நீங்க சொல்லுங்க சார்."

"உங்க பேருக்கு வந்த தபால். உங்க பேருக்கு வந்த பணம். நான் எப்படி முடிவு எடுக்க முடியும் நிவிதா?"

"சார், அவன் மறுபடியும் என்னைத் தொடர்பு கொள்வான்னு நம்புறேன்."

"யாரு? பணம் அனுப்பின ஹரியா?"

"ஆமாம் சார். அப்போ அவனைச் சந்திச்சி இந்த டிராஃப்டைக் கிழிச்சி அவன் முகத்திலே விசிட்டு, ஆத்திரம் தீரத் திட்டப் போறேன் சார்."

"அப்படியா?" என்ற ஷியாம் இரண்டு விரல்களின் நடுவில் பென்சிலை வைத்து அதை மேலும், கீழுமாக அசைத்துக் கொண்டே சில வினடிகள் யோசித்தான்.

லேசாக விம்மித் தணியும் மார்புகளுடன் எதிரே நின்ற அவளைப் பார்த்தான்.

"நிவிதா, நீங்க சொல்றதை எல்லாம் நான் முழு அளவுல நம்பலாமா?"

"ப்ளீஸ்... நம்புங்க..."

"நம்புறேன். இந்த டிராஃப்ட் வந்த விஷயம் நம்ம ஆபீஸ்ல என்னையும், உங்களையும் தவிர வேற யாருக்காவது தெரியுமா?"

"தெரியாது சார்."

"நீங்க நேர்மையான ஸ்டாஃப்ன்னு நிருபிக்க உங்களுக்கு இன்னொரு சந்தர்ப்பம் தர்றேன். நான் சொல்ற மாதிரி நடந்துக்குவீங்களா?"

"சொல்லுங்க சார்."

"இந்த டிராஃப்டை உங்க கைப்பையிலே வச்சுக்கங்க. விஷயத்தை யார்கிட்டேயும் சொல்லாதீங்க. நீங்க சொல்றது உண்மைன்னு, இந்த ஹரி மறுபடியும் உங்களைத் தொடர்பு கொள்வான். அப்படித் தானே?"

"ஆமாம் சார்."

"அப்படித் தொடர்பு கொள்றப்போ நீங்க அவனுக்காக என்ன செய்யணும்னு அவன் சொல்றதையெல்லாம் தெளிவாக் கேட்டுக்கங்க."

"சரி சார்."

"செஞ்சு தர்றேன்னு சொல்லிட்டு மறுபடியும் தொடர்பு கொள்ளச் சொல்லிட்டு, என்கிட்டே அவன் சொல்றதை எல்லாம் சொல்லிடுங்க. அதுக்கப்புறம் என்ன செய்யணும்கிறதை நான் சொல்றேன்."

"சரி சார்."

"இந்த ஏற்பாடுகளை, நீங்க என்கிட்டே வந்ததை, நான் சொன்னதை எல்லாத்தையும் ரகசியமாகவே வச்சிக்கங்க. ஏன்னு ஆத்மா டிஸ்ட்ரிபியூட்டர்சுக்கு உதவறதுக்கு நம்ம ஆபீஸ்லயே வேறே யாராவது தயாரா இருக்கலாம், புரிஞ்சுதா?"

"புரியுது சார். யார்கிட்டேயும் சொல்லலே சார்."

"உங்க மேல் எனக்கு இப்ப நம்பிக்கை வந்திருக்கு. நேத்துக் கொஞ்சம் கடுமையா நான் பேசினதை மறந்துடுங்க."

"பரவாயில்லே சார். சந்தேகப்பட்டு விசாரிக்க வேண்டியது உங்கள் கடமை சார்!"

"சந்தேகம் தெளிவான பிறகு நம்ப வேண்டியதும் என் கடமை" என்று புன்னகை செய்த ஷியாம், "இன்னும் ஒரு படி மேலே நம்பி இன்னொரு விஷயம் சொல்றேன் உங்ககிட்டே," என்றான்.

"என்ன சார்?"

"ஆத்மா டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் உங்ககிட்டேர்ந்து என்ன எதிர்பார்க்கிறாங்க தெரியுமா?" என்று சாவி போட்டு மேஜையின் டிராயரைத் திறந்து, அந்த நீளமான பிரௌன் கவரை எடுத்தான். நீட்டினான்.

"என்ன சார் இது?"

"ஒரு அஞ்சி நிமிஷம் அமைதியா உக்காந்து பாருங்க. உங்களுக்கே புரியும்."

நிவிதா அந்தக் கவரை வாங்கிக் கொண்டு நாற்காலியில் அமர்ந்து உள்ளே இருந்த ஒரு கத்தைக் காகிதங்களை எடுத்து ஒவ்வொன்ருகப் பார்க்க ஆரம்பிக்க...

"பாருங்க. இதோ வந்துட்டேன்" என்று ஷியாம் எழுந்து தன் அறையை விட்டு வெளியேறி, அருகில் இருந்த உதவி மானேஜரின் அறைக்கு வந்தான்.

"பெங்களூர் பிராஞ்ச்லேர்ந்து சில அக்கவுண்ட்ஸ் கிளாரிஃபிகேஷனுக்காக யாரையாவது அனுப்பச் சொல்லி போன் செஞ்

யூனிட் டிரஸ்டிலிருந்து உங்களுக்கு மாத வருமானம்.



# MISG (10)

மாதாந்திர வருமானம் தரும் வளர்ச்சியுடன் கூடிய யூனிட் திட்டம்.

- 12% வருடாந்திர லாபப்பங்கு மாதாமாதம் தரப்படுகிறது.
- ஊக்க லாபப்பங்கு நான்காவது ஆண்டில் தரப்படுகிறது.
- திட்ட முடிவில் 2% வளர்ச்சி.
- எந்த இழப்புமின்றி மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு பணம் திரும்ப பெறும் வசதி.

மேலும் விபரங்களுக்குத் தொடர்பு கொள்க :
தலைமை பிரதிநிதி / UTI ஏஜண்ட் அல்லது கனரா வங்கியின் எல்லா கிளைகள் அல்லது இந்தக் கூப்பனை பூர்த்தி செய்து அனுப்பவும்.

Please send me a free booklet on MISG (10)

Name : ____________________

Address : ____________________

____________________

__________ PIN __________

12

**யூனிட் டிரஸ்ட் ஆ:ப் இந்தியா**

தலைமை அலுவலகம், பம்பாய்-400 020
(இது ஒரு இந்திய அரசின் நிதி நிறுவனம்)

**Regional Office :**
45, Second Line Beach, Madras 600 001
Tel : 27433, 20938

**Trichur Office :**
12/758, Thekkemadom Road,
Trichur 680 001 Tel : 24690

**Hyderabad Office :**
203/204 Moghul Court Complex,
Basheer Bagh
Hyderabad 500 001 Tel : 240030

**Vijayawada Office :**
Challappalli Bungalow, Eluru Road,
Vijayawada 520 002 Tel : 63964

**Bangalore Office :**
1 Floor, World Trade Centre,
Chamber of Commerce Bldg., K.G. Road,
Bangalore 560 009 Tel : 28739

முந்துங்கள் !

ஏப்ரல் 1 முதல் மே 31 முடிய மட்டுமே.

Sista's-UTI.870.87 TM

சாங்க ரவி, யாரை அனுப்பலாம்?''

''திவாகரைப் போகச் சொல்லட்டுமா?''

''ம்கூம். இன்னும் அனுபவசாலியா அனுப்புங்க.''

''அந்தோணி சாரைப் போகச் சொல்லட்டுமா, சார்?''

''சரியான ஆசாமி. அவரையே அனுப்புங்க'' என்ற ஷியாம் அருகே இருந்த இண்டெர்காம் எடுத்து எண் அழுத்தி, ''மிஸ்டர் அந்தோணி, அசிஸ்டெண்ட் மானேஜர் ரூமுக்கு வாங்க'' என்று வைத்தான்.

சில விநாடிகளில் அவர் உள்ளே வர...

''சார், மத்தியானம் லஞ்ச் முடிச்சிட்டு பெங்களூர் போங்க. அங்கே கொஞ்சம் அக்கவுண்ட்ஸ்ல கிளாரிஃபிகேஷன் தேவைப்படுதாம். பார்த்துட்டு நாளைக்குப் புறப்பட்டு வந்துடுங்க, என்ன?'' என்றான் ஷியாம்.

''சரி சார்.''

''ரவி, போக, வர விமான டிக்கெட்ஸ் ஏற்பாடு செஞ்சிக் கொடுத்திடுங்க,'' என்று கூறிவிட்டுத் தன் அறைக்கு வந்தான்.

''என்ன, பார்த்தீங்களா நிவிதா?''

''ஆத்மா டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் இவ்வளவு மோசடியா செஞ்சிருக்காங்க?''

''ஆமாம். இதெல்லாம் தான் பக்காவான ஆதாரங்கள். இதோட அடிப்படையிலே தான் கேஸ் போட்டிருக்கோம். ஹரி உங்க கிட்டே அநேகமா இந்த டாக்குமெண்ட்சைத் தான் திருடித் தரச் சொல்வான்னு ஊகம் செய்யறேன்'' என்று ஷியாம் கவரை வாங்கி டிராயரில் வைத்தான்.

''அப்படித்தான் நானும் நினைக்கிறேன் சார்.''

''சரி, நீங்க உங்க சீட்டுக்குப் போங்க. நான் சொன்னபடி நடந்துக்கங்க. இது சம்பந்தமா யார்கிட்டேயும்...''

''மூச்சுவிட மாட்டேன் சார்'' என்று எழுந்து வெளியே சென்ற நிவிதாவின் பின்னழகை ரசித்துக் கொண்டே புன்னகை செய்து கொண்டான் ஷியாம்..

'அழகான முட்டாள் பெண்ணே, இன்றைக்கு மாலை நீ எனக்குச் சொர்க்கத்தை அடையாளம் காட்டப் போவது உனக்குத் தெரியுமா? உனக்கு வேறு வழியே இல்லை கண்ணே. உன் மானம், மரியாதை காப்பாற்றப்படவும், உன் காதல் வாழ்க்கை கலையாமல் இருக்கவும், கோர்ட், ஜெயிலை நீ சந்திக்காமல் இருக்கவும்...

'என்னை அணைப்பதைத் தவிர வேறு வழியே கிடையாது டார்லிங். அத்தனை நேர்த்தியான வலைப் பின்னல் என்னுடையது. ஹரி என்கிற எக்ஸ் உனக்கு போன் செய்த தற்குச் சாட்சி இருக்கிறது. உன்னை ஹோட்டல் இம்பீரியலுக்கு வரச் சொன்ன கடிதத்தின் நகல் இருக்கிறது. அதன்படி நீ சென்று சந்தித்ததைச் சத்தியம் செய்து சொல்வான் ஹோட்டல் ரிசப்ஷனிஸ்ட். பிறகு, உன் பெயரில் வந்த டிராஃப்ட். நீயே கையெழுத்துப் போட்டுக் கடிதத்தை வாங்கியிருக்கிறாய். அப்புறம் மோசடிக்கான ஆதாரங்கள் கொண்ட இந்தக் காகிதங்களிலும், கவரிலும் இயல்பாக உன் கைரேகைகளைப் பதிக்கச் செய்தாயிற்று.

இனி... பாக்கி உள்ளது ஒரே ஒரு காரியம் தான்.

தட் ஈஸ் க்ளைமாக்ஸ்.

**ல**ஞ்ச் இடைவேளையின் போது தனது டைப்ரைட்டரை மூடிவிட்டு விமலா நிவிதாவின் மேஜைக்கு வந்தாள்.

''நிவிதா, நான் ஏற்கெனவே லீவு எழுதிக் கொடுத்துட்டேன். அம்மா — அப்பாவை அழைச்சுக்கிட்டுக் காசிக்கு டூர் போறேன். பத்து நாளாகும் வர. வரட்டுமா? இன்னிக்கு அரை நாள்தான் வந்தேன்.''

''நல்லபடியாய்ப் போய்ட்டு வாங்க!'' என்றாள் நிவிதா.

பியூன் வந்து ஜெனரல் மானேஜர் அழைப்பதாகச் சொல்ல... வந்தாள்.

''நிவிதா, காலைல நாம பேசிக்கிட்டது தொடர்பா விரிவா ஒரு விஷயம் பேசணும். இன்னைக்கு ஆபீஸ் முடிஞ்சதும் காத்திருங்க. மத்தவங்க சந்தேகப்படாமல் இருக்கிறதுக்காக ஓவர் டைம் எடுத்துக்கறதா கையெழுத்துப் போட்டுடுங்க.''

''சரி சார்'' என்றாள் விபரீதம் புரியாமல்.

**மா**லை ஐந்து மணிக்கு அலுவலகம் முடிய, ஐந்தே காலுக்கெல்லாம் முக்கால் வாசிப் பேர் காலி செய்து விட்டார்கள். மேலும் ஐந்து நிமிடங்களில் அந்த அலுவலகத்தில் வெளியே ஸ்டூலில் அமர்ந்த வாட்ச்மேனும், தன் அறையில் அமர்ந்த ஷியாமும், ஹாலில் தன் நாற்காலியில் அமர்ந்த நிவிதாவும் மட்டும் இருக்க...

ஷியாம் அந்த டாக்குமெண்ட்ஸ் அடங்கிய கவரை எடுத்துத் தன் ஃப்ரீப் கேஸில் வைத்துக் கொண்டு தன் அறையை விட்டு வெளிப்பட்டு, ஹாலில் தனியாய் அமர்ந்து லெட்ஜர் புரட்டிக் கொண்டிருந்த நிவிதாவை நெருங்கினான்.

ஒரு நாற்காலியை அருகில் இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தான்.

''நிவிதா, உங்க ஹேண்ட் பேக் எங்கே, எடுங்க'' என்றான்.

ஏன் என்று கூடக் கேட்கத் தோன்றாமல் தன் பெரிய சைஸ் ஹேண்ட் பேகைத் தன் மேஜையின் டிராயர் திறந்து எடுக்க... அவசரமாக அதை வாங்கின ஷியாம், தன் பெட்டி திறந்து அந்தக் கவரை எடுத்து இந்தக் கைப்பைக்குள் வைத்து, ஜிப்பை மூடி, கைப்பையை டிராயருக்குள் வைத்து, பூட்டி, சாவியைத் தன் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு...

அவன் செயல்கள் புரியாமல் விழித்த நிவிதாவை, ''ஹலோ டார்லிங், இப்போ சில உண்மைகள் பேசுவோமா?'' என்றான் சிரித்தபடி.

(தொடரும்)



# தலைநகர்த் தில்லியில்

## தில்லி பல்கலைக் கழகத்தில் தமிழ்:

தில்லி பல்கலைக் கழகத்தில் இந்தியல்லாத மற்ற மொழிகளுக்கான துறை என ஒன்று உள்ளது. தமிழில் பி. ஏ. இலக்கியம் மட்டுமின்றி எம். ஏ. இலக்கியமும் படிக்கலாம்; பி. ஹெச்.டி ஆய்வு கூடச் செய்யலாம். தமிழைத் தாய்மொழியாய்க் கொள்ளாத மாணவர்களுக்கென, தமிழ் சொல்லிக் கொடுக்கவும் ஒரு தனி கோர்ஸ் உள்ளது. அதில் இவ்வாண்டு சீனாவைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் படிக்கிறார்கள். எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி இங்கேதான் ரீடராய் இருக்கிறார். இவரைத் தவிர இன்னும் இரு ரீடர்கள்; ஒரு லெக்சரர்.

தில்லி பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் எதிர்பார்ப்பு என்ன? தமிழ் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கவும், அதிக அளவில் மாணவர்கள் படிக்க முன் வரவும் வழி செய்யும் படியாகச் சில ஸ்காலர்ஷிப்களைத் தமிழக அரசு நிறுவ வேண்டுமென்பதுதான். தெலுங்குக்கு ஆந்திர அரசும், கன்னடத்திற்குக் கர்நாடக அரசும் உதவும் போது, தமிழக அரசு மட்டும் தமிழை வளர்க்கத் தில்லியில் ஏதும் செய்யவில்லை என்பது வெட்கத்துக்கும் வேதனைக்கும் உரியது.

## தமிழ்நாடு ஹவுஸ்:

ஆந்திராவுக்கென ஓர் ஆந்திரா பவன். பீகாருக்கென பீகார் பவன், ஜம்மு — காஷ்மீருக்கென ஒரு பவன்... இப்படி ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒரு பவன் தில்லியில் உண்டு. தமிழகத்துக்கென்று இருப்பதுதான் ° தமிழ்நாடு ஹவுஸ்.

இந்த இல்லத்தில் தமிழக எம். பிக்கள், எம். எல். ஏக்கள், அரசு அதிகாரிகள் என்று பலரும் தில்லி வரும்போது தங்கிக் கொள்ளலாம். வசதியான அறைகள் உண்டு. வாடகை தினத்துக்கு ரூபாய் இருபது தானும். 76— ஆம் வருடம் வரை மிகக் குறைவான எண்ணிக்கையில்தான் அறைகள் இருந்தன. 76 — ல் முதல்வராயிருந்த கலைஞர் கருணாநிதிதான் அடுக்கு மாடிக் கட்டடத்தைக் கட்டி வைத்தார். இப்போது சுமார் அறுபத்தைந்து அறைகள் உள்ளன. கவர்னர் மற்றும் முதலமைச்சர் வரும்போது இங்கே தங்க மிகவும் ஆடம்பரமான அறைகள் உண்டு.

ஓர் ஐ. ஏ. எஸ். அதிகாரியின் பொறுப்பில் இருக்கும் இந்தத் தமிழ்நாடு ஹவுஸின் உணவகம் மிகப் பாபுலரான ஒன்று. சைவ,


° கோயம்புத்தூர் ஸ்டோர்ஸ்.





° வீடுகளுக்கே வந்து வீடியோ விநியோகம்.

தில்லி பல்கலைக் கழகத் தமிழ்த் துறை ஆசிரியர்கள்.



° டி. டி. இ. ஏ. பள்ளி

அசைவ, தென்னிந்திய உணவுகள் கிடைக்கும். இதன் சமையலறை சுத்தமானது. என்று பலர் சர்டிபிகேட் கொடுக்கிறார்கள்.

## அட்சதை அரிசி முதல், கட்டு சாதம் வரை......

தில்லியில் எந்தத் தமிழ்க் குடும்பக் கல்யாணமாயிருந்தாலும், பெற்றோர் செய்ய வேண்டியது இரண்டு; ஒன்று, மணமகன் அல்லது மணமகளைத் தேர்ந்தெடுத்துத் தேதி குறிப்பது. இன்னொன்று, முகூர்த்தத் தேதியை ராமசந்திர ஐயரிடம் சொல்வது. அப்புறம்? அப்புறம் என்ன! கல்யாணத்துக்கு முதல் நாள், பெண் வீட்டுக்காரர்களாய் இருந்தாலும் கூட, மாப்பிள்ளை வீட்டார் போல் ஒரு கவலையுமில்லாமல் ஜம்மென்று ஜாலியாய்க் கல்யாண மண்டபத்துக்கு வந்து இறங்க வேண்டியதுதான்.

'அது ரெடியா? இது வந்தாயிற்றா? பால் இன்னும் ஏன் வரவில்லை? போட்டோகிராபரைக் காணோமே! டேய், அம்பி! பக்கத்து கடைக்கு ஓடி. இரண்டு பாக்கெட் சிவல் வாங்கிண்டு வந்துடு. சட்டுன்னு வா... பார்க்கலாம்!'

— இந்த ரீதியிலான எந்தத் தொந்தரவும் கிடையாது — தில்லியிலுள்ள ராமசந்திர ஐயரை நம்பிக் கல்யாண வேலைகளை ஒப்படைத்து விட்டால்! தில்லி வாழ் தமிழர்கள் மத்தியில் இவருக்கு வி. ஐ. பி. அந்தஸ்தே உண்டு.

இத்தனை பெரிய நிலைமைக்கு ஏதோ அதிர்ஷ்டமடித்து வந்து விடவில்லை அவர். கடுமையான உழைப்பு என்கிற பதத்துக்கு அகராதியில் என்ன அர்த்தம் போட்டிருந்தாலும் அதைக் கண்ணை மூடிக் கொண்டு அழித்துவிட்டு, அங்கே ராமசந்திர ஐயர் என்று தாராளமாய் எழுதிவிடலாம்; இந்த அறுபதாவது வயதிலும் கடுமையாக உழைக்கிறார்.

இன்று இவரை நம்பிச் சுமார் ஐம்பது அறுபது பேர் இருக்கிறார்கள். இவருடைய பிள்ளைகள், பெண்கள், மாட்டுப் பெண்கள், என்று அத்தனை பேரும் இவருக்கு உதவுகிறார்கள். ஒரே முகூர்த்தத்தில் நான்கைந்து கல்யாணங்களுக்குக் கூட காண்டிராக்ட் எடுத்துக் கொண்டு, ஒரு துளி பிசகு இல்லாமல், வேலைகளைக் கச்சிதமாய் முடிக்கிறார்.

''மாக்கோலம் போடுவதில் ஆரம்பித்துக் கட்டுச்சாதக் கூடை வரை நம் ஊர்த் திருமணங்களில் ஏகப்பட்ட சம்பிரதாயங்கள். என் அனுபவத்தால்தான் இத்தனை கச்சிதமாய் என்னால் செய்ய முடிகிறது. யாரும் மனம் கோண இடமின்றி இதுவரை ஆறாயிரம் கல்யாணங்களையாவது நடத்தி வைத்திருப்பேன்... அதனால் இப்போது தமிழரல்லாத மற்றவர்கள் கூடத் தங்கள் திருமணத்தை நடத்திக் கொடுக்கும்படி என்னைக் கேட்கிறார்கள். நானும் அவர்களின் சம்பிரதாயங்களை நன்றாய் அறிந்து கொண்டு விட்டதால், தயங்காமல் ஒப்புக் கொள்கிறேன்...


''வி. வி. கிரி ஜனாதிபதியாய் இருந்த போது, அவர்கள் வீட்டுக் கல்யாணம் ஒன்று ராஷ்டிரபதி பவனில் நடந்தது.

# ஒரு ரவுண்ட்-அப்


அதற்கு நான்தான் காண்டிராக்டர். முதலில் ஒப்புக் கொள்ளவே பயந்தேன். என் நண்பர்கள் கொடுத்த தைரியத்தினால், துணிந்து எடுத்து, அமர்க்களமாய் நடத்தி முடித்தேன். திருமணம் முடிந்ததும் கிடைத்த ஜனாதிபதியின் பாராட்டை என்னால் மறக்கவே முடியாது!'' என்கிறார் ராமசந்திர ஐயர்.

''ஒரு கல்யாணத்துக்கு எவ்வளவு வாங்குவீர்கள்?''

''ஆயிரம் பேர் மொத்தமாய்ச் சாப்பிடும், ஒரு மிடில் கிளாஸ் மேரேஜுக்கு 35,000 ரூபாய் வாங்குவேன். சம்பந்தப்பட்டவர்களின் தரத்துக்கு ஏற்ப, இது கூடவோ, குறையவோ செய்யும். ஆனால் ஒரு விஷயம் சார்! மெட்ராஸ் போல இல்லை;



° மணக்க மணக்க மல்லிகைப் பூ!



இங்கே ஐந்நூறு, ஆயிரம் ரூபாயிலேயே கல்யாணச் சத்திரம் கிடைத்து விடும். சத்திரமே கிடைக்கவில்லை என்றால் கூட, வாசலில் ஷாமியானா போட்டுக் கல்யாணத்தை முடித்து விடுவோம்'' என்கிறார் ராமசந்திர ஐயர்.

**யு. என். ஐ. கேண்டீன்:**

'பார்லிமெண்டுக்குப் போக முடியாவிட்டாலும் பரவாயில்லை; யு. என். ஐ. கேண்டீனை மிஸ் பண்ணிவிடாதே! முக்கியமான நியூஸ் ஏதாவது மிஸ்ஸாகி விடும்' என்று குறிப்பிடுவார்கள் சில தில்லி பத்திரிகையாளர்கள். அந்த அளவுக்குக் காலை செய்தித் தாள்களில் வெளியாகும் சூடான அரசியல் விஷயங்கள், கிசுகிசுக்கள் ஆகியவை முதல் நாளே அலசப்படும் முக்கிய இடம்தான் தில்லி யு. என். ஐ. கேண்டீன்.

பகல் பன்னிரண்டு வாக்கில்தான் கேண்டீன் களை கட்ட ஆரம்பிக்கும். இங்கே மற்ற ஓட்டல்கள் போல நாற்காலி மேஜைகள் எல்லாம் கிடையாது. ஒரே ஒரு ஆஸ்பெஸ்டாஸ் கூரை போட்ட ஷெட். அதிலே தோசை, உப்புமா, அடை, ஊத்தப்பம், சாதா வடை, மசால்வடை, சாம்பார் வடை, கேசரி, தயிர் சாதம், எலுமிச்சை சாதம் என்று பல வகை ஐட்டங்களும் கிடைக்கும். எதுவேண்டுமானாலும்விலைஒன்றரைரூபாய்!

இந்த யு. என். ஐ. கேண்டீனுக்கு வயது இருபத்திரண்டு. இதனை நடத்துபவர் சூரி என்று சுருக்கமாய் அழைக்கப்படும் சூரிய நாராயணன். பாலக்காட்டுத் தமிழர். அறுபது வயதைக் கடந்துவிட்ட போதிலும் மிகவும் சுறுசுறுப்பாய் இருக்கிறார். நாலு முழ வேட்டி, வெள்ளைச் சட்டை என்று சிம்பிளான தோற்றம். வீட்டைவிட்டுக் கிளம்பியவர், முதலில் சில பெரிய மனிதர்களின் வீடுகளில் சமையற்காரராய் வேலை பார்த்தார். மிலிடெரி மெஸ்களிலும், வேறு சில இடங்களிலும் வேலை பார்த்த அனுபவமும் உண்டு.

''இந்தக் கேண்டீன் யு. என். ஐ. யில் பணிபுரிபவர்களுக்காகத்தான் ஆரம்பிக்கப்பட்டது என்றாலும் அக்கம்பக்கத்திலுள்ள அத்தனை அரசாங்க, தனியார் நிறுவன ஊழியர்களும் இங்கே வந்து சாப்பிடுகிறார்கள். உத்தியோக ஓய்வு பெற்று ஊர் திரும்பி விட்டவர்கள் அவ்வப்போது தில்லிக்கு வர நேரிடும் போதெல்லாம் தவறாமல் இங்கே வந்து சாப்பிட்டு விட்டுத்தான் போவார்கள்!'' என்றார் சூரி.

**தமிழ்நாடு ஸ்டோர்ஸ்:**


கரோல் பாக் பகுதியில் போய்த் தமிழ்நாடு ஸ்டோர்ஸுக்கு வழி கேட்டால், சின்னக் குழந்தைகூட தாதரவென்று இழுத்துக் கொண்டு போய் அதன் வாசலில் விட்டு விடும். அத்தனை பிரபலமான கடை அது. 58—ஆம் வருடம் அப்போதைய திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவைகுண்டத்திலிருந்து, தில்



யு. என். ஐ. கேண்டீன் நாராயணன்



• யு. என். ஐ. கேண்டீன்.


இவன் தூக்கத்துல கூட மாலகம் மார்ஷலே எதிர்க்க தயாரா இருக் கான் போலிருக்கே ?
நீ ஒண்ணு! கொசுக் களை எதிர்க்க இவன் இப்படித்தான் தூங்குவான்!
கொசுக்களை 'ரன்' எடுக்கச் செய்கிறது டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள்
ஏய், சாம்ராஜ்! பேரர் வேஷத்துல போலீஸ் காரன் வந்துருக்கான் போலிருக்கே.
பயப்படாதே! கோவா கொசுக்கள் நம்ம முகத்தையும் மாத்திடுச்சு
தப்பிக்கும் கொசுக்களிடமிருந்து வழி டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
..போர்ட், பம்பாய்-400 023. ..போன்: 273831

லிக்குத் தன் மாமாவின் கடையில் வேலை செய்ய வந்தவர் பாக்கியராஜன். பின்னர் பிளாட்பாரத்தில் கடை பரப்பி, மளிகை சாமான்களும், கல்கியும், விகடனும் விற்றார். வீடுவீடாய்ப் போய்ப் பத்திரிகை, பேப்பர் போட்டார். கொஞ்சம் கொஞ்சமாய்ப் பணம் சேர்த்து, ரூபாய் மூவாயிரம் பகடி கொடுத்து, ஒரு கட்டடத்தின் சுவரில் ஓர் அடிக்குப் பத்தடி அளவில் ஓர் இடத்தைப் பிடித்து, அதிலே பொருள்களை அடுக்கி விட்டுத் தாம் பிளாட்பாரத்தில் இருந்தபடி வியாபாரம் செய்தார். தமிழர் எண்ணிக்கை கூடக் கூட, வியாபாரமும் அதிகமாயிற்று. 74—ஆம் வருடம் கடையின் விஸ்தரிப்பு நடந்தது. 'தமிழ்நாடு ஸ்டோர்ஸ்' என்று பெயரும் சூட்டப்பட்டது. இப்போது விசாலமான ஆயிரத்து எண்ணூறு சதுர அடியில் பரவி இருக்கிறது கடை!

இப்போது மளிகைச் சாமான்கள் வியாபாரம் செய்வதில்லை. எவர்சில்வர் பாத்திரங்களில் ஆரம்பித்து, மிக்ஸி, கிரைண்டர், வீடியோ, டெக் வரை அத்தனையும் தனித் தனிப் பிரிவுகளில் விற்கப்படுகின்றன. நன்றாகத் தெரிந்தவர்கள் என்றால், பொருள்களைத் தவணை முறையிலும் தருகிறார். இந்தக் கடைக்குத் தில்லியில் மட்டுமின்றி மீரட், பரிதாபாத், ஆக்ரா போன்ற இடங்களிலும் வாடிக்கையாளர் உண்டு!

## தமிழர்கள் நட்ட ஆலமரம்:

இந்திக்காரர்கள் வார்த்தைகளில் சொன்னால் மதராஸி ஸ்கூல்; தில்லி வாழ் தமிழர்களுக்குச் சுருக்கமாய் DTEA ஸ்கூல். அதாவது தில்லி தமிழ் எஜுகேஷனல் அசோசியேஷன் நடத்தும் பள்ளிக்கூடம். ஒன்றல்ல, இரண்டல்ல... மொத்தம் ஏழு பள்ளிக்கூடங்களை இன்று டி. டி. இ. ஏ. நடத்தி வருகிறது. புதிதாய்த் தமிழர்கள் குடியேறி வரும் பகுதிகளில் எல்லாம், 'பள்ளி திறக்க ஆவன செய்யுங்கள்!' என்று வேண்டுகோள்கள் வந்து கொண்டிருக்கின்றன.

கலைஞர் ஒரு லட்சம் தந்தாராம். அதன் பின் எத்தனையோ முறையீடுகள் செய்தும், தமிழ்நாடு அரசிடமிருந்து பைசாப் பெயரவில்லை. இதை மனவருத்தத்துடன் சொன்னார்கள் பள்ளி நிர்வாகிகள்.

பள்ளிக்கூட ஆசிரியர்கள் சம்பளத்தில் தொண்ணூறு சதவீதம் தில்லி நகர நிர்வாகத்தினால் தரப்பட்டாலும், மீதி பத்து சதம் மற்றும் பள்ளிக்கூடப் பராமரிப்புச் செலவு ஆகியவற்றுக்குக் கொஞ்சம் கஷ்டப்படத்தான் வேண்டியிருக்கிறது. ஒரு காலத்தில் கூடாரத் துணி நிழலில் வகுப்புகள் நடந்து கொண்டிருந்த நிலை மாறி இப்போது நல்ல கட்டடங்களில் வகுப்புகள் இயங்கி வருகின்றன.

தமிழர்கள் மட்டுமின்றி, மற்ற மொழிக்காரர்களும் கூட அதிக அளவில் தங்கள் பிள்ளைகளை இப்பள்ளிக்கூடங்களில் சேர்க்கிறார்கள். ஆனால் ஒரு கண்டிஷன். முதல் நான்கு வகுப்புகள் வரை தமிழ் மீடியம்



ராமசந்திர ஐயர்: கல்யாணமா? ரெடி!

கட்டாயம். ஐந்தாம் வகுப்பிலிருந்துதான் ஆங்கில மீடியம். இதனால், பலர் தம் பிள்ளைகளை நான்காம் வகுப்பு வரை வேறு பள்ளிகளில் படிக்க வைத்துவிட்டு, ஐந்தாம் வகுப்பிலிருந்து இங்கே படிக்க வைக்கிறார்கள். இது குறித்து ஒன்றும் செய்ய முடியவில்லை.

இப்பள்ளிக்கூடங்களில் உயர்ந்த அதிகாரிகளின் பிள்ளைகளும் படிக்கிறார்கள்; சாதாரண கூலி வேலைக்காரர்களின் பிள்ளைகளும் படிக்கிறார்கள். இன்றைக்கு ஏழு பள்ளிகளிலுமாகச் சேர்ந்து சுமார் எட்டாயிரம் பிள்ளைகள் படிக்கிறார்கள். 250 ஆசிரியர்கள் வேலை பார்க்கிறார்கள். மேலும் விரிவுபடுத்தத் தமிழ்நாடு அரசு ஆண்டு தோறும் நிதி உதவி செய்ய வேண்டும் என்பதுதான் இவர்களின் எதிர்பார்ப்பு.

## தமிழர்கள் தங்க......

"நீ ஒண்ணும் கவலைப்பட வேண்டாம். தில்லி ஸ்டேஷனில் இறங்கி ஓர் ஆட்டோ பிடித்து நேரா கரோல்பாக் ராமானுஜம் லாட்ஜுக்குப் போய் விடு; சாப்பாட்டுக்கும் தங்கறதுக்கும் பிரச்னையே இல்லை..." —தில்லியில் வேலை கிடைத்துச் செல்லும் இளைஞனுக்கு முப்பது வருடங்களுக்கு முன்னால் இப்படித்தான் சொல்லி அனுப்புவார்கள். அந்த அளவுக்குப் புகழ்பெற்றது கரோல்பாக் ராமானுஜம் லாட்ஜ்.

தேவகோட்டையைச் சேர்ந்த ராமானுஜம் அரசு வேலைக்காகத் தில்லி சென்ற போது தங்குவதற்குச் சரியான இடமில்லாமலும் நம் ஊர்ச் சாப்பாடு கிடைக்காததாலும் மிகவும் நொந்து போனார். அதற்காகவே லோதி ரோடில் இரண்டு மூன்று பிரம்மச்சாரிகளைச் சேர்த்துக் கொண்டு, சிறிய அளவில் லாட்ஜை ஆரம்பித்துப் பின்னர் கரோல் பாக்கில் கிட்டத்தட்ட நூறு



* தமிழ்நாடு ஸ்டோர்ஸ் — பாக்கியராஜன்.

பேர் தங்கக் கூடிய அளவுக்குக் கட்டடத்தைப் பிடித்து லாட்ஜை விரிவுபடுத்தினார். ராமானுஜம் காலமான பிறகு, அவரது மகன் ரமணி லாட்ஜ் பொறுப்பைக் கவனிக்கிறார்.

இன்று தில்லியில் பெரிய பதவிகளில் அமர்ந்திருக்கும் தமிழர்களில் பலர் முதலில் இந்த ராமானுஜம் லாட்ஜில் தங்கியவர்கள் தாம்!

## தில்லியில் காஞ்சிபுரம்:

தில்லியில், கல்யாணத்தையோ, அல்லது வேறு மங்கல நிகழ்ச்சிகளையோ வைத்துக் கொண்டு 'பட்டுப்புடைவை வாங்கக் காஞ்சிபுரம் போக வேண்டுமே' என்று யாரும் கவலைப்படுவதில்லை. காரணம், கோயமுத்தூர் ஸ்டோர்ஸ்தான். கடந்த 38 வருடங்களாகக் 'கோயம்புத்தூர் ஸ்டோர்ஸ்' நடத்திக் கொண்டு வரும் கிருஷ்ணமூர்த்தி சொல்கிறார்:

"நாங்கள் கோயம்புத்தூர் சாய்பாபா நகரைச் சேர்ந்தவங்க. முதல்ல தில்லியில் வந்து மொத்தத் துணி வியாபாரம் செய்தோம். வியாபாரம் 'பிக் அப்' ஆகவில்லை. பின்னர்தான் கரோல் பாக்கில் இந்தத் துணிக் கடையை ஆரம்பித்தோம். மாதத்திற்கொரு முறை காஞ்சிபுரம், தருமாவரம், ஆரணி போன்ற இடங்களுக்குச் சென்று நேரடியாகக் கொள்முதல் செய்கிறோம். முன்பெல்லாம் தென்னிந்தியர்கள்தான் கடைக்கு வருவார்கள். இப்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. தற்போது இங்கு வருபவர்களில் அறுபது சதவிகிதம் பேர் வடநாட்டவர்கள். அக்டோபர் மாதத்திலிருந்து எங்களுக்கு சீசன் ஆரம்பம். குளிர் காலம் முடியும் வரை, அதாவது பிப்ரவரி வரை, நல்ல விற்பனை. அப்பா, மகன், என்று பரம்பரையாக எங்களிடமே புடைவை வாங்கும் ஏராளமான கஸ்டமர்கள் இருக்கிறார்கள்."

## தில்லியில் மல்லி:

பலவிதமான வடஇந்தியப் பூவகைகள் தில்லியில் மலிவாய்க் கிடைத்தாலும் மல்லி, முல்லைக்கு ஈடாகுமோ? அவற்றைச் சுலபமாய்க் கிடைக்கச் செய்கிறவர், சிங்காரவேலு. இன்றைக்குத் தில்லியில் தமிழர் வீட்டுக் கல்யாணம் என்றால் சிங்காரவேலுவிடம்தான் பூவுக்கு ஆர்டர் தருவார்கள். சிங்காரவேலுவின் கடை மலைமந்திர் கோவில் அடிவாரத்தில் இருக்கிறது. கடையைப் பார்த்துக் கொள்பவர் தண்டபாணி. "முல்லை, மல்லிகை, கனகாம்பரம், செவ்வந்தி, அரளி, சம்பங்கி, மருக்கொழுந்து என்று அத்தனை பூக்களும் எங்களுக்குத் தினமும் பெங்களூரிலிருந்தும், சென்னையிலிருந்தும் விமானத்தில் வருகிறது." என்றார் தண்டபாணி.

## இன்னும் சில கொசுறுகள்:


•• தில்லியில் வைதிகச் சடங்குகளைப் பிறழாமல் செய்வதற்கு, 'ராம வைதீக ஸ்தாபனம்' என்ற ஒன்று இருக்கிறது. நம் வீட்டில் மங்கல நிகழ்ச்சியோ அல்லது சிராத்தம் போன்றவையோ எதுவானாலும் அவர்கள் அச்சடித்து வைத்திருக்கும் கார்டில் குறித்துக் கொடுத்து, ஆண்டுச் சந்தாவான நூற்றிருபது ரூபாயையும் கட்டிவிட்டால் போதும்; பிறகு அதுபற்றிக் கவலைப்படவே தேவையில்லை. குறிப்பிட்ட நாட்களில் அவர்களாகவே வந்து பூஜை அல்லது சடங்குகளை முறைப்படி செய்துவிடுகிறார்கள்!

•• தில்லியில் கிடைக்காத தமிழ்ப்பட வீடியோ காஸட்டுகளே கிடையாது. எப்படிப்பட்ட படங்களைத் தில்லித் தமிழர்கள் விரும்புகிறார்கள்? "புதுப்படங்கள் இருந்தாலும் பழைய படங்களின் காஸட்டுகளைத்தான் அதிகம் கேட்டு, வாங்குகிறார்கள். ஒரு வாரம் முழுவதும் வைத்துக் கொள்ள ஒரு காஸட்டுக்குப் பத்து ரூபாய் தான் கட்டணம்!" என்று சொல்கிறார் காஸட்டுகளைச் சப்ளை செய்யும் சண்முக சுந்தரம்.

•• கரோல்பாக்கில் கிடைக்காத தமிழ்நாட்டுக் காய்கறி வகைகளே கிடையாது. அத்தனை காய்கறிக் கடைகள். இருந்தாலும் சமயத்தில் தில்லியில் ஒரு வாழை இலை ஏழு ரூபாய் அளவுக்குக் கூட விற்குமாம்!



● கரோல்பாக் — காய்கறிக் கடைகள்.




# பிரமிக்கச் செய்யும் தொழில் மலர்!

**கல்கி, தமிழக முன்னேற்றத் தொழில் மலரைப் படித்துப் பார்த்து விட்டு INDUSTRIAL ECONOMIST ஆசிரியர் எஸ். விசுவநாதன் எழுதுகிறார்:**



'அரசியல்வாதிகள்தான் எல்லாச் சிறப்புக்களுக்கும் காரணம்' என்றும் 'அரசியல்வாதிகளால்தான் எல்லாமே பாழாகிறது' என்றும் இரு துருவங்களில் நின்று வாதாடுகிறவர்களுக்கு இடையில், கல்கி, தொழிலதிபர்கள் – தொழிலாளிகள் ஆகியவர்களை இரு கண்களெனப் போற்றி, அவர்களையும் மெய்யான தேச பக்தர்களாக எடுத்துக் காட்ட முன் வந்திருக்கிறது. இதையொட்டி பொருளாதார, தொழில் பிரச்னைகளில் கல்கி கவனம் செலுத்தி, 260 பக்கங்களைக் கொண்ட தமிழக முன்னேற்றத் தொழில் மலரையும் வெளியிட்டிருக்கிறது. பல வண்ணப்படங்களும் ஏராளமான புகைப் படங்களும் நிறைந்த மலரைப் புரட்டிப் பார்க்கும் போதே ஒரு பிரமிப்பு ஏற்படுவதோடு கல்கியின் பயனுள்ள சேவையைப் பாராட்டவும் தோன்றுகிறது.

கடந்த பல ஆண்டுகளாகவே தொழில், மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குத் தமிழக அரசு கொடுத்து வரும் முக்கியத்துவம் படிப்படியாகக் குறைந்து, சமுதாய நலத் திட்டங்களுக்கே அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. உதாரணமாக தமிழக அரசின் மொத்தச் செலவினப் சுமார் 2500 கோடி ரூபாய். இதில் தொழில் வளர்ச்சிக்குநேரடியாகச் செய்யப்படும்ஒதுக்கீடு 15 கோடிதான். சத்துணவு, சீருடை போன்ற சமுதாய நலத் திட்டங்களுக்கு 500 கோடிக்கு மேல் ஒதுக்கப்படுகிறது. 'சமுதாய நலத் திட்டங்கள் கூடாது' என்று நாம் சொல்லாவிட்டாலும் இவை நிரந்தரப் பரிகாரம் ஆகாது என்பதையும், தொழில் வளர்ச்சியும் வேலை வாய்ப்புப் பெருக்கமுமே நிரந்தரப் பலன் தரும் என்பதையும் மறக்கக் கூடாது.

தமிழக அரசு சில துறைகளில் செய்து வந்துள்ள அபரிமிதமான செலவுகள், போதிய நற்பலனைத் தரவில்லை என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். சென்ற இருபது ஆண்டுகளில் தமிழக அரசு விவசாய அபிவிருத்திக்கு 4000 கோடி ரூபாய் செலவிட்டும் விவசாய உற்பத்தி 63 லட்சம் டன்னிலிருந்து 66 லட்சம் டன் வரைதான் உயர்ந்துள்ளது. ஆனால் இதே கால அளவில் பஞ்சாபில் விளைச்சல் 38 லட்சம் டன்னிலிருந்து

160 இலட்சமாக உயர்ந்துள்ளது!

இப்படிப் பல விநோதங்களை நாம் காண்கின்ற நிலையில், கல்கி — தமிழக முன்னேற்றத் தொழில் மலர் போன்ற, சிந்தனையைத் தூண்டும், பிரத்தியட்ச நிலையைப் படம் பிடித்துக் காட்டும் மலர்களுக்கு மிகுந்த அவசியம் இருக்கிறது.

தினசரி வாழ்க்கையில் நம்மைத் தொடர்ந்து பாதிக்கும் விளம்பரம், டெலிவிஷன், சினிமா, உணவுப் பொருட்கள், அழகு சாதனங்கள், வீட்டுச் சாதனங்கள், ஜவுளி போன்ற துறைகள், அழகான முறையில் மட்டுமின்றி, ஆழமான விதத்திலும் அலசப்பட்டுள்ளன. "திணறுகிறது, திருப்பூர் பனியன் தொழில்" "விளம்பரங்கள் எரிச்சலடைவதற்கல்ல;" "திரை உலகின் தலைவலிகள்;" "தவணை முறை பெருத வியா? ஏமாற்று வேலையா?" போன்ற தலைப்புக்களை படிப்பதற்கு ஆர்வத்தை ஊட்டி விட, கட்டுரைகள் புதிய பல விஷயங்களை வாசகர் தெரிந்து கொள்ள உதவுகின்றன.

சமீப காலத்தில் மிகவும் வளர்ச்சி அடைந்துள்ள நிறுவனங்களான சக்தி குரூப், பாண்ட்ஸ் நிறுவனம் ஆகியவற்றின் தலைவர்களது பேட்டிகள் சுவையாகவும் கருத்துச் செறிவுடனும் அமைந்துள்ளன. மின் தட்டுப்பாடு, அரசின் மெத்தனப் போக்கு, லஞ்ச ஊழல் ஆகியவற்றின் இடையிலும் இவர்களால் எப்படி வளர முடிந்தது என்பதை விளக்கியுள்ளனர், என். மகாலிங்கம், வி. நாராயணன் ஆகியோர்.

விளம்பரத் துறையின் ஜாம்பவானாகக் கருதப்படும் ஆர். கே. சுவாமி, மற்றும் கோபுலு, விமலா, பிரேம் பரேக் போன்றவர்களின் அனுபவங்கள் இளைஞர்களுக்குப் பயன் தரத்தக்கவை.

'தமிழகம் ஏன் தேய்கிறது? அதைத் தலைநிமிரச் செய்வது எப்படி?' என்ற கேள்விகளுக்கு, ஓய்வு பெற்ற ஐ. ஏ. எஸ். அதிகாரி எம். ஜி. பாலசுப்பிரமணியன்; நிதி நிர்வாகத்தில் நிரம்ப அனுபவம் பெற்றுள்ள வி. கோபாலன், திரு. மார்க்கபந்து போன்றவர்கள் அருமையான யோசனைகளுடன் பதில்களை வழங்கியுள்ளனர்.

பல்வேறு துறைகளைப் பற்றிய சிறுகதைகளையும் நகைச்சுவை அம்சங்களையும் அங்கங்கே சேர்த்திருப்பது மலரின் பயனுள்ள அழுத்தமான பகுதிகளை அடிக்கோடிட்டுக் காட்டவே உதவுகின்றன.

தமிழகத்தில் மாநில அரசுத் துறை நிறுவனங்கள் பலவும் பொலிவிழந்து கிடக்க, மத்திய அரசுத்துறை நிறுவனங்கள் (ஒன்று மட்டும் நீங்கலாக) துரித வளர்ச்சி பெற்றுக் கணிசமான லாபமும் அடைந்துவருகின்றன. இதர மாநிலங்களில் உள்ள மத்திய அரசுத் துறை நிறுவனங்களிலிருந்து இந்த அம்சத்தில் மாறுபட்டும் எடுத்துக் காட்டாகவும் திகழ்கின்றன. இதுபற்றி அடுத்த ஆண்டு தொழில் மலரில் கல்கி விரிவாக ஆராய்ந்து எழுதுவது பயனுள்ள காரியமாயிருக்கும்.

# அதிக சக்தி, அதிக போஷாக்கு,

## அதிக சாக்கலேட் சுவை...



அருந்துங்கள்

## கேம்ப்கோ

# வின்னர்




இது ஒரு சுவை மிகுந்த மாறுபட்ட சாக்கலேட் பானம். அதிக சக்தியை அளிப்பதற்காக குளுக்கோஸ் நிறைந்தது. போஷாக்கினை அளித்திட வைட்டமின்கள் மற்றும் தாதுச் சத்துக்களைக் கொண்டது.

மேலும் குழந்தைகள் மிகவும் விரும்பிடும், இதுவரைக் கிடைத்திராத அதிக சாக்கலேட் சுவை.

அருந்திப் பாருங்கள். இதைவிடச் சிறந்ததொரு சுவை மற்றும் சக்திமிக்க சாக்கலேட் பானம் இல்லை என்பதைக் கண்டுகொள்வீர்கள்.

**இந்தியாவின் மிகப்பெரிய அதிநவீன ஆலை அளிப்பது.**

**கேம்ப்கோ லிமிடெட்**
மங்களூர்.

R K SWAMY/CL/5828

* ரஹ்மத்துல்லா, நெல்லை.

? இந்திய கிரிக்கெட் அணி ஷார்ஜா கோப்பையை வென்றது பற்றி...?

! கோப்பையா அது? இந்த முறை கிலு கிலுப்பை!

* நல்லான் இராமசாமி, திருச்சி.

? முன்னாள் ஜனாதிபதி ஜெப்பிவிட்ட அந்த நாற்பது கோடி கப்ஸா(?) என்ன ஆயிற்று?

! பூமராங் ஆகி விட்டது!

* கா. அப்துல் மஜீத், திருமயம்.

? கும்பகோணம் பெண்கள் கல்லூரி மாணவிகள் உல்லாசப் பயணம் சென்ற போது நடந்தவை பற்றி...?

! நடந்தவை கொடூரமானவை. அதற்குக் காரணமானவர்களைக் கடுமையாகத் தண்டிக்கத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் மெத்தனமாக இருப்பது அதை விடக் கொடூரமானது. இவர்களும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே! ஒன்றன் மீது ஒன்றாக, இப்படி அநீதிகள் நடக்கும் போது கும்பகோணம் மக்கள் ஏன் கைகட்டிக் கொண்டு நிற்கிறார்கள்? கர்நாடகாவில் இப்டூர் மக்களுக்கு ஏற்பட்ட எழுச்சி தமிழனுக்கு ஏன் உண்டாகவில்லை? அது கேவலம் அல்லவா?

* ஆர். வேலுமணி, கடலூரர்.

? நேரு சிலையையே வெடி வைத்துத் தகர்க்க முயற்சி செய்துள்ளார்களே? ஜனநாயக நாட்டில் நடக்கக் கூடிய சம்பவம் தானா இது?

! பஞ்சாபில், டார்ஜிலிங்கில் நடப்பவை ஜனநாயக நாட்டில் நடக்கக் கூடிய சம்பவங்களா என்ன? அங்கு போல் இங்கும் இளைஞர்கள் பலர், திசை தப்பிப் போக ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதன் அறிகுறியே இது. அரியலூர் பாலம் தகர்ப்புக்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து கொடைக்கானல் டீவி டவர், மற்றும் நேரு சிலைத் தகர்ப்பு முயற்சிகள் நடந்துள்ளன. காரணங்களை ஆராய்ந்து, இளைஞர்களுக்கு நியாயமான குறைகள் இருந்தால் நீக்கவும், அநியாயமான கோரிக்கைகள் இருந்தால் அவர்களுக்குப் புத்தி புகட்டவும் வேண்டும். அனைத்திலும் முக்கியமானது, இளைஞர்கள் வேலையில்லாமல் திண்டாட அனுமதிக்கக் கூடாது. திசை தப்பிப் போகப் பல காரணங்களுள் முக்கியமானது இதுவே.

## போலீஸை ஜெயலலிதா மிரட்டுகிறாரே?

* எல். மாறன், மேல்பட்டி.*

? முத்தரப்புக் கூட்டத்தின் மூலம் கூர்க்காலாந்து பிரச்னைக்கு முடிவு காணப்படும் சூழ்நிலை உள்ளதா?

! பிரச்னைக்குத் தீர்வு என்பது கையெழுத்தாகிற காகிதத்தில் இல்லை. அதனை அமுல்படுத்தும் மன உறுதியில் இருக்கிறது. இந்த மன உறுதி, இன்றைய பிரதமரிடம் குறைவாக இருப்பதுதான் பிரச்னைகள் தீராமல் வளர்ந்து கொண்டு போவதற்குக் காரணம். உதாரணம்: பஞ்சாப்.

* மு. மதிவாணன், அரூர்.

? கருணாநிதியைப் புகழ்வதன் மூலம் ஜானகி,எம். ஜி. ஆரையே மறந்து விட்டதாக ஜெயலலிதா கூறியிருக்கிறாரே?

! ஒருவரைச் சதா புகழ்வது, அல்லது சதா இகழ்வது என்பது அறிவுடைமையாகாது. புகழப்பட வேண்டிய காரியங்களுக்குப் புகழ்

• மிரட்டல்





• பூமராங்

• மார்தட்டல்



• மறந்தாரா ?



வதும் இகழ வேண்டியதற்கு இகழுவதும் தான் சரி. அதனால்தான் 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு' என்ற சொற்றொடரை உருவாக்கினார் அண்ணா.

*** க. தியாகராசன், நெய்வேலி.**

**? தண்டி யாத்திரையை நடத்திக் காட்டும் காங்கிரஸார், பஞ்சாபில் அமைதி திரும்பப் பாத யாத்திரை நடத்திக் காட்டினால் என்ன?**

! நகலாக விளங்குவது சுலபம். நகல் அசலாகி விட முடியாது — என்னதான் முயன்றாலும். மேலும் பஞ்சாப் பிரச்னைக்குத் தீர்வு, பாதயாத்திரையில் இல்லை. அதற்கு ஜனநாயக உணர்வு, மக்களின் மனங்களைப் புரிந்து கொள்கிற மனோதத்துவ அணுகுமுறை, சாணக்கியம், மெய்யான அயல் நாட்டு எதிரியை இனம் கண்டு கொண்டு அவனைச் சமாளிக்கிற ஆற்றல், கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் நாணயம், கொஞ்சம் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை முதலிய எல்லாம் வேண்டும்.

*** எஸ். பிரியதர்சினி, பாளையங்கோட்டை.**

**? 59—வது அரசியல் சட்டத் திருத்தத்துக்கு வக்கீல்கள் எதிர்ப்புத் தெரிவிக்காததற்கு முன்னாள் நீதிபதி சின்னப்ப ரெட்டி அதிர்ச்சி தெரிவித்திருக்கிறாரே?**

! வக்கீல்கள், கிரன் பேடிக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதில் பிஸியாக இருக்கிறார்கள். இதற்கு ஏது நேரம்? 59வது திருத்தமா முக்கியம்? கிரன் பேடியை ஒழித்துக் கட்டுவதல்லவா முக்கியம்!

*** பி. வி. ஸ்ரீனிவாசன், பின்னத்தூர்.**

**? சதியை ஆதரிக்கும் பூரி சங்கராச்சாரியாருடன் வாதம் புரியச் சென்ற சுவாமி அக்னிவேஷ் கைது செய்யப்பட்டுள்ளாரே?**

! பூரியாரை இவ் விஷயத்தில் ஆதரிக்காதவர்கள் கூட ஒரு குருட்டுப் பக்தியால் திரண்டு வரக் கூடும். கருத்து மோதல்களை அனுமதிப்போம்; கைகலப்பைத் தவிர்த்து விடுவோம் என்று அரசு கருதியிருக்கலாம். இது எவ்வாறாயினும், தாம் எந்த ஹிந்து மதத்துக்குப் பாதுகாவலராக இருக்கிறாரோ அந்த ஹிந்து தர்மத்துக்கே பெரும் தீமை செய்து வருவதைப் பூரியார் எவ்வளவு சீக்கிரம் உணர்கிறாரோ அவ்வளவுக்கு நல்லது.

*** எல். ஆர். சுந்தரராஜன், சென்னை.**

**? பொதுக்கூட்டத்தில், 'நாங்கள் ஆட்சிக்கு வருவோம்; போலீசை ஒரு கைபார்ப்போம்' என்று ஜெயலலிதா மிரட்டுகிறாரே?**

! ஜெயலலிதாவின் பிரசித்தமான ஆணவப் போக்கு இந்தப் பேச்சிலும் பிரதிபலிப்பது உண்மையே என்றாலும் போலீஸார் அன்று நடந்து கொண்ட விதம், அதிகாரிகளின் ஆட்சி அதிக்கிரம ஆட்சியாக மாற அதிக காலம் ஆகாது என்பதை நிரூபிப்பதாகவே உள்ளது. ஜெயலலிதாவுக்குப் பாதுகாப்புத் தரப்படவில்லை என்றாலும் போலீஸ் மீது பழி சுமத்தப்படும் என்பதையும் மறுக்க இயலாது. எனினும், மேடை நோக்கி நகர்ந்த கூட்டத்தைக் கட்டுப்படுத்த வேறு மார்க்கங்களைக் கையாண்டிருக்க முடியும். தடியடிப் பிரயோகங்கள், திரித்துப் பேசப்பட்டு ஜெயலலிதாவுக்கு அனுதாப ஆதரவு பெருகவே வழி வகுக்கும்.

*** பாக்கியமுத்து, திருச்சி — 20.**

**? பிரதமரைத் தட்டிக் கேட்கும் அதிகாரம் யாருக்கு உண்டு?**

! சரியாப் போச்சு! வோட்டுப் போடுகிற நமக்குத்தானய்யா!

*** டி. ஜே. பிரிட்டோ, திருத்துறைப்பூண்டி.**

**? மக்கள் இயக்கம் துவக்கியுள்ள வி. எஸ். மீது முரசொலி சாட்டியுள்ள அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக்களைப் படித்தீரா?**

! தூய்மை பற்றிப் பேசத் தகுதி வேண்டும் என்பது உண்மைதான். ஆனால் கண்ணாடி வீட்டுக்குள்ளிருந்தபடி கல்லெறியக் கூடாது என்பதும் மெய்தான். கடந்த காலத்தை மறக்கவே கூடாது எனில் இன்றுள்ள எந்தக் கட்சியைச் சேர்ந்த எந்தத் தலைவருமே ஒரு வோட்டுக் கூடப் பெறத் தகுதியற்றவராவார். ஆனால் ஜனநாயகம் என்பது தண்டிப்பது மட்டுமல்ல; மன்னித்து மறப்பதையும் அடிப்படையாகக் கொண்டது. எனவே, இன்று தேர்தலில் போட்டியிட விரும்பும் கட்சிகள், 'வி. எஸ். சொல்வது போல் நாங்கள் தூய்மையானவர்களை வேட்பாளர்களாக நிறுத்துகிறோம்' என்று தைரியமாகக் கூற முன்வர வேண்டுமேயொழிய, வி. எஸ். ஸையே திரும்பக் குறை கூறிக் கொண்டிருப்பதால், தங்கள் மனம் இன்னும் தூய்மை அடையவில்லை என்பதை நிரூபித்துக் கொண்டவர்களாகி விடுவார்கள்.

*** எம். குணசேகரன், வேலாயுதம்பாளையம்.**

**? கண்ணியத்தையும் கட்டுப்பாட்டையும் முறையாகக் கடைப்பிடித்து நடக்கிற கட்சி காங்கிரஸ்தான் என்று ராஜீவ் மார் தட்டுகிறாரே?**

! மேற்கு வங்க சட்ட சபையில் இ. காங்கிரஸின் சந்தி சிரிக்கும் நடத்தை சாட்சி சொல்கிறதே!

* ரூ. 15 பரிசு பெறுபவர்:

எல். மாறன்,
வன்னியர் வீதி,
மேல்பட்டி, — 635 805 (வ. ஆ.)

தளபதி திடமதி:

# குழாய்களில் குடியிருக்கும் குடும்பங்கள்!

"நாங்கள் கள்ள நோட்டு அடிப்பதாக எதிர்க்கட்சியினர் பொய்ப் பிரசாரம் செய்கிறார்கள்! நாங்கள் நல்ல நோட்டு களாகத்தான் 'அடிப்போம்' என்றும் கள்ள நோட்டுக்களைக் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டோம் என்றும் உறுதியுடனும் பெருமிதத்துடனும் தெரிவித்துக் கொள்கிறேன்!"

— எஸ். வி. தேவநாதன், சிதம்பரம்.



திடமதி: இந்தியா பறக்க விட்டிருக்கும் செயற்கைக்கோள் பூமிக்கடியிலுள்ள நீர், உலோகம் போன்றவற்றைக் கூடப் படமெடுக்குமாமே?

தொண்டர்: அதனால் என்ன? அதுக்கு நீங்க ஏன் கவலையா இருக்கீங்க?

திடமதி: நம்ம கட்சித் தலைவர் கோடிக் கணக்கில் பதுக்கி வைத்துள்ள கறுப்புப் பணத்தையும் அதே மாதிரி அது கண்டுபிடிச்சுப் படம் பிடிச் சுட்டா என்ன பண்ணறதுன்னு தான்!

—வி. கோபாலகிருஷ்ணன், பெங்களூர்.



"எம். ஜி. ஆர். ஆட்சியைக் கொண்டு வருவேன் என்கிறார் எதிர் அணித் தலைவர்; காமராஜ் ஆட்சியைக் கொண்டு வருவேன் என்கிறார் இன்னொரு தலைவர்; அண்ணா ஆட்சியைக் கொண்டு வருவேன் என்கிறார் மற்றொரு தலைவர்; இதெல்லாம் என்ன பிரமாதம்? எங்களைத் தேர்ந்தெடுங்கள், ஆங்கிலேயர் ஆட்சியையே கொண்டு வந்து காட்டுகிறோம்!"

— சொ. சேகர், கீழ்பென்னாத்தூர்.



தொண்டர்: 'வீராணம் திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றியிருக்கலாமே'ன்னு எதிர்க்கட்சியிலே குற்றம் சுமத்துறாங்க, தலைவரே!

திடமதி: அதை எங்கிட்ட விடு, நான் பதில் சொல்லிக்கறேன்!

தொண்டர்: என்ன பேசப் போறீங்க?

திடமதி: 'அப்படி நாங்கள் தொடர்ந்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றியிருந்தால் அந்தக் குழாய்களில் குடியிருக்கும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நடுத்தெருவுக்கு வந்திருக்குமே, அதை எண்ணிப் பார்க்க வேண்டாமா'ன்னு கேட்டுத் திணற அடிச்சுடுவேன்!

— க. அன்பழகன், சேத்தூர்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: டி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/—.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.



Liril
THE FRESHNESS SOAP
ளித்தெழுவீர் லிரில் குதூகலப் புது மலர்ச்சியிலே
லிரில்
புத்துணர்வு சோப்
மனம் குளிரும் எலுமிச்சைப் புத்துணர்ச்சி.
ஹஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka